ஸ்ரீ:.

திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய

# பெரிய திருமடல்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

முன்னோருரைகளைத்தழுவி

எளிய நடையில் தெளிய எழுதிய

திவ்யார்த்த தீபிகையென்னும் உரையுடன்,

சென்னை, M.R. கோவிந்தஸாமி நாயுடுவால்,

மதராஸ் மாடல் அச்சுக்கூடத்தில்,

அச்சிடுவிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

விபவஹு வைகாசிமீ

1928.

இதன் விலை ரூ. 1.] [தபால் செலவு வேறு.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

M. R. கோவிந்தஸாமி நாயுடு,

"திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸ்,

32, பந்தர் தெரு, G.T., மதராஸ்.

ஸ்ரீ:.



திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

# பெரிய திருமடல்.

பெரிய திருமடல் என்னும் இத்திவ்ய ப்ரபந்தமானது இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்து அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களுள் பிரதானரான நம்மாழ்வாரருளிச்செய்த சதுர்வேத ஸாரமான நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்ய ப்ரபந்தங்களுள் ஒன்றும். [பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம்—என்பன ஆறு திவ்ய ப்ரபந்தங்களாம்.] ஸ்ரீமந்நாத முனிகள் வகுத்தருளின அடைவில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் பத்தாவது பிரபந்தமாக அமைந்தது இது.

ஆழ்வார் திருமடலருளிச் செய்யவேண்டிய காரணத்தையும், மடலின் ஸ்வரூபம் முதலியவற்றையும், திருமடற்பிரபந்தம் ஓரே பாட்டு என்பதற்கு உள்ள உபபத்திகளையும், ப்ராஸங்கிகமாக மற்றும் பல விஷயங்களையும் சிறிய திருமடல் முன்னுரையில் விரித்துரைத்தோம்; அங்கே கண்டு கொள்க.

பரகாலநாயகி, கீழை சிறிய திருமடலில்—எம்பெருமான் பதறி ஓடிவந்து மேல்விழுந்து தன்னைப் புணர்வதற்காக மடலூர்வேனென்று சொன்னவிடத்திலும் அவ்வெம்பெருமான் வந்து தோன்றிலனாகவே மடலெடுத்தே தீர்வதென்கிற தனது திண்ணிய துணிவை மீண்டும் விரிவாகக்கூறுகின்றாள் இப்பெரிய திருமடலில். சிறிய அஸ்த்ரம் விட்டதில் காரியம் கைகூடவில்லை யென்று பார்த்துப் பெரிய அஸ்த்ரம் விடுகிறாள் போலும்.

கீழே கழிந்த திருமடல் நூற்றைம்பத்தைந்து அடிகளினாலமைந்த கலி வெண்பா வாதலால் அது சிறிய திருமடலென்றும், இஃது இருநூற்றுத் தொண்ணூற்றே டிகளினாலமைந்த கலி வெண்பா வாதலால் பெரிய திருமடலென்றும் வ்யவஹரிக்கலாயிற்று.

நாயகனும் நாயகியும் தெய்வ வசத்தால் ஏகாந்தமான ஓரிடத்திலே ஸந்தித்துப் பரஸ்பரம் காதல் கொண்டு கொடுப்பாரு மடுப்பாருமின்றித் தமது விருப்பத்தின்படி களவுப்புணர்ச்சி புணர்ந்து பிரிந்தபின்பு ஆற்றாமைமிஞ்சி அதனால் நாணம் முதலியன அழிந்து இவர்களுள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் ஊரையும் பேரையும் தமது ஊரையும் பேரையும் ஒரு படத்திலெழுதி அந்தச் சித்திர படத்தைக் கையிற்கொண்டு பனைமடலினால் ஒரு குதிரையுருச்செய்வித்து அதன்மீது தாம் ஏறி அதனைப் பிறரால் இழுப்பித்து வீதிவழியேபலருங்கூடும் பொதுவிடங்களிலெல்லாம் செல்லுபவராவர்; இது, மடலூர்தலெனவும் மடன்மாவேறுதலெனவும் படும். இதற்குப் பயன்—இவரது இக்கடுந்தொழிலைக்கண்டு அதனால் இவரது பெருவேட்கையை யுணர்ந்து நாயகனோ நாயகியோ தானேஓடிவந்து கூடுதல், உறவினராயினும் அரசனாயினும் வெளிப்படையாக மணஞ்செய்விக்கப் பெறுதல், இல்லையாகில் முடிந்து பிழைத்தல் ஏதேனுமாம். இம்மடற்றிறம் ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது. அளவுக்கு விஞ்சின ஆசையின் மிகுதியால் மகளிர்க்கும் சிறுபான்மை வரும். அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே

உரியதென்றும், மடலூர்வேனென்று சொல்லுதல் இருபாலர்க்கு முரியதென்றும் உணர்க.

ஆழ்வாருடைய திருமடல்களிரண்டும்—'மடலூர்வேன், மடலூர்வேன்' என்று பகட்டினவளவே யன்றி மெய்யே மடலூர்ந்தமையில்லை. சிறியதிருமடலில் வாஸவதத்தையை எடுத்துக்காட்டினதுபோல் இப்பெரிய திருமடலில் ஸீதை, வேகவதி, உலூபிகை, உஷை, பார்வதி என்னும் மாதர்களை மடலூர்ந்தவர்களாக ஆழ்வார் எடுத்துக் காட்டியிருப்பது கொண்டு 'அந்த மாதர்கள் மடலூர்ந்தார்கள்' என்று எண்ணவேண்டா ; பின்னை அவர்களை இவர்எடுத்துக்காட்டினது ஏதுக்காகவென்னில் ; கேண்மின் ;—'பேறு பெறுவதற்கு ஸ்வப்ரவ்ருத்தி யொன்றுங்கூடாது ; காஷ்ட லோஷ்டாதிகளான அசேதநம் போலே வாயடைத்துக் கிடக்கவேண்டும்; எம்பெருமானுக்குத் திருவுள்ளமானபோது தானே பேறு பெறுவிப்பன்' என்றுகொண்டிருப்பார்களின் கொள்கையைத்தள்ளி 'என்னை விரைவில் சேர்த்துக்கொள், என்னை விரைவில் சேர்த்துக்கொள்' என்று பதறுகை வேண்டுமென்பதை ஸ்தாபிக்க நினைத்த ஆழ்வார், ஸாமாந்யமாக உலகத்திலுள்ள பெண்கள் தங்கள் கணவனோடு சேர்வதற்கு எவ்வாறு பதறுகின்றார்களோ அவ்வாறாகவேதான் பகவத் காமுகர்களும் பகவானோடு சேர்வதற்குப் பதறவேண்டுமென்று நிரூபிக்கவேண்டி, 'அப்படி பதறின பேர்களுண்டு; தங்கள் இஷ்ட விஷயத்தில் காதல் கிளர்ந்து நிர்ப்பந்தரூபமாகக் கலந்து மகிழ்ந்த அக்காதலிகளை யாரும் பழித்திலர் ; அவர்களுடைய காமத்தை மஹர்ஷிகள் கொண்டாடியே யிருக்கின்றனர்' என்பதற்காகச் சில பெண்ணரசிகளை எடுத்துக்காட்டினராழ்வார் என்றுணர்க.

ஆகவே, ஆழ்வாருடைய திருவுள்ளத்தால், மடலூர்வதாவது பேற்றுக்குப்பதறுவதைக் காட்டுகிறவளவேயன்றி மற்றபடி ஹேயமான க்ரியாகலாபமல்லவென்பதும் உய்த்துணரத் தக்கது. காமத்தின் அதிசயத்தைக் காட்டும் வகையில் மடலூர்தல் என்னுஞ் சொல்லைத் தமிழர் உபயோகித்திருப்பதால், ஹேயமான காமத்தின் ஸ்தாநத்திலே பகவத் காமத்தை ஏற்றுக்கொண்ட ஆழ்வார்கள் தமது காமாதிசயத்தை அந்த மடல்சப்தத்தையிட்டே வெளியிட்டார்கள் என்னுமிதுவே ஸாரம். பகவத்காமம் அளவற்றிருந்தாலும் பதறலாமோ என்கிற சங்கைக்குப் பரிஹாரம் சிறிய திருமடல் முன்னுரையில் விரிய வரைந்தோம்.

சிறிய திருமடல் போலவே இப்பெரிய திருமடலும் ஸ்த்ரீத்வ பாவனையாலே அருளிச் செய்வதாம்; "மானோக்கினன்ன நடையா ரலரேச ஆடவர்மேல், மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும், தென்னுரையிற் கேட்டறிவதுண்டதனையாம் தெளியோம்"—"என்னுடைய நெஞ்சுமறிவு மினவளையும் பொன்னியலு மேகலையுமாங் கொழியப் போந்தேற்கு"—"என்னுடைய பெண்மையு மென்னலனு மென்முலையும்.....முன்னிருந்து மூக்கின்று மூவாமைக்காப்பதோர் மன்னுமருந் தறிவீரில்லையே" இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளில் ஸ்த்ரீஸமாதி வெளிப்படுமாறு காண்க. ... ... *

---

# பெரிய திருமடலின் தனியன்.

(பிள்ளை திருநறையூரரையர் அருளிச் செய்தது.)

நேரிசை வெண்பா.

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெய்யும்
நன்னுதலீர் நம்பி நறையூரர்—மன்னுலகில்
என்னிலைமை கண்டு மிரங்காரே யாமாகில்
மன்னு மடலூர்வன் வந்து

| | | | |
|---|---|---|---|
| நல் நுதலீர் | அழகிய நெற்றியையுடைய மாதர்காள்!, | நம்பி | கல்யாண குணபரிபூர்ணனுமான எம்பெருமான் |
| பொன் உலகில் வானவரும் | பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும் | மன் உலகில் | ப்ரவாஹதோ நித்யமான இந்நிலத்தில் |
| பூ மகளும் | தாமரைப்பூவிற் பிறந்த பிராட்டியும் | என் நிலைமை கண்டும் | எனது அவஸ்தையைக் கடாக்ஷித்தும் |
| போற்றி செய்யும் | தோத்திரம் செய்யப்பெற்ற | இரங்கார் ஆம் ஆகில் | க்ருபை செய்தருளாவிடில் |
| நறையூரர் | திருநறையூரில் எழுந்தருளியிருப்பவனும் | வந்து | திருப்பதிகள் தோறும் வந்து |
| | | மன்னு மடல் ஊர்வன் | நித்தியம் மடலூர்ந்துகொண்டேயிருப்பேன். |

* * *—இது ஆழ்வாருடைய பாவனையாகவே பேசின பாசுரம். ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லி வணங்குதல், அவர் அவதரித்த ஊரைச் சொல்லிப் புகழ்தல், அவர் அருளிய ஸ்ரீஸூக்தியின் பெருமையையோ உட்கருத்தையோ எடுத்துரைத்தல் ஆகிய இவை பெரும்பாலும் தனியன்களில் வரும் இத்தனியன் அங்ஙனல்லாமல் ஆழ்வார் பிரபந்தம் பேசுகிற பாவனையாகவே அமைந்துளதென்பதும், இதனால் இத்தனியன் அருளிச்செய்த ஆசிரியர்க்கு ஆழ்வாருடைய த்யாநம் முற்றி பாவநாப்ரகர்ஷத்தால் தந்மயத்வம் உண்டாயிற்றென்பதும் அறியத்தக்கன.

**நன்னுதலீர்!** என்கிற ஸம்போதநம்—ஸ்த்ரீபாவமடைந்த ஆழ்வார் [பரகால நாயகி] தோழிகளை நோக்கி விளிப்பதாகக் கொள்க. பரமபதவாஸிகளான நித்யஸூரிகளும் பெரிய பிராட்டியாரும் வந்து மங்களாசாஸநம் செய்யப்பெற்ற திருநறையூரெம்பெருமான் என் ஆற்றாமையைக் கண்டும் ஓடிவந்து கலவி செய்தருளாவிடில் மடலூர்வது தவிரமாட்டேனென்கை. பொன்னுலகு என்று ஸ்வர்க்க லோகத்தைச் சொல்லவுமாம். **பூமகனும்** என்றும் பாடமுண்டு; பூவிற் பிறந்த பிரமனும் என்றபடி.

**போற்றி**—இகரவிகுதிபெற்ற தொழிற்பெயர்; இனி, **போற்றி செய்யும்** என்பதற்கு—போற்றி என்ற சொல்லைக்கொண்டு வாழ்த்தப்பெற்ற எனினுமாம்: இப்பொருளில் **போற்றி** என்பது **போற்றிய** என்னும் வியங்கோளின் அநுகரணம்; ஈறு தொக்கு வந்ததென்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

# இத்திருமடலின் தாத்பர்யஸங்க்ரஹம்.

[இத்திருமடல் மற்றப் பிரபந்தங்களைப்போல நாலடிகொண்ட பாட்டுடைத்தல்லாமல் மிக நீண்டதோர் பிரபந்தமாய் முழுதும் ஒரே வாக்கியார்த்தமா யிருப்பதனால், கண்டம் கண்டமாக நாம் உரையிட்டுக்கொண்டு போவதில் ஆங்காங்கு பதப்பொருள்கள் ஏற்பட்டாலும் அகண்ட வாக்கியார்த்தம் நெஞ்சிற் பதிவது அரிதாயிருக்கு மாகையாலே அக்குறை நீங்க, மூலத்தைப் பெரும்பான்மை தழுவி இப்பிரபந்தத்தின் ஸாரமான தாத்பர்யம் இங்கே எழுதப்படுகின்றது—கற்போர் தம் மனம் தெளிய.]

எம்பெருமான் திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியிலே சயனித்துக்கொண்டு ஸ்ரீ பூமிப்பிராட்டி திருவடி வருடப்பெற்று ஜகத்ஸ்ருஷ்டிக்காக யோகநித்திரை செய்தருளுமளவில், தனது திருநாபிக்கமலத்திலே நான்முகக் கடவுளை ஸ்ருஷ்டிக்க, அப்பிரமன் நான்கு வேதங்களை வெளிப்படுத்தினான். அந்த வேதங்களில்—தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நான்கு புருஷார்த்தங்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மோக்ஷமென்பது சரீரம் முடிந்த பிறகு கிடைக்கக்கூடிய புருஷார்த்தமென்று ஓதப்பட்டுள்ளது. அப்புருஷார்த்தத்தைப் பெறவிரும்புமவர்கள் கனிகளையும் இலைகளையும் தின்று தாபஸர்களாய்க் குடிசைகளில் வஸித்தும் ஸூர்ய கிரணங்களைப் பக்ஷித்தும் நீர்நிலங்களில் மூழ்கிக்கிடந்தும் இப்படியே பலபல பாடுகள் பட்டு முடிவில் இவ்வுடலையொழித்து மோக்ஷத்துக்குச் சென்றார்களென்று ஏடுகளில் எழுதிவைத்திருப்பதைப் படிக்குமித்தனையேயன்றி, 'இன்னான் இன்ன காலத்தில் மோக்ஷமடைய நான் கண்டேன்' என்று மெய்யே கண்டறிந்தார் சொல்லக் கேட்டதேயில்லை. ஆகையாலே மோக்ஷமென்னும் புருஷார்த்தமே பொய்யானது. அது மெய்யே உண்டென்னில்; 'ஸூர்ய மண்டலத்தைப் பிளந்துகொண்டு ஸூக்ஷ்மமான ரந்த்ரத்தின் வழியே போய் மோக்ஷத்தைப் பெற்று வந்தேன்' என்று வந்தாரொருவரைக் காட்டிச் சொல்லுங்கள்: அங்ஙனே காட்டமாட்டாமல் 'அவன் மோக்ஷமடைந்தான், இவன் மோக்ஷமடைந்தான்' என்று பழம்பாட்டையே பாடிக்கொண்டிருக்கிற அவிவேகிகளுக்கு நாம் என்ன சொல்வது!

அந்த மோக்ஷ வார்த்தையை விட்டுத் தொலையுங்கள். மற்ற தர்மார்த்த காமமென்ற மூன்று புருஷார்த்தங்களுள் முதலதான தர்மத்தை அநுஷ்டித்த மஹான்கள்—தேவலோகத்திற் சென்று தேவர்களால் கொண்டாடப்பெற்றுச் சீரிய சிங்காசனத்திலே யிருந்துகொண்டு, ஆங்கு அப்ஸரஸ்ஸ்த்ரீகள் சாமரம் வீசிக் கொண்டே அருகே நின்று புன்முறுவல் செய்ய அதனை அநுபவித்தும், அவர்களது கடாக்ஷ வீக்ஷணங்களைப் பெற்று மகிழ்ந்தும், அங்கேயுள்ள அழகிய கற்பகச்சோலைகளிலே அந்த மாதர்களுடனே கூடி விளையாடியும், அலங்காரங்களாற் சிறந்த அழகிய மண்டபத்தில் அம்மாதர்கள் வீணை வாசிக்கக்கேட்டு ஆநந்தித்தும், சிறந்த மாடமாளிகைகளில் அம்மாதர்கள் ஆச்சரியமாக விரித்த படுக்கையின்மேல் படுத்துக்கொண்டு இனிய தென்றற்காற்று வீசப்பெற்று அழகிற் சிறந்த அம்மாதர்களின் ஸம்ச்லேஷத்தைப் பெற்றும் இப்படியாகச் சில போகங்களை அநுபவித்து மகிழ்வர்கள்; இது வாய்த்து தர்ம புருஷார்த்தத்தாற் பெறும் பேறு.

இரண்டவதான அர்த்த புருஷார்த்தத்தின் பலனும் இப்படிப் பட்டதேயாம். (ஏனென்றால், அர்த்தமுள்ளவர்களே தர்மமநுஷ்டிப்பவர்களாதலால் தர்மத்தின் பலனாகச் சொல்லப்பட்டது தானே அர்த்தத்திற்கும் பரம்பரயா பலனாகத் தேறக்கடவது. ஆக, தர்மம் அர்த்தம் என்ற இரண்டு புருஷார்த்தங்களாலும் (கீழ் விவரித்தபடி) காமபுருஷார்த்தமே பலனாகப் பெறப்படுதலால் காமமே ப்ரதான சேஷியான புருஷார்த்தமென்றும் அறம் பொருள்கள் அக்காமத்திற்கு சேஷபூதமான புருஷார்த்தங்களென்றும் கொண்டு காமத்தையே நாம் கடைப்பிடித்தோம். அது தன்னில், ஆபாஸமான காமத்தை யொழித்து ஸ்திரமாயும் ஸ்வரூபாநுரூபமாயுமுள்ள பகவத் காமத்தைப் பற்றினோம். அது கை புகுவதற்காக இப்போது நாம் மடலூரத் துணிந்தோம். 'நாயகனை நோக்கி நாயகியானவள் மடலூரத் தகாது' என்று தமிழர் சொல்லக் கேட்டிருக்கிறோமாகிலும் நாம் இவ்விஷயத்தில் தமிழர்களின் மரியாதையை உதறித்தள்ளுவோமத்தனை; 'ஸ்த்ரீகளுக்கு மடலூருகையே புருஷார்த்தம்' என்று உபபாதிக்கிற ஸ்ரீராமாயணாதிகள் ஸம்ஸ்க்ருத பாஷையில் உள்ளனவாகையால் நாம் அவ்வட நெறியையே பேணி மடலூரக் கடவோம்.

என்னைப்போலே காம புருஷார்த்தத்தை விரும்பாதவர்கள் (எப்படிப்பட்டவர்களென்றால்,) சந்தநத்தின் தன்மையை அறியாத

வர்கள்; குழலோசையிலே ஈடுபடாதவர்கள்; காளைகளின் கழுத்திலே மணி ஒலிக்க அவ்வொலி கேட்டுச் சுருண்டு போகமாட்டாதவர்கள்; பனைமரத்தின்மீது வாயலகு கோத்திருக்கின்ற அன்றிற் பறவையின் ஆர்த்த நாதத்தைக் கேட்டு உருகி யிரங்காதவர்கள்; நாயகனை யொழியவும் நிலாவிலே படுக்க வல்லவர்கள்; மன்மதன் தனது புஷ்பபாணங்களைத் தொடுத்துப் பிரயோகிக்கவும் மடலூரப் புறப்படாமல் சலியாதே யிருப்பவர்கள்; தனிக் கிடையிலே தென்றல் வந்து வீசவும் தீக்கதுவினாற் போலே வருந்துதலின்றியே பரம ஸுகமாக உறங்கவல்ல அரஸிக புஞ்ஜங்கள் பின்னையும் ஒரு சுற்றுத் தடிக்கட்டும்; நாயக விரஹத்துக்கு வாடாதே வதங்காதே கிடந்து மேன்மேலும் செல்வங்களை அநுபவிக்கட்டும். அப்படிப் பட்ட அரஸிக ஸ்த்ரீகளைப்பற்றி நமக்குக் கவலையில்லை

நாயகனைப்பிரிந்து தரித்திருக்கமாட்டாதே மடலூருமாபோலே புறப்பட்டுப் பின் சென்று மகிழ்ந்த மஹாநுபாவைகளான மாதர்களில் சிலரைச் சொல்லுகிறேன், கேளுங்கள். தசரத சக்ரவர்த்தியின் வார்த்தையை ஆதரித்துத் திருவபிஷேகத்தை யொழிந்து ராஜ்யத்தை உபேக்ஷித்து மிகக் கொடிய காட்டிலே இராமபிரான் எழுந்தருள ஸீதாபிராட்டியும்கூட எழுந்தருளவில்லையா?. அழகிற் சிறந்த வேகவதி யென்பாளொரு கன்னிகை தான் தனது காதலனைக் காணவொண்ணாதபடி தமையன் தடுக்கச் செய்தேயும் அதனை லக்ஷ்யம் பண்ணாமல் பதறிச்சென்று போர்க்களத்திலே போய் நாயகனைப் பற்றிப் பிடித்து நகரத்திலே கொணர்ந்து புணர்ந்தாளன்றோ. உலூபிகை என்கிற நாக கன்னிகை அர்ஜுநனைக் கண்டு காமுற்றுத் தனது நகரத்திற்கு அவனை யழைத்துக்கொண்டு சென்று அநுபவித்து மகிழவில்லையா?; மஹாபாரதத்திலுள்ள இக் கதையை நீங்கள் கேட்டதில்லையா? இன்னமும், பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷை யென்பவள் சித்ரலேகை யென்னும் தன் தோழி மூலமாக அநிருத்தாழ்வானை வரவழைத்துக்கொண்டு ரமிக்க வில்லையா? உங்களுக்கு நான் எத்தனை திருஷ்டாந்தங் காட்டுவேன்? பார்வதியானவள் * ஊன்வாட வுண்ணாது உயிர் காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து தான் வாட வாடத் தவஞ் செய்து பரமசிவனைப் பெற்று மகிழ்ந்தாளென்கிற கதை உங்களுக்குத் தெரியாதா? இவ்வளவும் நான் சுருங்கச் சொன்னேன்; விஸ்தரித்துச் சொல்ல வ்யாஸபராசராதிகளே வல்லவர். இந்தப் பழங் கதைகள் கிடக்கட்டும்;

யானுற்ற நோயை யான் சொல்லுகிறேன் கேளுங்கள் ;—நான் திருநறையூ ரெம்பெருமானை ஸேவிக்கச் சென்று ஸந்நிதியுள்ளே புகுந்து பார்த்தேன் ; பார்த்தவுடனே அவ்வெம்பெருமானுடைய திருமார்பு திருவதரம் திருவடி திருக்கை திருக்கண் ஆகிய இவ்வவயவங்கள் நீலகிரிமேல் தாமரைக்காடு பூத்தாற்போல் பொலிந்தன ; திருவரைநாண் திருத்தோள்வளை திருமகர குண்டலம் ஹாரம் திருவபிஷேகம் ஆகிய திருவாபரணங்கள் பளபளவென்று ப்ரகாசித்தன. அவ்வெம்பெருமான் பக்கத்தில்—அன்னம் போன்ற நடையழகும் மான் போன்ற நோக்கழகும் மயில் போன்ற கூந்தலழகும், மின்போல் நுண்ணிய இடையழகும், வேய் போன்ற தோளழகும், செப்புப் போன்ற முலையழகும், கோவை போன்ற வாயழகும், கெண்டைபோன்ற கண்ணழகுமுடையளான பெரிய பிராட்டியார் இளவஞ்சிக் கொடிபோலே நின்றதையுங் கண்டேன் ; கண்டதும் அறிவுபோயிற்று ; பல விகாரங்களுண்டாயின. இப்படி வருத்தப்படாநின்ற எனக்குக் கடலோசை வந்து நென்மேலும் ஹிம்ஸையைப் பண்ணுநின்றது ; எல்லார்க்கும் இனிதான நிலா எனக்குத் தீ வீசுகின்றது; குளிர்ந்த நிலா சுடும்படியாக ஸங்கல்பித்தவனாரோ அறியேன்.

இவ்வளவேயோ ? ; எல்லார்க்கும் ஆநந்தகரமாக மலயபர்வதத்திநின்றும் வருகின்ற தென்றல் எனக்கு அழலை வீசாநின்றது. பனை மரத்தின்மீது தாமரைத்தண்டாலே செய்த கூட்டிலிருந்துகொண்டு அன்றிற் பறவையின் பேடை லகுவான ஸ்வரத்தோடே கூவுவதும் என்நெஞ்சை அறுக்கின்றது. என்செய்வேன்? கொடியனை மன்மதனும் தனது கருப்புவில்லை வளைத்து என்னையே இலக்காகக்கொண்டு புஷ்பபாணங்களைப் பிரயோகிக்கின்றானே, நானிதற்குத் தப்பிப் பிழைக்கும்படி செய்வாராருமில்லையே !. எனது தேஹ குணங்களும் ஆத்ம குணங்களும் திருக்கண்ணபுரத் தெம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்துக்கு உறுப்பாகாவிடில் இவற்றாலென்ன பயன் ? ஒருவரும் புகக்கூடாத காட்டிலே மணம்மிக்க புஷ்பம் புஷ்பித்துக் கமழநின்றால் ஆர்க்கு என்ன பயன் ? எம்பெருமானோடு அணையப்பெறாதே வீணாக வளர்ந்து கிடக்கின்ற இம்முலைகள் எப்போதும் கண்ணெதிரே தோன்றி நின்று மார்புக்கும் பாரமாகி வருத்துகின்றனவே, இம்முலைகள் தொலைந்தொழிய மருந்துதருவாருமில்லையே! . செவிக்கு இனிதாகக் கேட்கத்தக்க விடை மணிக்குரலும் என் காதுக்குக் கடூரமாயிரா நின்றது. இந்தத் துன்பங்களெல்லாம் நீங்கி நான் வாழும் வகை ஏதேனுமுண்டோ ? சொல்லீர்.

தென்றல் முதலான இவை யெல்லாம் என்மேல் படையெடுக்கும்படி செய்த மஹாநுபாவன் எனக்குத் தெரியாமையில்லை; அவனாகிறான் திருத்துழாய்மார்வன்; சந்திரனுக்குண்டான க்ஷயத்தைப் போக்கிக் காத்தருளினவன்; காளமேகத் திருவுருவன்; காயாம்பூ வண்ணன்; கடலில் அணைகட்டி இலங்கை புக்குப் போர்க்களத்திலே இராவணனைக் கொன்றொழித்தவன்; தேவர்களனைவர்க்கும் குலபாதகனாயிருந்த ஹிரண்ய கசிபுவை நரசிங்க வுருக்கொண்டு தன் மடிமீது போட்டுக்கொண்டு மார்பு கிழிய வதைத்திட்டவன்; திருவாழி கொண்ட பெருவீரன்; வராஹாவதாரஞ் செய்தருளி பூமிப்பிராட்டியை உத்தரித்தவன்; கடல் கடைந்து வானவர்க்கு அமுதளித்தவன்; வாமநரூபியாய் மாவலிபக்கற்சென்று த்ரிவிக்ரமனாகி உலகமெல்லா மளந்தவன்; ஸாக்ஷாத் ச்ரியஃபதியாயுள்ளவன்; நன்கு அறிவேன்;

இப்படிப்பட்ட எம்பெருமானைத் திருவிண்ணகர் திருக்குடந்தை......திருக்கண்ணபுரம் திருநறையூர் முதலான திருப்பதிகளிலே சென்று சேவித்து "ஸ்வாமிந்! இப்படிதானா என்னைக் கைவிடுவது? விரஹம்தின்ற உடம்பைப்பாரீர்" என்று என் அவஸ்தையை விண்ணப்பஞ்செய்வேன்; அதுகேட்டுத் திருவுள்ளமிரங்கித் திருமார்போடே என்னை அணைத்துக் கொள்ளா தொழியில், மாதர்களும் வைதிகர்களும் பக்தர்களும் அரசர்களும் திரண்டுகிடக்குமிடங்கள்தோறும் புகுந்து அவனது ஸமாசாரங்களை யெல்லாம் பலரறிய விளம்பரப்படுத்துவேன்.

அவை எவை யென்னில்; இடைச்சேரியில் தயிர் வெண்ணெய் திருடி இடைச்சிகள் கையில் அகப்பட்டுக்கொண்டு உரலோடே கட்டுண்டு ஏங்கி யழுது நின்ற நிலைமை,—தேவேந்திரனுக்கு இட்ட சோற்றையெல்லாம் தானே பெரும்பூத வடிவுகொண்டு வயிறாரத் தின்று நின்ற வெட்கக்கேடு,—சேவகன் என்று பலரும் ஏசும்படியாகப் பாண்டவர்கட்குத் தூதுசென்றசெலவு,—கூத்தாடியென்று பெண்கள் கூறும்படி குடக்கூத்தாடினமை,—தன்னை யாசைப்பட்டு வந்த சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும் அரிந்துவிட்ட புன்மை,—ஒரு ரிஷியின் பேச்சைக்கேட்டுத் தாடகையென்ற ஒரு ஸ்த்ரீயைக் கொலைசெய்த சிறுச்சேவகம்,—இவை போல்வன மற்றும் பலஸமாசாரங்களையும் தெருவிலே எடுத்துவிட்டு நாடுநகரமும் நன்கறிய மடலூர்வேன் காண்மின்—என்று தலைக்கட்டிற்றாயிற்று.

ஸ்ரீ:

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

# பெரிய திருமடல்.

[பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய திவ்யார்த்த தீபிகை யென்னும் விரிவுரையுடன் கூடியது.]

மன்னிய பல்பொறிசே ராயிரவாய் வாளரவின்
சென்னி மணிக்குடுமித் தெய்வச் சுடர்நடுவுள்
மன்னிய நாகத் தணைமேலோர் மாமலைபோல்
மின்னு மணிமகர குண்டலங்கள் வில்வீசத்
துன்னிய தாரகையின் பேரொளிசே ராகாசம்
என்னும் விதானத்தின் கீழால் இருசுடரை
மன்னும் விளக்காக வேற்றி மறிகடலும்
பன்னு திரைக்கவரி வீச நிலமங்கை
தன்னை முனநா ளளவிட்ட தாமரைபோல்
மன்னிய சேவடியை வானியங்கு தாரகைமீன்
என்னும் மலர்ப்பிணைய லேய்ந்த மழைக்கூந்தல்
தென்ன னுயர்பொருப்புந் தெய்வ வடமலையும்
என்னு மிவையே முலையா வடிவமைந்த
அன்ன நடைய வணங்கே அடியிணையைத்
தன்னுடைய வங்கைகளால் தான்தடவத் தான்கிடந்தோர்
உன்னிய யோகத் துறக்கந் தலைக்கொண்ட
பின்னைத் தன்னுபி வலயத்துப் பேரொளிசேர்
மன்னிய தாமரை மாமலர்பூத் தம்மலர்மேல்
முன்னந் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள்......—

பதவுரை

மன்னிய — வாழ்ந்திடுக. [மங்களாசரணம்]

தான் — { எம்பெருமான் றான்,

பல் பொறி சேர் ஆயிரம் வாய் வாள் அரவின் — { பல புள்ளிகளையும் ஆயிரம் வாய்களையும் ஒளியையுமுடைய னை திருவனந் தாழ்வானுடைய

| | |
|---|---|
| சென்னி மணி குடுமி | படங்களில் விளங்குகின்ற மாணிக்கங்களின் நுனிகளில் நின்றும் பரவுகின்ற |
| தெய்வம் சுடர் நடுவுள் மன்னி | திவ்யமான தேஜஸ் ஸமூஹத்தினிடையே பொருந்தி |
| அநாகத்து அணை மேல் | அந்தத் திருவனந்தாழ்வானுகிற சயநத்தின் மேலே |
| துன்னிய தாரகையின் பேர் ஒளி சேர் ஆகாசம் என்னும் விதானத்தின் கீழால் | நெருங்கிய நக்ஷத்ரங்கள் நன்கு விளங்கப் பெற்ற ஆகாசமாகிற மேற்கட்டியின் கீழே, |
| மின்னு மணி மகர குண்டலங்கள் வில் வீச | ரத்னங்கள் விளங்குகின்ற மகர குண்டலங்கள் பளபளவென்று ஜ்வலிக்கப் பெற்றும் |
| இரு சுடரை மன்னும் விளக்கு ஆக ஏற்றி | திருவாழி திருச்சங்குகளாகிற இரண்டு தேஜஸ்ஸுக்களை என்று மணையாத திரு விளக்காகப் பெற்றும் |
| மறி கடலும் முனம் நாள் நிலம் மங்கை தன்னை அளவிட்ட தாமரைபோல் மன்னிய சே அடியை பன்னு திரை கவரி வீச | அலை யெறிகிற ஸமுத்ர ராஜன், முன்னொருகால் பூமிப்பிராட்டியை அளந்த திருவடித்தாமரையை நோக்கி—பரம்பின அலைகளாகிற சாமரங்களை வீசப் பெற்றும், |
| 1. வான் இயங்கு தாரகை மீன் என்னும் மலர் பிணையல் ஏய்ந்த, 2. மழை கூந்தல், 3. தென்னன் உயர் பொருப்பும் தெய்வம் வடமலையும் என்னும் இவையே முலை ஆ, 4. வடிவு அமைந்த 5. அன்னம் நடைய, 6. அணங்குதான், 7. தன்னுடைய அம் கைகளால் அடி இணையை தடவ | 1. ஆகாசத்திலேயுள்ள நக்ஷத்ரங்களாகிற புஷ்ப புஞ்சங்களை அணிந்துள்ளவளாய், 2. மேகங்களாகிற கூந்தலையுடையளாய், 3. திருமாலிருஞ்சோலை மலையையும் திருவேங்கட மலையையும் முலையாகவுடையளாய், 4. பொருத்தமான ரூபத்தையுடையளாய், 5. அன்னத்தின் நடை போன்ற நடையையுடையளாய், 6. தெய்வப் பெண்ணாகிய பூமிப் பிராட்டி, 7. தனது அழகிய கைகளாலே திருவடிகளைப் பிடிக்கப் பெற்றும். (ஆகிய இத்தனை விபவங்களுடனே) |

| | |
|---|---|
| ஓர் மா மலை போல் கிடந்து | விலக்ஷணமானவொரு கருமலை சாய்ந்தாற்போலே பள்ளி கொண்டு |
| ஓர் உன்னிய யோகத்து உறக்கம் தலைக் கொண்ட பின்னை | விலக்ஷணமாய் ஜகத் ரக்ஷணத்தைச் சிந்திக்கிற யோக நித்திரையை மேற்கொண்ட பின்பு |
| தன் நாபி வலயத்து | தனது நாபீ மண்டலத்தில் |
| பேர் ஒளி சேர் மன்னிய தாமரை மா மலர் பூத்து | சிறந்த ஒளி பொருந்தியதும் என்றும் அழியாததுமான தாமரைப் பூவைப் புஷ்பிக்கச் செய்து |
| அ மலர் மேல் | அந்தத் தாமரைப் பூவிலே |
| முன்னம் திசை முகனை தான் படைக்க | முதல் முதலாக நான்முகக் கடவுளை ஸ்ருஷ்டிக்க |
| மற்றவனும் | அந்தப் பிரமன் |
| முன்னம் நால் மறைகள் படைத்தனன் | முதலில் நான்கு வேதங்களை வெளிப் படுத்தினன். |

* * *—பிரபந்தாரம்பத்தில் **மன்னிய** என்றவிது—மங்களாசாஸநமாய்த் தனியே நிற்பதொரு வியங்கோள் வினைமுற்று; **வாழிய** என்னுமாபோலே. **மன்னிய**—வாழ்கவென்றபடி. நாடுவாழ்க; எம்பெருமான் வாழ்க; இத்திருமடல் வாழ்க. வடநூலார், '**ஸ்ரீரஸ்து**' என்றும் '**ஸ்வஸ்தி**' என்றும் முகப்பில் எழுதுவதொக்கும் இது.

'காமபுருஷார்த்தத்தையே நான் முக்கியமாகக் கைப்பற்றினேன்' என்று சொல்ல விரும்பிய ஆழ்வார், அதற்கு உறுப்பாகப் 'புருஷார்த்தங்கள் நான்கு' என்றும், 'அப்புருஷார்த்தங்களை வெளியிட்டது வேதம்' என்றும், 'அந்தவேதம் நான்முகனால் வெளியிடப்பட்டது' என்றும், 'அந்த நான்முகன் எம்பெருமானது உந்திக் கமலத்தில் தோன்றினவன்' என்றும், 'அக்கமலம் எம்பெருமான் ஜகத்ரக்ஷணார்த்தமாக உறங்குவான்போல் யோகு செய்தருளின காலத்து மலர்ந்தது' என்றும் அருளிச்செய்யவேண்டி அந்த யோக நித்ரார்த்தமான சயனத்தின் வைபவத்தை வருணிக்கிறார்—**பல்பொறிசேர்** என்று தொடங்கி, **தான் கிடந்து** என்னுமளவால்.

உலகில் சாமன்யரான அரசர்கள் பள்ளி கொண்டால், கீழே மெத்தென்ற பஞ்சசயனமும், மேலே முத்துப்பந்தலும், பக்கங்களில் சிறந்த திருவிளக்குகளும், கால்மாட்டில் சாமரம்வீசும் பரிஜநங்

களும் கால் பிடிக்கும் கிங்கரர்களும்—ஆக இத்தனை விபவங்கள் அமையக்காண்கிறோம்; ஸாக்ஷாத் பரமபுருஷன் பள்ளிகொண்டருளினால் அக்காலத்திய விபவங்கள் வருணிக்க முடியுமோ!. ஆயினும் சுருக்கமாக ஒருவாறு வருணிக்கிறார் ஆழ்வார்.

[பல்பொறிசேர் இத்யாதி.] திருமேனி நிறையப் புள்ளிகளையுடையவனும் ஆயிரம் பைந்தலைகளையுடையனும் மஹாதேஜஸ்வியுமான திருவனந்தாழ்வானுடைய படங்களிலேயுள்ள மாணிக்கமணிகளின் சிகைகளிலிருந்து கிளம்பி எங்கும் பரவியிராநின்ற ஆச்சரியமான தேஜோராசிகளால் முட்டாக்கிடப்பெற்ற அந்த சேஷசயனத்திலே, திருமகரக்குண்டலங்கள் பளபளவென்று ஜ்வலிக்க, கரியமால் வரை போலே துயில்கின்றதாம் நாராயண பரஞ்சோதி. முத்துக்களென்னத்தக்க நக்ஷத்ரங்கள் நிறைந்த ஆகாசமண்டலம் மேற்கட்டியாக அமைந்தது; நிகரின்றி ஜ்வலிக்கின்ற திருவாழி திருச்சங்குகள் திருவிளக்குகளாயின; * அன்றிவ்வுலகமளந்த திருவடியின் விடாய் தீரப் பாற்கடல் தனது அலைகளையே சாமரமாக வீசிற்று; பூமிப்பிராட்டி திருவடி வருடாநின்றாள். ஆக இப்படிப்பட்ட விபவத்துடனே சேஷசயனத்திலே அமர்ந்து *உறங்குவான்போல் யோகு செய்யும் எம்பெருமான் தனது திருநாபியில் திவ்யமானதொரு தாமரைப்பூவைத் தோன்றுவித்து "உய்ய வுலகுபடைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை" என்கிறபடியே * அக்கொப்பூழ்ச் செந்தாமரைமேல் நான்முகனைத் தோன்றுவிக்க, அந்தப் பிரமன் நான்கு வேதங்களையும் வெளியிட்டனன்—என்றாயிற்று.

ஜகத்ஸ்ருஷ்டிக்காக எம்பெருமான் பாற்கடலில் அரவணைமேற் பள்ளிகொண்டு யோகநித்திரை செய்து தனது திருநாபியில் ஒரு கமலத்தையும் அதில் பிரமனையும் தோற்றுவித்து அப்பிரமனுக்கு நான்கு வேதங்களையும் ஓதுவிக்க, அவ்வேதங்கள் காட்டியபடியே அப்பிரமன் முன்னிருந்த வண்ணமாகவே உலகங்களைப் படைக்கிறானென்பது நூற்கொள்கை.

**சென்னி**—தலை; படமென்க. "சென்னி மணிக்குடுமித் தெய்வச்சுடர்நடுவுள்" என்கிற விதனையே ஆளவந்தார் "[illegible]

మయూఖమణ్డల ప్రకాశమానోదర దివ్యధామని" [பஞ்சமணிவ்ராத மயூகமண்டல ப்ரகாசமாநோதர திவ்யதாமநி] என்று ஸ்தோத்ர ரத்நத்தில் மொழி பெயர்த்தா ரென்னலாம். "மன்னிய நாகத்து" என்றவிடத்து, மன்னி என்று வினையெச்சமாகப் பிரித்து, அந் நாகத்து என்பது அநாகத்து எனத் தொக்கியிருப்பதாகக்கொண்டு உரைக்கப்பட்டது; இதுவே நன்கு பொருந்தும். மன்னிய என்றே பிரித்துப் பெயரெச்சமாகக்கொண்டு நாகத்தணைக்கு விசேஷண மாக்கி உரைத்தலுமாம்; மன்னிய—படுக்கும்போது விரித்தும் மற்ற போது சுருட்டிவைக்க வேண்டாதே எப்போதும் படுக்கையாகவே பொருந்தியிருக்கிற நாகமென்கை. இவ்வகைப் பொருளில், அகரச் சுட்டு வருவித்துக்கொள்ளவேண்டியது அவசியமாம்.

மாமலை போல்—மா என்று கருமைக்கும் பெருமைக்கும் வாசகம். "நாகத்தணை மேல் ஓர் மாமலை போல் தான் கிடந்து" என்று அந்வயம். மகர குண்டலம், தாரகா, ஆகாசம், விதாநம்,—வட சொற்கள். [வில்வீச] வில்—ஒளி இருசுடரை என்று ஸூர்ய சந்திரர்களைச் சொல்லவுமாம்.

இந்த வர்ணனையில் ஒரு சங்கை உதிக்கக்கூடும்; அதாவது—இங்கு எம்பெருமானுடைய திருக்கண்வளர்த்தியைச் சொல்லுகிற விது ஜகத் ஸ்ருஷ்டிக்கு முனனேயுள்ளபடியைச் சொல்வதாகை யாலே, அக்காலத்தில், "ஒன்றுந்தேவு முலகு முயிரும் மற்றும் யாதுமில்லாவன்று" என்றும் "பன்மைப் படர்பொருள் ஆதுமில் பாழ் நெடுங்காலத்து" என்றும் ஆழ்வாரருளிச் செய்தபடி ஸூர்ய சந்த்ர நக்ஷத்ராதிகள் ஒன்றும் இல்லையாதலால் இல்லாத அவற்றை யிட்டு வருணிக்கிற விது எங்ஙனே பொருந்தும்?—என்று. நம் ஸித்தாந்தத்தில் முன்பு இல்லாத வஸ்துவுக்குப் புதிதாக ஸ்ருஷ்டி யென்பதில்லை; ஸூக்ஷ்ம ரூபமாயிருந்த பொருள்களை ஸ்தூலரூப மாக்குவதே ஸ்ருஷ்டியாதலால் ஸ்ருஷ்டிக்கு முன்னே எல்லாம் ஸூக்ஷ்ம ரூபமாக இருக்குமவையே யாதலால் அவற்றை ஆழ்வார் தமது சமத்கார சக்தியால் பெருக்கடித்து வருணிக்கிறாரென்க. வேறுவகையான ஸமாதாநங்களுமுண்டு.

கவரி—కబరీ (கபரீ) என்னும் வடசொல் கவரியெனத் திரிந்தது. "நிலமங்கை தன்னை முனநாளளவிட்ட தாமரைபோல் மன்

ணிய சேவடியை (நோக்கி) மறிகடலும் பன்னுதிரைக் கவரிவீச" என்று அந்வயம். சேவடிக்கு "நிலமங்கை தன்னை அளவிட்ட" என்று அடைமொழி கொடுத்ததனால் உலகளந்த ச்ரமந்தீர ஸமுத்ர ராஜன் திரைக்கவரிகளை வீசினனென்பதாகக் கொள்க.

"வானியங்கு தாரகைமீன்" என்று தொடங்கி "அன்ன நடையவணங்கே" என்னுமளவும்—எம்பெருமானுடைய திருவடிகளைப் பிடிக்கின்ற பூமிப்பிராட்டியை வருணிப்பது. அவள் ஸ்த்ரீகளுக்கு உரிய லக்ஷணங்களோடு பொருந்தி யிருக்கின்றாளென்கிறது. ஆகாசமானது பூமிக்கு உச்சியின் ஸ்தாநத்திலே நிற்கிறபடியால் அவ்வாகாசத்திலுள்ள நக்ஷத்ரங்களைச் சிரமீதணிந்த புஷ்பங்களாகக் கூறினர். தாரகா என்னும் வடசொல்லும் மீன் என்னும் தமிழ்ச் சொல்லும் நக்ஷத்ரங்களுக்குப் பெயராயிருக்க அவ்விரண்டு பதங்களையும் இங்குச் சேர்த்துப் பிரயோகித்தது எங்ஙனே யெனில்; அச்விநீ, பரணீ, கிருத்திகை என்று வ்யவஹரிக்கப்படுகிற நக்ஷத்ரங்களும், இந்த இருபத்தேழு நக்ஷத்ரங்கள் தவிர மற்றும் பல ஆயிரக்கணக்கான நக்ஷத்ரங்களுமாக இரண்டு வகுப்பு ஆகாசத்தில் உள்ளமையால் அதனைத் திருவுள்ளம்பற்றித் தாரகை மீன் என இரண்டு சொற்களைச் சேர்த்து அருளிச் செய்தாரென்க. "நக்ஷத்ர தாரா கணங்கள்" என்று ஆரியர்கள் கூறுவதும் இக்கருத்துக் கொண்டேயாம்.

தேன்னனுயர் போருப்பும்="தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலையே" என்ற பெரியாழ்வார் திருமொழியை நோக்குக. அகஸ்திய முனிவர் வாஸஞ் செய்கிற மலயமலையிலே சென்று அம்முனிவர் முன்னிலையில் 'தருமமே நடத்தக்கடவேன்' என்று மலய மலையை யெழுதிக் கொடியெடுத்து அதனால் மலயத்வஜனென்று பேர்பெற்ற பாண்டியராஜனொருவன் தன் தவவலிமையால் நாள்தோறுஞ் சென்று கங்காநதியில் நீராடி வருகையில் ஒருநாள் தேர்மேலேறிப் புறப்பட்டுக் கங்கையில் நீராடுதற்குச் செல்லும்போது வழியில் திருமாலிருஞ் சோலைமலை ஸமீபித்த வளவில் தேர் அப்பால் வடக்கே போகமாட்டாமல் நின்றுவிட, அப்பாண்டியன் இங்கே ஒரு தீர்த்தவிசேஷமும் தேவதா ஸந்நிதியும் இருக்கவேணும்' என்றெண்ணி அத்தேரினின்று இறங்கி ஆராய்ந்து

பார்த்தவளவில், அவ்விடத்திலே அப்பாண்டியனுக்கு அழகர் ப்ரத்யக்ஷமாக ஸேவை ஸாதித்து 'முன்பு பிரமன் நம்மைக் காலைக்கழுவுகிற காலத்திலே நமது காற்சிலம்பினின்று தோன்றிச் சிலம்பாறு என்று பேரைப்பெற்ற இவ்வாற்றிலே [நூபுர கங்கையிலே] ஸ்நானஞ் செய்' என்ன, அவ்வரசன் அன்று முதல் கங்கா ஸ்நானஞ் செய்வதை விட்டிட்டு, அங்கே ஸ்நானஞ் செய்துகொண்டு அழகர்க்குப் பலவகையடிமைகளுஞ் செய்துவரலாயினன் என்கிற இதிஹாஸமும் அறியத் தக்கது. அப்பாண்டிய ராஜன் தென்திசைக்குப் பிரதாநனானமைபற்றித் தென்னன் எனப்பட்டான். அவனுடையதான உயர்ந்த மலை என்று திருமாலிருஞ்சோலையைச் சொல்லுகிறது. தென் நன் என்று பிரித்து, தென் திசையிலே உள்ளதும் விலக்ஷணமுமான என்று உரைத்தலுமாம். பொருப்பு—மலை. தெய்வ வடமலை—தெய்வத்தன்மை பொருந்திய [திவ்யமான] திருவேங்கடமலை ஆகிய இத்திருமலைகளிரண்டும் பூமிப்பிராட்டிக்குத் திருமுலைகளாக அருளிச் செய்யப்பட்டது. "காரார்வரைக் கொங்கை" என்றாரே சிறிய திருமடலிலும். சிறந்த மேரு முதலிய மலைகளை நிலமங்கைக்குக் கொங்கையாகச் சொல்லலாமாயிருக்க அவற்றை விட்டுத் தென் வடமலைகளைச் சொன்னது—நாயகன் விரும்பிப் படுகாடு கிடக்குமிடமே முலையாகத் தகுதலால்.

உன்னிய யோகத்துறக்கம்—உன்னுதல்—ஆராய்தல். 'எவ்விதமாக ஸ்ருஷ்டிக்கலாம்' என்று ஆராய்ந்துகொண்டு தூங்குபவன் போல யோகுபுணர்வானிறே எம்பெருமான். நாபிவலயம்—வடசொல். பூத்து—பூக்க; எச்சத்திரிபு.

"மற்றவனும் முன்னம் படைத்தனன் நான்மறைகள்" என்றால் பிரமனே வேதங்களை ஸ்ருஷ்டித்தவனென்று பொருளாகிறதே, இது சேருமோ? வேதம் ஸ்வயம் வ்யக்தமென்றும் நித்யமென்றும் எம்பெருமான்கூட வேதகர்த்தா அல்லனென்றும் ஸித்தாந்தமாயிருக்க, இப்படி சொல்லலாமோ? என்னில்; "అనాదినిధనా హ్యేషా వాగుత్సృష్టా స్వయంభువా" [அநாதி நிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா] என்று ஸ்ம்ருதியில் கூறியுள்ளபடி சொல்லியிருக்கிறவித்தால் வேதங்களின் நித்யத்வமும் அபௌரு

ஷேயத்வமும் குறையுறாது. பிரமனது வாக்கில் நின்றும் ஆவிர்ப்பவித்த மாத்திரமேகொண்டு **படைத்தனன்** என்றது. ருக்கு, யஜுஸ் ஸாமம், அதர்வணம் என்பன நான்மறைகளாம்.

ஆக இவ்வளவும்—இவ்வாழ்வார் அருளிச்செய்ய உத்தேசித்த புருஷார்த்தங்களுக்கு மூலப்ரமாணமான வேதங்களின் வரலாற்றைச் சொன்னாராயிற்று. அரவணைமேற் பள்ளிகொண்டு யோகத்துயில்புரிந்த எம்பெருமான் தனது நாபிக்கமலத்திலே பிரமனைப் படைத்து அவனுக்கு நான்கு வேதங்களையும் சந்தை சொல்லி வைத்தானென்றதாயிற்று. ... ... ... ... ✲

... ... .. அம்மறைதான்
மன்னு மறம்பொரு ளின்பம்வீ டென்றுலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே நான்கினிலும்
பின்னையது பின்னைப் பெயர்தரு மென்பதோர்
தொன்னெறியை வேண்டுவோர் வீழ்கனியு மூழிலையும்
என்னு மிவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தித்
துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன்
மன்னு மழல்நுகர்ந்தும் வண்தடத்தி னுட்கிடந்தும்
இன்னதோர் தன்மையரா யீங்குடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கட் சென்று ரேனப்படுஞ் சொல்லல்லால்
இன்னதோர் காலத் தினையா ரிதுபெற்றார்
என்னவுங் கேட்டறிவ தில்லை.......—

அம்மறை தான் — அந்த வேதங்களானவை

மன்னும் அறம் பொருள் இன்பம் வீடு என்று — நிலை நின்ற தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று

உலகில் நல் நெறி மேம்பட்டன நான்கு அன்றே — இவ்வுலகில் நல்வழியாலே சிறப்பித்துக் கூறப்படுகின்ற நான்கு புருஷார்த்தங்கள் நிறைந்திருக்கப் பெற்றவையாம்;

| | |
|---|---|
| நான்கினிலும் | அந்த நால்வகைப் புருஷார்த்தங்களிலும் |
| பின்னையது | கடைசியில் சொல்லப்பட்ட மோக்ஷமானது |
| பின்னை பெயர் தரும் என்பது | இந்த சரீரம் தொலைந்தபிறகு உண்டாகுமென்று (சாஸ்த்ரங்களில்) சொல்லப்படுகிறது; |
| ஓர் தொல் நெறியை | விலக்ஷணமாயும் அநாதியாயுமுள்ள அந்தப் பரமபதத்தை (அல்லது, அர்ச்சிராதி மார்க்கத்தை) |
| வேண்டுவார் தாம் | அடையவிரும்புமவர்கள் |
| வீழ் கனியும் ஊழ் இலையும் என்னும் இவையே நுகர்ந்து | தானே பழுத்து விழுந்த பழங்களையும் சருகான இலைகளையுமே தின்று |
| உடலம் வருந்தி | காயக்லேசங்கள் பட்டு |
| துன்னும் இலைக்குரம்பை துஞ்சியும் | நெருக்கமான பர்ணசாலைகளிற்கிடந்தும் |
| வெம் சுடரோன் மன்னும் அழல் நுகர்ந்தும் | ஸூர்யனோடு பொருந்திய வெய்யிலை பக்ஷித்தும் |
| வண் தடத்தினுள் கிடந்தும் | அழகிய தடாகங்களிலே மூழ்கிக் கிடந்தும் |
| இன்னது ஓர் தன்மையர் ஆய் | ஆக இப்படிப்பட்ட ஸ்வபாவங்களையுடையராய்க் கொண்டு |
| ஈங்கு உடலம் விட்டு எழுந்து | இவ்வுலகில் சரீரத்தைவிட்டொழித்து மேலே கிளம்பி |
| தொல் நெறிக்கண் சென்றார் எனப்படும் சொல் அல்லால் | திரும்பி வருதலில்லாதவொரு ஸ்தானத்திலே போய்ச் சேர்ந்தார்கள் என்று சொல்வதைத்தவிர, |
| இன்னது ஓர் காலத்து இன்னார் இது பெற்றார் என்னவும் கேட்டு அறிவது இல்லை | இன்ன தினத்தில் இன்ன மநுஷ்யன் இந்த மோக்ஷத்தில் போய்ச் சேர்ந்தான் என்று விளங்கச் சொல்லக் கேட்டதேயில்லை. |

* * *—அந்த வேதங்களில், தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்கு புருஷார்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த நான்கு புருஷார்த்தங்கள் தவிர இன்னுஞ் சில விஷயங்களும் வேதங்களிற் கூறப்பட்டிருக்குமோவென்று ஒருவர்க்கும் சங்கைபிறக்க வழியில்லாதபடி இங்கு ஆழ்வார் அருளிச்செய்கிறபடி பாருங்கள்; "வேதங்

களில் நான்கு புருஷார்த்தங்கள் சொல்லப்பட்டன" என்று ‡ வ்ய திகரண ப்ரயோகம் பண்ணுமல் "அம்மறை அறம்பொருளின்பம் வீடென்று நான்கன்றே" என்று $ ஸமாநாதிகரண ப்ரயோகம் பண்ணியிருப்பதனல், வேதம் முழுமையும் இந்த நான்குபுரு ஷார்த்த ஸ்வரூபம் ;—வேறில்லை என்றதாகிறது.

நன்னெறி மேம்பட்டன—'மேம்பட்டன நன்னெறி' என்று மாற்றி இயைத்து ச்லாக்க்யமான புருஷார்த்தங்கள் என்று உரைக் கவுமாம். இங்கே ஒன்று சங்கிக்கலாம்;—சிறிய திருமடலில் "இப் பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே" என்று மூன்றே புருஷார்த் தங்கள் உள்ளனவாகச் சொல்லி, "சிக்கனமற்றூராணுமுண்டென் பாரென்பது தானதுவும் ஓராமையனறே உலகத்தார் சொல்லுஞ் சொல்" என்று நான்காவது புருஷார்த்தமுண்டென்பவர்கள் அவி வேகிகளென்று தூஷித்தும் அருளிச்செய்தஆழ்வார் தாமே இங்கு நான்கன்றே என்று நான்கு புருஷார்த்தங்களுண்டாகச் சொல்வது ஸ்வோக்திவிருத்தமாமோ என்று:—இது விருத்தமன்று ; சிறியதிரு மடலில் தமது வித்தாந்தத்தை முதல் முதலிலே நிஷ்கர்ஷித்துக் கூறிவிட்டுப், பிறகு மோக்ஷ புருஷார்த்த முண்டென்பாருடைய பக்ஷத்தை அநுவதித்து மறுத்தார் ; இதில், புருஷார்த்தங்கள் நான்கு என்கிற பக்ஷத்தை முதலில் அநுவதித்து விட்டு, அடுத்த படியாகவே மோக்ஷ புருஷார்த்த முண்டென்கிற பக்ஷத்தைக் கண்டித்து மூன்றே புருஷார்த்தங்களென்கிற ஸ்வஸித்தாந்தத் தையே தலைக்கட்டுகிறூர். ஆகையால் இரண்டு திருமடல்களிலும் இவருடைய கொள்கை ஒன்றேயாம். பரமவைதிகரான ஆழ்வார் 'நான்கு புருஷார்த்தங்கள் வேதப்ரதிபாத்யங்கள்' என்று முதலில் சொல்லிவிட்டு, உடனே, நான்காவது புருஷார்த்தமே இல்லையென் றும்மூன்றேயென்றும் சொல்வது அபசாரமன்ரூ? அவைதிகராக

† வ்யதிகரணப்ரயோகமாவது—பலவிபக்திகளால் செய்யும் பிரயோ கம்; 'இராமன் சந்திரனை ஒத்தவன்; என்ருல் இதில், இரண்டு வேற்றுமை கள் உள்ளமை காண்க.

$ ஸமாநாதிகரண ப்ரயோகமாவது—ஒரே விபக்தியையுடைய பிர யோகம். 'இராமன் சந்திரனே'.

மாட்டாரோ? என்று கேட்பார்க்குச் சிறிய திருமடலுரையிலே [பக்கம்—26.] ஸமாதாநம் சொன்னோம். கண்டு கொள்க. மோக்ஷத்தை இல்லை செய்தல் இவருடைய திருவுள்ளமன்று; வேறொரு தேஹத்தைப் பூண்டு வேறொரு காலத்தில் வேறொரு ஸ்தானத்தில் எம்பெருமானை அநுபவிப்பதிற்காட்டிலும் இவ்வுலகத்திலேயே இப்போதே இவ்வுடம்போடே எம்பெருமானை அணைந்து மகிழ்வதே இவர்க்குப் பரமோத்தேச்யமாகத் தோன்றினமையால் "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யுந் தவந் தானென்?" என்ற ஆண்டாளைப்போலே மோக்ஷத்தில் வெறுப்பைக் காட்டுகின்றாரே யன்றி, உண்மையில் மோக்ஷமென்பதொன்றே அஸத்யம் என்று ஸாதிப்பது இவர்க்கு விவக்ஷிதமன்றென்க.

அந்த மோக்ஷத்தைப் பெறுகிறவர்கள் இந்த சரீரம் கழிந்த பிறகே பெறுகிறார்களென்பது "மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" இத்யாதிகளால்ஸித்தமாதலால் அதனையருளிச்செய்கிறார்—நான்கினிலும் என்று தொடங்கி. மோக்ஷத்தைப் பெறுவதற்காக இங்கேயிருந்து படுகிறபாடுகளைப் பேசுகிறார் ஓர் தோன்னெறியை வேண்டுவார் என்று தொடங்கி. 'ஊன்வாடவுண்ணாது உயிர்காவலிட்டு உடலிற்பிரியாப் புலனைந்தும் நொந்து, தான்வாட வாடத் தவஞ்செய்ய வேண்டா" என்றும் "காயோடு நீடு கனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று தவஞ்செய்ய வேண்டா" என்றும் இவ்வாழ்வார்தாமே அருளிச்செய்தது காண்க. "பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா" என்றார் பேயாழ்வாரும். "காயிலை தின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித் தீயிடை நின்றும் பூவலம் வந்துந்திரிவீர்காள், தாயிலுமன்பன் பூமகள் நண்பன் தடநாகப், பாயன் முகுந்தன் கோயிலரங்கம்பணிவீரே" என்று உபதேசித்தார் பிள்ளைப்பெருமாளும் கலம்பகத்தில். பொல்லாவொழுக்கும் அழுக்குடம்புமற்று எம்பெருமானைப் பெற்றநுபவிக்க நினைப்பவர்கள், மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு நீர் பருகியும் காற்று நுகர்ந்தும் காய் கனி கிழங்கு சருகு வருக்கங்களை

உண்டும் விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடை காலத்தில் வெயில் நிலையிலும் பஞ்சாக்நிமத்தியிலும் நிற்றலும், மாரிக்காலத்தும் பனிக்காலத்தும் நீர் நிலையில் பாசியேற நிற்றலும் முதலிய செயல்களைமேற்கொண்டு அவற்றால்வருந் துன்பங்களைப்பொறுத்து இவ்வாறு சரீரத்தை யொறுத்து நல்வீடு செல்வர்களென்பது அறியத்தக்கது. எம்பெருமானை அர்ச்சாவதாரத்தில் நாம் எளிதாக அநுபவித்து ஆநந்திக்கலாமான பின்பு இப்படிப்பட்ட வீணை காயக்லேசங்கள் படவேண்டா என்று உபதேசிப்பர்கள் ஆழ்வாராதிகள்.

தோன்னெறி என்று பரமபதத்தைச் சொல்லவுமாம்; பரமபதத்திற்குச்செல்லும்வழியாகிய அர்ச்சிராதி மார்க்கத்தைச்சொல்லவுமாம். நெறி—கோவிலும் மார்க்கமும். ஊழிலை—பழுகிபோன இலை,—சருகு. இலைக்குரம்பை—இலைகளாற் சமைக்கப்பட்ட குடிசை,—பர்ணசாலை.

ஈங்குடலம் விட்டேழுந்து—“ దుర్లభో మానుషో దేహః” [துர்லபோ மாநுஷோ தேஹ:] என்று அருமையாகச் சொல்லப்பட்ட இந்த மநுஷ்யதேஹத்தைப் பெற்றுவைத்து இது கொண்டே எம்பெருமானை இஷ்டப்படி அநுபவித்து ஆநந்திக்க விரும்பாமல் அநியாயமாக இவ்வுடலைப்பாழாக்க நினைக்கிறார்களே பாவிகள்! என்று வருந்துகின்றார் போலும்.

அருமந்த தேஹத்தைத்தான் இழக்கிறார்களே, அங்குச்சென்றாகிலும் ஏதாவது நல்ல பேற்றைப்பெறுகிறார்களோ; அது ஒன்றுமில்லை; ‘அவன் மோக்ஷம் போனான், இவன் மோக்ஷம் போனான்’ என்று வாய்நோவச் சொல்வதைக் கேட்கிறோமேயன்றி ‘இன்ன தினத்தில்இன்னமநுஷ்யன் இன்ன ஸுகத்தைப்பெற்றான்’ என்று சொல்லக் கேட்டதே யில்லை. ... ... ... *

.... ... ... உளதேன்னில்
மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள்
அன்னதோ ரில்லியி னூடேபோய் வீடேன்னும்
தோன்னேறிக்கட் சேன்றாரைச் சோல்லுமின்கள் சோல்லாதே
அன்னதே பேசு மறிவில் சிறுமனத்துஆங்கு
அன்னவரைக் கற்பிப்போம் யாமே அதுநிற்க......—

உளது என்னில் — (அடியோமே இல்லை யென்று நான் சொல்லுகிற அந்த மோக்ஷம்) உண்டு என்கிற பக்ஷத்தில்,

மன்னும் கடுங் கதிரோன் மண்டலத்தின் நல் நடுவுள் — நிபிடமாயும் தீக்ஷ்ணமாயு முள்ள கிரணங்களை யுடையனான ஸூர்யனுடைய மண்டலத்தின் நட்ட நடுவே

அன்னது ஓர் இல்லியின் ஊடு போய் — வாய்கொண்டு சொல்ல முடியாத அப்படிப் பட்ட ஸூக்ஷ்மமான ரந்த்ரத் தின் வழியே சென்று

வீடு என்னும் தொல் நெறி கண் சென்றாரை சொல்லுமின்கள் — மோக்ஷமென்று நீங்கள் சொல்லுகிற ஒரு ஸ்தானத்திற்குப் போய்த் திரும்பி வந்தவர்களைக் காட்டுங்கள் ;

சொல்லாதே — அப்படிப்பட்டவர்களைக் காட்ட மாட்டாமல்

அன்னதே பேசும் — (மோக்ஷமுண்டென்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறதென்று) பழம் பாட்டையே பாடிக் கொண்டிருக்கிற

அறிவு இல் சிறு மனத்து அன்னவரை — விவேகமற்றவர்களும் சிறிய மனமுடையவர்களுமான அவர்களுக்கு

கற்பிப்போம் யாமே — காமோ தெளிவைப் பிறப்பிக்க வல்லோம் ; [அந்த அவிவேகிகளுக்கு நம்மால் தெளிவு பிறப்பிக்க வொண்ணாது.]

அது நிற்க — அந்த மோக்ஷ வார்த்தை அப்படிகிடக்கட்டும்

* * *—என் கேட்டதில்லை? “ శుకో ముక్తః వామదేవో ముక్తః ” [சுகோமுக்த வாமதேவோ முக்த:] என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றனவே ; சுகன் வாமதேவன் முதலானோர் மோக்ஷமடைந்தார்களென்று சொல்லக்கேட்கவில்லையோ என்ன ; அப்படி சொல்லியிருப்பது போராது ; ஒரு மனிதன் என்கண்ணெதிரே வந்து நின்று “நான் ஸூர்ய மண்டலத்தைப் பிளந்துகொண்டு அதன் வழியே சென்றுமோக்ஷம் போய்ச்சேர்ந்து கண்டு வந்தேன்”

என்று அங்குப் போய்வந்தார் சொல்லக் கேட்கவேணும்; அப்படி ஒருவருஞ் சொல்லக் கேட்டதில்லை என்கிறார்.

"வீடென்னுந் தொன்னெறிக்கண் சென்றாரை" என்ற விடத்து, சென்றாரை என்பதற்கு 'சென்று திரும்பி வந்தவர்களை' என்று பொருள் கொள்ளல் வேண்டும். அறிவு இல் சிறுமனத்து—மோக்ஷமுண்டென்று சொல்லுகிறவர்களுக்கு விவேகமில்லை; இனி விவேக முண்டாகலாமென்னவுங் கூடாதபடி நெஞ்சுங் குறுகியது என்கிறார்.

கற்பிப்போம் யாமே—இல்லாததொன்றை உண்டென்று சில அவிவேகிகள் சொன்னால் அவர்களோடு வாக்யார்த்தம் சொல்வது தானா எனக்குக் காரியம்; நான் பிடித்த புருஷார்த்தத்தை இனி தாகப் பேசுவது தவிர்ந்து அந்த அறிவிலிகளோடு வாதப்ரதி வாதம் பண்ணுவது எனக்கு வேலையன்று. அவர்கள் மனம் போன படி ஏதேனும் சொல்லிக்கொண்டிருக்கட்டும் என்று கையொழி கிறார். "ஆரானுமாதானுஞ் செய்ய, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே" என்ற நம்மாழ்வாரை ஒருபுடை ஒப்பர் இவர். *

முன்னநான் சொன்ன அறத்தின் வழிமுயன்ற
அன்னவர்தாங் கண்டீர்க ளாயிரக்கண் வானவர்கோன்
பொன்னகரம் புக்கமரர் போற்றிசெப்பப் பொங்கொளிசேர்
கொன்னவிலுங் கோளரிமாத் தான்சுமந்த கோலஞ்சேர்
மன்னிய சிங்கா சனத்தின்மேல் வாணெடுங்கண்
கன்னியரா லிட்ட கவரிப் பொதியவிழ்ந்தாங்கு
இன்னிளம்பூந் தென்ற லியங்க மருங்கிருந்த
மின்னனைய நுண்மருங்குல் மெல்லியலார் வெண்முறுவல்
முன்னம் முகிழ்த்த முகிழ்நிலா வந்தரும்ப
அன்னவர்தம் மானோக்க முண்டாங் கணிமலர்சேர்
பொன்னியல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம்
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை
இன்னிசை வண்டமருஞ் சோலைவாய் மாலைசேர்
மன்னிய மாமயில்போல் கூந்தல் மழைத்தடங்கண்

மின்னிடையாரோடும் விளையாடி வேண்டிடத்து
மன்னு மணித்தலத்து மாணிக்க மஞ்சரியின்
மின்னி னொளிசேர் பளிங்கு விளிம்படுத்த
மன்னும் பவளக்கால் செம்பொன்செய் மண்டபத்துள்
அன்ன நடைய வரம்பையர்தங் கைவளர்த்த
இன்னிசையாழ் பாடல்கேட் டின்புற் றிருவிசும்பில்
மன்னு மழைதவழும் வாணிலா நீண்மதிதோய்
மின்னி னொளிசேர் விசும்பூரும் மாளிகைமேல்
மன்னு மணிவிளக்கை மாட்டி மழைக்கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல்
துன்னிய சாலேகஞ் சூழ்கதவந் தாள்திறப்ப
அன்ன முழக்க நெரிந்துக்க வாணீலச்
சின்ன நறுந்தாது சூடியோர் மந்தாரம்
துன்னு நறுமலரால் தோள்கொட்டிக் கற்பகத்தின்
மன்னு மலர்வாய் மணிவண்டு பின்தொடர
இன்னிளம் பூந்தென்றல் புகுந்தீங் கிளமுலைமேல்
நன்னறுஞ் சந்தனச்சே றுள்புலர்த்தத் தாங்கருஞ்சீர்
மின்னிடைமேல் கைவைத் திருந்தேந் திளமுலைமேல்
பொன்னரும் பாரம் புலம்ப வகங்குழைந்தாங்கு
இன்ன வருவி னிமையாத் தடங்கண்ணார்
அன்னவர்தம் மானோக்க முண்டாங் கணிமுறுவல்
இன்னமுதம் மாந்தி யிருப்பர் இதுவன்றே
அன்ன வறத்தின் பயனாவ தொண்பொருளும்
அன்ன திறத்ததே யாதலால் காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றுநாம்......—

| | | | |
|---|---|---|---|
| முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற அன்னவர் தாம் | (புருஷார்த்தங்களில்) முதலதாக நான் எடுத்துச்சொன்ன தருமத்தின் வழியிலே அநுஷ்டானஞ் செய்தவர்கள் | ஆயிரம் கண் வானவர் கோன் பொன் நகரம் புக்கு | ஆயிரங்கண்ணுடை இந்திரனுடைய அழகிய லோகத்திற் சென்று சேர்ந்து |

| | |
|---|---|
| அமரர் போற்றி செப்ப | தேவர்கள் வாழ்த்தப் பெற்று, |
| பொங்கு ஒளி சேர் கொல் நவிலும் கோள் அரி மா தான் சுமந்த கோலம் சேர் மன்னிய சிங்க ஆசனத்தின் மேல் | மேன்மேலும் வளர்கின்ற ஒளியை யுடையதும், கொல்லுந் தொழிலிற் பழகின வலிய சிங்கத்தால் சுமக்கப்பட்டதும், அழகியதும், பொருத்தமுடையதுமான சிங்காசனத்தின்மேலே (இருந்துகொண்டு) |
| வாள் நெடு கண் கன்னியரால இட்ட | வாள்போற் கூரிய நீண்ட கண்களையுடைய கன்னிகைகளாலே வீசப்பட்ட |
| கவரி பொதி அவிழ்ந்து | சாமரத்திரள்கள் (தம்மேல்வந்து) மலரப்பெற்று, |
| இன் இள பூ தென்றல் இயங்க | இனிதாயும் மந்தமாயும் பரிமளமுடையதாயுமிருக்கிற தென்றல் வந்து வீசப்பெற்று, |
| மருங்கு இருந்த மின் அனைய நுண் மருங்குல் மெல் இயலார் | அருகே யிருக்கிற மின்போல் ஸூக்ஷ்மமான இடையையுடைய மாதர்கள் |
| வெண் முறுவல் | (தங்களுடைய) வெளுத்த பற்களாலே |

| | |
|---|---|
| முனனம் முகிழ்த்த | அபிப்ராயத்தை ஸூசிப்பிக்கின்ற |
| முகிழ் நிலா வந்து அரும்ப | இளநிலா வந்து மேலேப்ரஸரிக்க |
| அன்னவர் தம் | அப்படிப்பட்ட மாதர்களுடைய |
| மான் நோக்கம் உண்டு | மானின் நோக்குப் போன்ற நோக்கை அநுபவித்து |
| ஆங்கு | அவ்வளவிலே |
| அணி மலர் சேர் | அழகிய பூக்கள் நிறைந்துள்ள |
| பொன் இயல் கற்பகத்தின் காடு உடுத்த மாடு எல்லாம் | பொன்மயமான கற்பகக் காடுகள் நிறைந்த ப்ரதேசங்க ளெல்லாவற்றிலும் |
| மன்னிய மந்தாரம் பூத்த மது இவலை | நிலைபெற்றிருக்கிற பாரிஜாத வ்ருக்ஷங்களின் பூக்களிலுள்ள மகரந்த பிந்துக்களில் |
| இன் இசை வண்டு அமரும் சோலைவாய் | இனிய இசைகளைப் பாடுகின்ற வண்டுகள் பொருந்தியிருக்கப்பெற்ற பூஞ்சோலைகளிலே, |
| மாலை சேர் மன்னிய மா மயில் போல் கூந்தல் | புஷ்பங்களை யணிந்தும் மயில் தோகை போன்றுமிருக்கிற கூந்தலை யுடையவர்களாயும் |

| | |
|---|---|
| மழை தடங்கண் | குளிர்ந்து விசாலமான கண்களையுடையவர்களாயும் |
| மின் இடையாரோடும் | மின்போல் நுண்ணிய இடையையுடையவர்களாயுமிருக்கிற அப்ஸரஸ் ஸ்த்ரீகளோடே |
| வேண்டிடத்து விளையாடி | யதேஷ்டமான இடங்களில் ரமித்து, |
| மன்னும் மணி தலத்து | சிறந்த ரத்னங்களழுத்தின ஸ்தலங்களிலே, [கட்டப்பட்டு] |
| மாணிக்கம் மஞ்சரியின் | மாணிக்கமயமான பூங்கொத்துக்களை யுடையதும் |
| மின்னின் ஒளி சேர் பளிங்கு விளிம்பு அடுத்த | மின்னல்போலே பளபளவென்று விளங்குகின்ற ஸ்படிகக் கற்களாலே குறடு [கொடுங்கை] கட்டப்பெற்றதும் |
| மன்னும் பவளக்கால் | சிறந்த பவழ ஸ்தம்பங்களை யுடையதும் |
| செம்பொன் செய் | செம்பொன்னால் செய்யப்பட்டதுமான |
| மண்டபத்துள் | மண்டபத்திலே |

| | |
|---|---|
| அன்னம் நடைய அரம்பையர் தம் கை வளர்த்த | அன்ன நடையுடைய அப்ஸரஸ்ஸுக்களின் கைவழியாக வுண்டான |
| இன் இசை யாழ் பாடல் | இனிய இசையை யுடைய வீணையின் பாட்டை |
| கேட்டு இன்புற்று | கேட்டு ஆனந்தித்தும், |
| இரு விசும்பில் மன்னு மழை தவழும் | பரந்த ஆகாசத்திலே பொருந்தியிருக்கிற மேக மண்டலங்கள் வந்து படியப் பெற்றதும் |
| வாள் நிலா நீள் மதி தோய் | அழகிய நிலவையுடைய பெரிய சந்திரன் வந்து படியப் பெற்றதும் |
| மின்னின் ஒளி சேர் | மின்னலின் ஒளி போன்ற ஒளியை யுடையதும் |
| விசும்பு ஊரும் | ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதுமான |
| மாளிகை மேல் | விமாநத்திலே |
| மழை கண்ணார் | குளிர்ந்த கண்களை யுடையரான மாதர்கள் |
| மன்னு மணி விளக்கை மாட்டி | என்றுமணையாத மணிவிளக்குகளைத் தொங்கவிட்டு |

| | |
|---|---|
| விசித்திரமா பாப்படுத்த | ஆச்சரியமாக விஸ்தாரமாய்ப் பரப்பின |
| பன்னு பள்ளிமேல் | கொண்டாடத் தக்க சயனத்தின்மீது |
| துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப | நெருங்கிய சன்னல்களைச் சுற்றியுள்ள கதவுகள் திறந்துகொள்ள, |
| இன் இள பூ தென்றல் | பரமபோக்யமான மந்தமாருதமானது |
| அன்னம் உழக்க நெரிந்து உக்க வாள் நீலம் நறு சின்ன தாது சூடி | அன்னப்பறவைகள் மிதிப்பதனாலே நெரிந்துதுகளாய்ப் போன அழகிய நீலோத்பலத்தின் மணம் மிக்க சிறிய தாதுகளைச் சூடிக் கொண்டும் |
| ஓர் மந்தாரம் துன்னு நறு மலரால் தோள் கொட்டி | சிறந்த மந்தார வ்ருக்ஷத்திலே நெருங்கியுள்ளதும் மணம் மிக்கதுமான புஷ்பங்களாலே தோள்களை அலங்கரித்துக் கொண்டும் |
| கற்பகத்தில் மன்னு மலர் வாய் மணி வண்டு பின் தொடர | கல்ப வ்ருக்ஷத்திலே பொருந்திய பூக்களிலே படிந்த அழகிய வண்டுகள் பின் தொடரப் பெற்றும் |
| ஈங்கு புகுந்து | இவர்கள் ரமிக்குமிடங்களிலே வந்து சேர்ந்து |
| இள முலை மேல் நல் நறு சந்தனம் சேறு உள் புலர்த்த | இளமுலைகள் மேல் பூசப்பட்ட நல்ல மணமுடைய சந்தனச்சேற்றை நன்கு உலர்த்த, |
| தாங்க அரு சீர் மின் இடை மேல் கை வைத்து இருந்து | தரிக்க முடியாத [ஸூக்ஷ்மமான] அழகிய மின் போன்ற இடுப்பின் மீது கையை வைத்துக்கொண்டிருந்து |
| ஏந்து இள முலை மேல் பொன் அரும்பு ஆரம் புலம்ப | உந்நதமான இளமுலைமேலே காசுமாலைகள் ஒலிக்கும்படி நிற்க |
| ஆங்கு | அவ்விருப்பைக் கண்டு |
| அகம் குழைந்து | மனமுருகி |
| இன்ன உருவின் இமையா தடங்கண்ணார் அன்னவர் தம் | இப்படிப்பட்ட விலக்ஷணமான வடிவுபடைத்த தேவமாதர்களுடைய |
| மான் நோக்கம் உண்டு | மானின் நோக்குப் போன்ற நோக்கை அநுபவித்து |

| | |
|---|---|
| ஆங்கு | அதனோடே |
| அணி முறுவல் இன் அமுதம் மாந்தி இருப்பர் | அழகிய புன்சிரிப்பாகிற இனிய அம்ருதத்தையும் புஜித்திருப்பார்கள். |
| அன்ன அறத்தின் பயன் ஆவது இது அன்றே | அப்படிப்பட்ட (முன்னே நான் சொன்ன) தர்ம புருஷார்த்தத்திற்குப் பலனாகப் பெறும் பேறு இதுவே யாம்; |
| ஒண் பொருளும் அன்ன திறத்ததே | சிறந்த அர்த்த புருஷார்த்தத்தின் பலனும் அப்படிக்கொத்ததேயாம்; |
| ஆதலால் | இப்படி தர்ம அர்த்தங்களாகிய இரண்டு புருஷார்த்தங்களுக்கும் காமமே பயனாகத் தேறுவதனால் |
| காமத்தின் | அக்காமபுருஷார்த்தத்தினுடைய |
| மன்னும் வழி முறையே | நிலை நின்ற வழியாகிய பகவத் காம மார்க்கத்திலே |
| நாம் நிற்றும் | நாம் ஊற்றமுடையராயிருப்போம். |

* * *—இனி, தாம் பற்றின புருஷார்த்தம் காமம் என்று சொல்லவேண்டி, மற்ற தருமம் அர்த்தம் என்ற இரண்டு புருஷார்த்தங்களால் பெறக்கூடிய பேறு இன்னது, இப்படிப்பட்டது—என்று நிரூபிக்கத் திருவுள்ளம்பற்றி, தருமத்தை அநுஷ்டிப்பவர்கள் பெறும்பேறு இன்னதென்கிறார். "ஆயிரக்கண் வானவர்கோன்" என்று தொடங்கி "இன்னமுதம் மாந்தியிருப்பர்" என்னுமளவும் தர்ம புருஷார்த்தத்தினால் ஸ்வர்க்கலோகத்தில் கிடைக்கும் விஷய போகங்களை விரிவாகச் சொல்லுகிறது.

"அம்மறைதான் மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில், நன்னெறி மேம்பட்டன நான்கன்றே" என்று கீழே சொல்லுமிடத்துப் புருஷார்த்தங்களில் முதன்மையாகச்சொல்லப்பட்ட யாதொரு தர்மமுண்டு, அதனை அடைவுபட அநுஷ்டித்த மஹான்கள் இவ்வுடலைவிட்டு இவ்வுலகையும் விட்டொழிந்த பின்பு, புண்ய பலன்களை அநுபவிப்பதற்கென்று ஏற்பட்ட இடமாகிய தேவேந்திர நகரத்திற்கு [ஸ்வர்க்கலோகத்திற்கு]ச் செல்லுவர்கள் ; சென்றவாறே அங்குள்ள அமரர்கள் "ஜய விஜயீபவ" இத்யாதி சப்தகோஷங்

களாலே தோத்திரஞ் செய்து, விலையுயர்ந்து அழகுமிக்க சிங்காசனத்தின் மீது வீற்றிருக்கச்செய்வர்கள்; கண்ணழகிற் சிறந்த கன்னிகைகள் அருகேவந்து சாமரம் வீசுவர்கள்; இனிதான தென்றற் காற்றும் தன்னடைவே வந்து மேலேபடும்; மற்றுஞ் சிலமாதர்கள் அருகே வந்து நின்று தங்களுடைய உட்கருத்தை வெளிக்காட்டுகின்ற மந்தஸ்மிதத்தை [புன்சிரிப்பை]ச் செய்வர்கள்; அவர்களது நோக்கிலே ஈடுபட்டிருப்பவர்கள் இவர்கள்.

[ஆங்கணி மலர் சேர் என்று தொடங்கி விளையாடி வேண்டிடத்து என்னுமளவும் ஒரு வாக்யார்த்தமாகக் கொள்க.] சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து போகங்கள் பெறும்படியைச் சொல்லிற்று கீழ் வாக்கியத்தில்; கற்பகவ்ருக்ஷங்கள் நிறைந்த அழகிய பூஞ்சோலைகளிலிருந்து கொண்டு போகங்கள் அநுபவிக்கிறபடியைச் சொல்லுகிறது இவ்வாக்கியம். சிங்காசனத்திலிருக்கும்போது சில மாதர்கள் வந்து ஸாபிப்ராயமாகப் புன்சிரிப்புச் சிரித்தவாறே, 'பூக்கொய்கையிலே நோக்காகச் சிரிக்கிறார்களிவர்கள்' என்று உணர்ந்து உடனே எழுந்துபோய்ச் சோலைகளிலே விளையாடித் திரிவர்களாம்.

அந்த நந்தவனங்கள் எப்படியிருக்கின்றனவென்றால், எங்கே பார்த்தாலும் பொன்மயமான கல்ப வ்ருக்ஷங்கள் நிறைந்தும், அந்தக் கல்பவ்ருக்ஷங்களின் மலர்களில் மதுவைப்பருகுவதற்காக வண்டுகள் வந்து படிந்து இனிதாக ரீங்காரம் பண்ணப்பெற்றும் இருக்கின்றனவாம். அப்படிப்பட்ட சோலைகளிலே, கூந்தலழகும் கண்ணழகும் இடையழகும் அமைந்த மங்கையர்களுடனேகூடி யதேச்சமாக விளையாடுவர்களாம்.

[மன்னு மணித்தலத்து என்று தொடங்கி இன்னிசையாழ் பாடல் கேட்டின்புற்று என்னுமளவும் ஒரு வாக்யார்த்தமாகக் கொள்க.] நந்தவனங்களில் விளையாடிக் களைத்துப்போய் ஒரு திவ்ய மண்டபத்திற் சென்று வீற்றிருந்து அங்கு அப்ஸரஸ் ஸ்த்ரீகள் செவிக்கினிதாக வீணாகானம் பண்ண அதனைக் கேட்டுக் களை தீர்ந்து ஆநந்திக்கும்படி சொல்லுகிறது. அந்த மண்டபங்கள் எப்படியிருக்கின்றன வென்றால்; கீழ்த்தரையெல்லாம் ரத்னங்களழுத்தப்பட்டு அந்த ரத்நமய ஸ்தலத்திலே கட்டப்பட்டும், மாணிக்க

மயமான பூங்கொத்துக்களால் அலங்கரிக்கப்பட்டும், மின்னல் போலே பளபளவென்று விளங்குகின்ற ஸ்படிகக் கற்களாலே கொடுங்கைகள் கட்டப்பெற்றும், பவழ ஸ்தம்பங்கள் நாட்டப் பெற்றும் செம்பொன்னாற் செய்யப்பட்டு மிருக்கின்றனவாம்; அப்படிப்பட்ட மண்டபத்துள் தேவமாதர்கள் வீணை வாசிக்க, மதுரமான அப்பாடலைக் கேட்டு இன்புறுகின்றனராம்

[இருவிசும்பில் மன்னு மழை தவழும் என்று தொடங்கி அணிமுறுவ லின்னமுதம் மாந்தியிருப்பர் என்னுமளவும் ஒரு வாக்கியார்த்தமாகக் கொள்க.] வீணைகானங் கேட்டுக் களைதீர்ந்து களித்தபின்பு அத்தேவமாதர் விரித்த படுக்கைகளிலே கிடந்து போகங்களின் எல்லையான பரமபோகங்களை அநுபவித்துத் தீருகிற படி சொல்லுகிறது. ஸ்வர்க்கலோகத்து அநுபவங்களின் சரமாவதியைச் சொல்லுகிறதாகையாலே இந்த வாக்கியத்தைச் சிறிது விரிவாகச் சொல்லி முடிக்கிறார். இந்த தார்மிகர்கட்காகப் படுக்கை விரிக்கும் மாளிகை மேக மண்டலங்கள் வந்து படியப்பெற்றிருத்தலால் இருட்சியும் குளிர்ச்சியும் பொருந்தியும், சந்திரன்வந்து உறைந்திருப்பதனால் ப்ரகாசம் பொருந்தியுமிருக்கும். ஸம்போக ருசியுடையார்க்கு இருளும் வெளிச்சமும் இரண்டும் வேண்டியிருக்குமே. அப்படிக்குப் பாங்கான மாளிகையின்மேல் ரத்ன தீபங்களைத் தொங்கவிட்டு அப்ஸரஸ்ஸுக்கள் ஆச்சரியமான படுக்கையை விரிப்பார்கள்; 'உலகில் இப்படியும் ஒரு படுக்கையுண்டோ?' என்று கொண்டாடிக் கொண்டாடி நாத்தழும்பேறும்படி யிருக்குமாம் அப்படுக்கை. அதன்மேல் சயனிக்கும்போது சன்னல்கள் கதவு திறந்துகொள்ள அவ்வழியாலே இனிய தென்றற்காற்று வந்து உள்ளே வீசும்;

காற்றுக்கு உருவமில்லையாயினும் ஆழ்வார் தமது சமத்காரந் தோற்ற அதனை ஒரு மஹா புருஷன்போலத் தோற்றுவித்து வருணிக்கிறபடி பாருங்கள்;—மஹா புருஷன் வரும்போது நல்ல பூக்களைத் தலையிற் சூடிக்கொண்டும் நல்ல மாலையைத் தோளிலணிந்து கொண்டும் பின்னே சில சேவகர்கள் தொடரவும் வருவனே; அப்படியே வருகிறதாம் அந்தத் தென்றலும்: அதாவது—நீலோற்பல மலர்களின் தாதுகளைச் சூடிக்கொண்டும் பாரிஜாத மலர் மாலையைத்

தோளிலணிந்து கொண்டும் அம்மலரிலுள்ள மதுவில் நசையாலே பின் தொடர்ந்து வருகின்ற வண்டுகளாலே பின் செல்லப்பெற்றும் வருகின்ற தென்கிறார். தென்றலானது நல்ல பொய்கைகளில் வியாபித்து அங்குள்ள மலர்களின் மணத்தை ஏன்று வீசிக் கொண்டே வருகின்ற தென்றவாறு.

அப்படிப்பட்ட தென்றலானது முன் சொன்ன கதவு திறந்த சன்னல் வழியே உள்ளே புகுந்து மாதர்களின் முலைமேற்பூசியுள்ள சந்தனச்சேற்றை யுலர்த்துகின்றதாம். அத்தகைய தென்றற்காற்று இனிதாகவீசப் படுக்கையிற் படுக்கிறபடி சொல்லிற்றுகிறது. இது உடலுக்கு நேரும் ஸுகம். இனி, செவிப்புலனுக்கு நேரும் ஸுகஞ் சொல்லுகிறது—சில தேவமாதர் உல்லாஸமாக இடுப்பின்மீது கையை வைத்துக்கொண்டு முன்னே வந்து நிற்க அவர்களது முலை களின்மேல் அணியப்பட்டிருக்கின்ற காசுமாலை முதலிய ஆபரணங் கள் ஒன்றோடொன்று உறைந்து கலகலவென்று சப்திக்க, அந்த சப்தத்தாலே செவிக்கு ஆநந்தம் பெறுகிறபடி. உண்ணுஞ்சோறும் பருகும் நீரும் அவர்கட்குவேறில்லை; அத்தேவமாதர்களின் கடாக்ஷ வீக்ஷணத்தை ஓவாத ஊணாக உண்பர்; அவர்களது புன்முறுவலோடு கூடின அதராம்ருதத்தைப் பானம் பண்ணுவர்; ஆக இவ்வளவுஞ் சொல்லப்பட்ட இன்ப நுகர்ச்சியே தரும புருஷார்த்தத் திற்குப் பயனைப் பெறுவதாம். இரண்டாவதான அர்த்தம் [பொருள்] என்னும் புருஷார்த்தத்தின் பயனும் இதுவே யொழிய வேறில்லை; பொருள் படைத்தவர்கள் தருமம் செய்வார்கள்; ஆதலால் அறத்தின் பயனே பொருட்கும் பயனை முடியக்கடவதாம்.

[ஆதலால் காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்] நான்கு புருஷார்த்தங்களில் மோக்ஷமென்பது முதலிலேயே தள்ளுண்டது; தருமமும் அர்த்தமும் காமஸித்தியையே பயனைக் கொண்டன; ஆகவே, காமபுருஷார்த்த மொன்றே முக்கியம்; மற்ற அறம் பொருள்கள் இதற்குச் சேஷபூதம்—என்று இதுவரையில் நிரூபிக்கப் பட்டதாதலால் நாம் காமபுருஷார்த்தத்தையே கைக் கொள்வோமாறேம்; அது தன்னிலும் ஹேயமான விஷயாந்தரகாம மன்றிக்கே வேதாந்த விஹிதமாய் உத்தேச்யமாய் சாச்வதபலமான

பகவத்விஷய காமத்தைக் கைக்கொண்டோம் என்று ஆழ்வார் தமது உறுதியைக் கூறித்தலைக்கட்டினாராயிற்று.

"சேமநல்வீடும் பொருளுந் தருமமுஞ் சீரிய நற்காமமும் என்றிவை நான்கென்பர்—நான்கினுங் **கண்ணனுக்கேயாமது காமம்** அறம் பொருள் **வீடிதற்** கென்றுரை**த்தான்**, வாமநன் சீலன் இராமாநுச னிந்த மண்மிசையே" என்ற நூற்றந்தாதிப் பாசுரம் இங்கே நினைக்கத்தகும்.

## சில குறிப்புகள்.

**கோன்னவிலுங் கோளரி மாத்தான்** சுமந்த—மெய்யே பயங்கரமான சிங்கம் ஆஸநத்தைச் சுமந்து கொண்டிருப்பதாகப் பொருளல்ல; 'சிங்கம்தானே சுமந்து நிற்கிறதோ' என்று சங்கிக்கும்படியாக சிற்பவேலைப்பாட்டின் அமைதி உள்ளபடி. [**கவரிப் போதிய விழ்ந்து**] போதியவிழ்தலாவது—கட்டு நெகிழ்தல்; விகஸித்தல். சாமரம் வீச வீச விகஸிக்குமிறே. [**முன்னம் முகிழ்த்த**] **முன்னம்** என்று கருத்துக்குப் பெயர். நெஞ்சிற் கருத்தை ஸூசிப்பித்துக் கொண்டே புன்னகை செய்வர்களாம் பெண்டிர்கள். [**மாடெல்லாம்**] "மாடு பொன்பக்கம் செல்வம்" என்று நிகண்டு. சுற்றுப் பிரதேசங்களென்கை. **மந்தாரம்**—தேவலோகத்து ஐந்து வ்ருக்ஷங்களுள் ஒன்று; வடசொல். **மாணிக்கமஞ்சரி**—வடசொல் தொடர். ரத்னமயமான தரையிலே செம்பொன் மயமான மண்டபம் கட்டப்பட்டிருக்கிறதாம்; அதில் மாணிக்க மயமான பூங்கொத்துகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றனவாம்; ஸ்படிகக்கற்களாலே கொடுங்கைகள் கட்டப்பட்டிருக்கின்றனவாம்; பவழக்கம்பங்கள் நாட்டப்பட்டிக்கின்றனவாம். "மின்னொளிசேர் **பளிங்கு விளிம்படுத்த**" என்பதைப் **பவளக்காலுக்கு** விசேஷணமாக்கி, மாணிக்க மயமான தோரணங்கள் நிறைந்த பவளக்கால்களை யுடையதான மண்டபத்திலே என்று உரைக்கவுமாம். **ப்ரவாளம்** என்ற வடசொல் **பவள**மெனத் திரிந்தது. **மண்டபம்**—வடசொல். **அரம்பையர்**—தேவமாதர்.

[**இருவிசும்பில் மன்னுமழைதவழும்** [illegible]] **தவழும்**; **தோய், சேர், ஊரும்** என்ற நான்கும் மாளிகைக்கு விசேஷணங்

கள். சிறந்த ராஜ பவனங்கள் விமான மெனப்படும். தேவலோகத்திலுள்ள மாளிகைகளெல்லாம் ஸுக்ருத பலனைக் கிடைப்பவையாதலால் புண்யாத்மாக்களுடைய இஷ்டப்படி அங்கு எங்கும் அசைத்துக்கொண்டு போகக்கூடிய நிலைமையில் உள்ளமைபற்றி "விசும்பு ஊரும் மாளிகை" எனப்பட்டது.

சாலேகம்—வடமொழியில் ஜாலகம் என்ற பதம் கவாக்ஷ ரந்த்ரத்தைச் சொல்லும்; அச்சொல் இங்குச் சாலேக மெனத் திரிந்து வந்து 'பலகணி' என்று பொருள்பட்டது.

"நன்னறுஞ்சந்தனச் சேறுபுலர்த்த" என்ற அத்யாபகபாடம் வெண்டளை பிறழ நிற்றலாலும் வியாக்கியான விருத்தமாதலாலும் உபேக்ஷிக்கத்தக்கது. "சேறு உள்புலர்த்த" என்பதே சுத்தமான பாடம் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த வியாக்கியானத்தில் உள்புலர்த்த என்று ப்ரதீகமெடுத்து, மேலெழ வன்றியிலே அந்தப்பணிக்குக் கடவார் சிற்றாலவட்டங்கொண்டு ஆற்றுமாபோலே புலர்த்த" என்று வியாக்கியானிக்கப் பட்டுள்ளமை காண்க.

இமையாத் தடங்கண்ணார்—அநிமிஷர்களாதலால் இமைக் கொட்டுதலில்லாத கண்களையுடையவர்கள். அன்றிக்கே; இமையா—இமைக்கொட்டாமல் கண்டுகொண்டேயிருக்கத்தக்க போக்யதையையுடைய, தடங்கண்ணார்—பரந்தகண்களையுடைய ஸ்த்ரீகள் என்னவுமாம். மாந்துதல்—உட்கொள்ளுதல்.

[ஆதலால் காமத்தின் மன்னும்வழி முறையே நிற்றும் நாம்.] இதனை இரண்டு வாக்கியார்த்தமாக யோஜிப்பது நன்று; எங்ஙனே யெனில், "ஆதலால் காமத்தின் வழிமுறையே நாம் நிற்றும்" என்று ஒரு வாக்கியார்த்தம்; "ஆதலால் காமத்தின் மன்னும்வழி முறையே நாம் நிற்றும்" என்று மற்றொரு வாக்கியார்த்தம். "தருமத்திற்கும் அர்த்தத்திற்கும் காம புருஷார்த்தமே பலனைத் தேறுவதனால் நாம் காமத்திலே ஊன்றுவோம்" என்பது முதல் வாக்கியார்த்தத்தின் கருத்து; தருமத்திற்கும் அர்த்தத்திற்கும் பலனைத் தேறுகிற காமபுருஷார்த்தம் அற்பமாதலாலும் அஸ்திரமாதலாலும் நாம் [காமத்தின் மன்னும் வழிமுறையே] அநல்ப ஸ்திரமான பகவத்காம மார்க்கத்திலே ஊன்றுவோமென்பது இரண்டாவதுவாக்கி

யார்த்தத்தின் கருத்து ஆதலால் என்னுஞ் சொல் ஒன்றே இருந்தாலும் ஆவ்ருத்தியினால் இரண்டு தடவை அநுஸந்திக்கப்பட்டு இரண்டு விதமான கருத்தையுங் காட்டவற்றேயாம். நிற்றும்—தன்மைப் பன்மைவினைமுற்று. ... ... ... ... *

... ... ... மானோக்கின்
அன்ன நடையா ரலரேச ஆடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்......—

| | |
|---|---|
| [illegible]ன் நோக்கின் அன்னம் நடையார் | ‘மான்போன்ற நோக்கையும் அன்னம் போன்ற நடையையுமுடைய மாதர்கள் |
| அலர் ஏச | (உலகத்தார்) பழி தூற்றும்படி |
| ஆடவர் மேல் | புருஷர்களின் மேலே [ஆண்களை நோக்கி] |
| மன்னும் மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும் | மடலூரக் கூடாது’ என்று சொல்லுகிற ஒரு வாக்கியத்தை |
| தென் உரையில் கேட்டு அறிவது உண்டு | தமிழ்ப் பாஷையில் கேட்டு அறிந்திருக்கிறோம்; |
| யாம் அதனை தெளியோம் | அந்த வாக்கியத்தைத் தெளிவுடையதாக நாம் நினைக்கமாட்டோம்; (அது அஸங்கதம்) |
| மன்னும் வட நெறியே வேண்டினோம் | (இவ்விஷயத்தில்) சிறந்த ஸம்ஸ்க்ருத நூல்களிற் கூறிய வழியையே கைப்பற்றுவோம். |

* * *—சிறந்த காம புருஷார்த்தத்தையே நாம் கடைப்பிடிப்போம் என்றார் கீழ். தாம்பற்றின பகவத்காமம் தமக்குக் கைகூடாமையாலே அதற்காக மடலூர்வதே கதி என்பதைத் திருவுள்ளத்தில் அறுதியிட்டு, “புருஷனை நோக்கி ஸ்த்ரீகள் மடலூர்வது கூடாது” என்று தமிழர் ஒரு வரம்பு கட்டிவைத்திருக்க, ஸ்த்ரீயாகிய நீர் எங்ஙனே மடலூரப்புகுவீர்? என்று சிலர் ஆக்ஷேபிப்பதாகக் கொண்டு அவ்வாக்ஷேபத்தை அநுவதித்து அதற்கு ஸமாதானமும் அருளிச்செய்கிறார்.

மடலூர்வதென்பது நாணத்தை அறவே யொழித்துக் காதலை வெளிப்படையாக்கித் தெருவேறப் புறப்பட்டுச் செய்யுங்காரிய மாதலால், நாணத்தையே ஸர்வஸ்வமாகக் கொண்ட மாதர்கட்கு இக்காரியம் கூடவேகூடாதென்று தமிழர் மறுத்தனர்; அந்த ஸித்தாந்தத்தையே "கடலன்ன காமத்தராயினும் மாதர், மடலூரார் மற்றையார்மேல்" இத்யாதிகளால் பின்புள்ளார் வெளியிட்டனர்.

காதல் கடல்போல வளர்ந்து கிடந்தாலும் அபவாதத்துக்கு ஆஸ்பதமான மடலூர்தல் பெண்டிர்களுக்குக் கூடாதென்பது தமிழர்களின் கொள்கையாயிருந்தாலும் அதனை நான் உசிதமாகக் கொள்ளேனென்கிறார் ஆழ்வார். மடலூர்வதற்குக் காமத்தின் மிகையே அதிகாரமாதலால் அப்படிப்பட்ட காமமுள்ளவர்கள் ஆணாயிருந்தலென்? பெண்ணாயிருந்தாலென்? யாரேனும் மடலூர லாம்; ஆசையை வரம்பிட்டுக்காக்க ஆராலும் முடியாது; அரசாணைக்குக் கட்டுப்படுமோ ஆசை; வேலியடைத்தால் நிற்குமோ வேட்கை; அளவு கடந்த வேட்கையின் காரியமாக விளையக்கடவதான மடலூருகையை ஆண்கள் தாம் செய்யலாம், பெண்கள் செய்யலாகாதென ஒரு வரம்பு கட்டுவதானது பரேமத்தின் போக்கை அறியாதவர்களுடைய செயலாமத்தனை யென்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்

மன்னும் வடநெறியே வேண்டினோம் = ஸ்ரீ ராமாயணம். ஸ்ரீ மஹா பாரதம் முதலிய வட நூல்களில்—ஸீதை. உஷை முதலிய பெண்ணரசிகள் நாணந்தவிர்ந்து தத்தம் காமத்தை நன்கு வெளிப்படுத்தி யிருப்பதாகக் கூறப்பட்டிருத்தலால் என்னுடைய ஸித்தாந்தம் வடமொழி நூல் நெறிக்கு ஒக்குமென்றாராயிற்று, கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் முதலிய தமிழ் நூல்களிலும் இவ்வர்த்தம் இருந்தாலும், அவை வழிநூலேயன்றி முதனூலல்லாமை அறிக

ஆழ்வார் புருஷர்தானே, ஸ்த்ரீ அல்லரே, இவர் மடலூர்வதென்னுமுரைக்கு இணங்கியதேயன்றி விருத்தமன்றே என்று சிலர் நினைக்கக்கூடும் இவர் பிறப்பால் புருஷரேயாயினும் புருஷோத்தமனை அநுபவிக்குந் திறத்தில் ஸ்த்ரீபாவத்தை யடைந்தனராதலாலும், மேலே "என்னுடைய பெண்மையும் என்னலனும் என்

முலையும்" என்று அந்த ஸ்த்ரீபாவத்தையே விளங்கக் காட்டுகின்றனராதலாலும் இப்போது இவர்க்கு ஸ்த்ரீத்வமே உள்ளதென்க.

அப்படியே யிருந்தாலும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும் மடலூர்வேனென்று சொல்லுதல் இருபாலர்க்கும் உரியதென்றும் தமிழர் கூறுகின்றாராதலின் இப்போது ஆழ்வார் மடலூர்வேனென்று சொல்வதுமாத்திரமேயன்றி மடலூர்தலைச்செய்து முடித்தல் இல்லாமையாலே தென்னுரையோடு விரோதம் ஒன்றுமில்லையே யென்னில்; இஃது உண்மையாயினும், மடலூர்வேனென்று சொல்லுகிற வார்த்தைதானே ஆழ்வார் திருவுள்ளத்தால் மடலூர்வதாதலாலும், மடலூர்ந்தே தீர்வேனென்று இவர் சொல்வதைக்கேட்டு 'மாதராகிய நீர் எப்படி மடலூரலாம்?' என்றுகேட்பார்க்கு ஸமாதாநம் சொல்லவேண்டியிருப்பதாலும் "தென்னுரையில் கேட்டறிவதுண்டு, அதனை யாந் தெளியோம்" என்று இங்கு அருளிச் செய்யவேண்டியது அவசியமாயிற்றென்க.

இதற்குமேல் ஒன்று கேட்கலாம்;— மன்னும் வடநெறியே வேண்டினோம் என்று சொல்லிவிட்டாரே; ஸ்த்ரீகள் மடலூரலாமென்றாவது மடலூர்ந்தார்களென்றாவது எந்த ஸம்ஸ்க்ருத நூலில் சொல்லப்பட்டிருக்கிறது? மேலே அப்படிப்பட்ட ப்ரமாணம் ஒன்றும் இவர் இதில் எடுத்துக் காட்டவுமில்லை; ஆகையாலே ஆக்ஷேபத்திற்குத் தகுந்த பரிஹாரம் வரவில்லையே! என்று சிலர் கேட்கக்கூடும். இத்திருமடலின் முன்னுரையில் இவ்விஷயங்கூறினோம். [பக்கம்–5. காண்க.] ... ... ... ... ... *

... ... ... வேண்டாதார்
தென்னன் போதியில் செழுஞ்சந்த னக்குழம்பின்
அன்னதோர் தன்மை யறியாதார் ஆயன்வேய்
இன்னிசை யோசைக் கிரங்காதார் மால்விடையின்
மன்னு மணிபுலம்ப வாடாதார் பெண்ணைமேல்
பின்னுமவ் வன்றில் பெடைவாய்ச் சிறுகுரலுக்கு
உன்னி யுடலுருகி நையாதார் உம்பர்வாய்த்
துன்னு மதியுகுத்த தூநிலா நீணெருப்பில்
தம்முடலம் வேவத் தளராதார் காமவேள்
மன்னுஞ் சிலைவாய் மலர்வாளி கோத்தெய்யப்
பொன்னெடு வீதி புகாதார்......

| | |
|---|---|
| வேண்டாதார் | (அப்படி ஸம்ஸ்க்ருத நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி காமத்தின் அதிப்ரவ்ருத்தியை) விரும்பாதவர்கள் (எப்படிப்பட்டவர்களென்றால்.) |
| தென்னன் பொதியில் செழு சந்தனம் குழம்பின் அன்னது ஓர் தன்மை அறியாதார் | பாண்டிய ராஜனது நாட்டிலுள்ள பொதியமலையில்விளைகிற சந்தனத்தினாலாகிய குழம்பின் அப்படிப்பட்ட தன்மையை அறியாதவர்கள்; (விரஹத்தில் 'சந்தனம் நெருப்பு' என்றறியாதே அதைப்பூசிக்கொண்டு குளிர்ச்சியாயிருக்கும் ஸாஹஸிகர்களென்றபடி.) |
| ஆயன் வேய் இன் இசை ஓசைக்கு இரங்காதார் | இடையன் ஊதுகிற புல்லாங்குழலின் இனிய கானத்வனியைக் கேட்டுத் தளராதே யிருப்பவர்கள்; |
| மால் விடையின் மன்னு மணி புலம்ப வாடாதார் | (பசுவின் மேலே) வ்யாமோஹித்து வருகிற காளையின் சிறந்த(கழுத்தின்) மணியானது ஒலி செய்ய அதனைக் கேட்டுஇரங்காதே யிருப்பவர்கள்; |
| பெண்ணை மேல் பின்னும் | பனை மரத்தின் மீது ஆணோடே வாயலகு கோத்துக் கொண்டிருக்கிற |

| | |
|---|---|
| அவ் அன்றில் பெடை வாய் சிறு குரலுக்கு | அன்றிற் பறவையின்பேடையினதுவாயில்நின்றுமுண்டாகிற அப்படிப்பட்ட சிறு குரலைக்கேட்டு |
| உன்னி | தமது நாயக விரஹத்தை நினைத்து |
| உடல் உருகி நையாதார் | சரீரம் கரைந்து சிதிலராகாதவர்கள்; |
| உம்பர் வாய் | ஆகாசத்திலே |
| துன்னு மதி உகுத்த | நெருங்கிய (கிரணங்களையுடைய) சந்திரன் சொரிந்த |
| தூ நிலா நீள் நெருப்பில் | நிர்மலமான நிலாவாகிற பெருநெருப்பில் |
| தம் உடலம் வேவ தளராதார் | தங்களுடைய சரீரம் வெந்து போம்படி சிதிலராகாதவர்கள்;(இப்படிப்பட்ட அரஸிகர்கள் யாரென்னில்;) |
| காமவேள் சிலைவாய் மன்னும் மலர் வாளி கோத்து எய்ய பொன் நெடு வீதி புகாதார் | மன்மதன் தனது வில்லிலே பொருந்திய புஷ்பபாணங்களைத் தொடுத்துப் பிரயோகிக்கச் செய்தே (இனி மடலூர்வதே புருஷார்த்தமென்றுகொண்டு) அழகிய பெரிய வீதிகளிலே புறப்படாதவர்கள் எவரோ, அவர்கள் |

* * *—எல்லை கடந்த காமமுடையவர்கள் லஜ்ஜையை விட்டுக் கதறியாகிலும் அபிமதத்தைப்பெற்றுத் தீரவேண்டும்-என்கிற என் கொள்கையைப் பின் செல்லாமல், 'ஸ்த்ரீயாகப் பிறந்து வைத்து நாணத்தை விடுவதென்பது எங்காவது உண்டா' என்று நினைத்து வாயடைத்துக் கிடக்கப் பார்க்கிறவர்கள் அரஸிகர்களில் கடைகெட்ட அரஸிகர்களென்கிறார்.

[தென்னன் பொதியில் இத்யாதி] தென்னனுகிறான்—தெற்குத் திசைக்குத் தலைவனாய் மலயத்வஜனென்று பெயரையுடையனான பாண்டியன்; அவனுடையதான யாதொரு பொதியமலையுண்டு—மலயபர்வதம், அதில் விளைகிற சந்தனத்தினுலாகிய குழம்பின் தன்மையை அறியாதவர்கள் என்கை. நாயகனைப் பிரிந்து தனியிருக்கும் ஸமயத்திலே சந்தனக்குழம்பை உடம்பிலே பூசிக்கொள்ளும் மாதர் நெருப்பை யணைந்தாற்போலே தபிக்கப்பட்டு வருந்தவேண்டியது முறைமை; அங்ஙனம் வருந்தாதே 'ஹா ஹா! சந்தனச்சேறு என்ன குளிர்த்தியாயிருக்கிறது!, அதிபோக்யம்!! பரமபோக்யம்!!!' என்று உகந்து பேசும்படியான அரஸிகர்கள் என்றதாயிற்று. ஆகவே, சந்தனக்குழம்பின் அன்னதோர் தன்மை யாவது—விரஹத்தில் சந்தனத்துக்குண்டான தாஹகத்வம்; அதனை யறியாதவர்கள்—'சந்தனம் சைத்யோபசாரத்திற்கு ஏற்ற வஸ்து' என்று கொள்ளும் அறிவிலிகள்; அவர்கள் அரஸிகர்களேயிறே.

பொதியில் = பொதி என்றும், பொதியில் என்றும் மலயமலைக்குப்பெயர்; இங்கு இல் என்பது சொல்வடிவமாகவுமாம், ஏழாம் வேற்றுமையுருபாகவுமாம்.

ஆயன்வே யின்னிசை யோசைக் கிரங்காதார் = விரஹ காலத்தில் வேய்ங்குழலோசை [வேணுநாதம்] காதிற்பட்டால் உள்ளமுருகிச் சுருண்டு விழுவது முறைமை; அப்படி தளராமல் 'குழலோசை செவிக்கு இனிதாயிருக்கிறது, நல்ல ராகத்தில் வாசிக்கப்படுகிறது; லக்ஷணத்தில் வழுவில்லாமல் ஸல்லக்ஷணமாயிருக்கிறது' என்று சொல்லித் தரித்திருப்பவர்கள் அரஸிகர்களேயாவர். குழலூதுவது இடையர்க்குச் சியியல்வாகையால் ஆயன்வேய் எனப்பட்டது.

மால்விடையின் மன்னு மணிபுலம்ப வாடாதார் = ஊராமாட்டுக்களின் கழுத்திலே தொங்கவிடப்பட்டுள்ள மணிகளின் ஒலியானது விரஹிஸ்த்ரீகளுக்கு உத்தீபகம்; மாடுகள் காடுகளிலே மேய்ந்துவிட்டு ஸூர்யாஸ்தமன ஸமயத்திலே ஊரினுள்ளே புகும்போது ஆநந்தமாகத் துள்ளிக்கொண்டு வருகையாலே உண்டாகின்ற அந்த மணியோசையானது கலவிக்கு ஏகாந்தமான இராக்காலத்தை நினைப்பூட்டி வருந்தச்செய்யும்; "கனையா ரிடிகுரலுங் கார்மணியின் நாவாடல், தினையேனும் நில்லாது தீயிற்கொடிதாலோ" என்று பெரிய திருமொழியிலும், "மாலைவாய்த் தன்னுடைய நாவொழியாதாடுந் தனிமணியின், இன்னிசை யோசையும் வந்தென் செவிதனக்கே, கொன்னவிலு மெஃகில் கொடிதாய் நெடிதாகும்" என்று இத்திருமடலிலும் இவர்தாமே அருளிச்செய்தது காண்க. மால்விடையின் மணிபுலம்ப அதனைக்கேட்டு வாடாதவர்கள் எப்படி அரஸிகர்களோ அப்படியே இவர்களும் அரஸிகர்கள் என்றதாயிற்று.

[பெண்ணைமேல் பின்னு மவ்வன்றில் பேடைவாய்ச் சிறுகுரலுக்கு உன்னியுடலுருகி நையாதார்.] அன்றில் என்பது ஒரு பறவை; அது பெரும்பாலும் பனைமரத்தில் வாழும்; அது எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணை பிரியாது நிற்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறுமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்றுதரம் கத்திக்கூவி அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும்; இப்பறவையை வடநூலார் க்ரௌஞ்சம் என்பர்; ஆணும் பெண்ணுமான அந்த அன்றிற்பறவை இணை பிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக்கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்திலே வாயலகு தன்னில் நெகிழ்ந்த வளவிலே துயிலுணர்ந்து அப்பிரிவைப் பொறுமல் மெலிந்து பெருந்தொனியாகக் கத்துகிற மிக இரங்கத்தக்க சிறுகுரல் காமோத் தீபகமாய்ப் பிரிவாற்றாமைத்துயரை வளர்த்து விரஹிகளை மிகவருத்தும்; அதற்கு வருந்தாதவர்கள் அரஸிகர்களேயாவர்.

[உம்பர்வாய்த் துன்னுமதியுகுத்த தூநிலா நீணெருப்பில், தம் முடலம் வேவத் தளராதார்.] "பேவுதண்மதியம் வெம்மதிய

மாலோ" (திருவாய்மொழி) என்றபடி விரஹிகளுக்குச் சந்திர கிரணங்கள் நெருப்பைவாரி எறிந்தாற்போலேயிருக்கவேண்டும்; நிலா, மேலே பட்டவாறே தீக்கதுவினாற்போலே நொந்து கூக்குரலிட வேண்டும்; அப்படி யன்றி, குளிர்ந்த நிலா கிடைத்ததென்று மகிழ்ந்து அதிலே படுக்கையை விரித்துப் படுக்கவல்லார் அரஸிகர்களேயாவர்.

முதலிலே, **வேண்டாதார்** என்றாரே, அதற்குப்பொருள் விவரிக்கிறார்—**காமவேள் + வீதி புகாதார்** என்பதனால். மன்மதன் தனது வில்லிலே புஷ்ப பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்த வளவிலும் "நவ யௌவந ஸ்த்ரீகளா யிருந்து வைத்து நாணங் காக்க வேணுமேயன்றி லஜ்ஜையைவிட்டுத் தெருவிலே புறப்படலாமோ" என்று தத்துவம் பேசியிருப்பவர்கள்-சந்தனக் குழம்பின் தன்மை யறியாதார், ஆயன்வேய் இன்னிசை யோசைக்கிரங்காதார், விடையின் மணிபுலம்ப வாடாதார், அன்றில் பெடைவாய்ச்சிறுகுரலுக்கு உருகி நையாதார், மதியுகுத்த தூநிலா நீணெருப்பில் தளராதார்,-[இப்படிப்பட்ட அரஸிக சிகாமணிகளாவர்] என்றதாயிற்று. *

... ... ... தம்பூவணைமேல்
சின்ன மலர்க்குழலு மல்குலு மென்முலையும்
இன்னிள வாடை தடவத்தாங் கண்டுயிலும்
பொன்னனையார் பின்னுந் திருவுறுக......

| | | | |
|---|---|---|---|
| தம் பூ அணை மேல் | தங்களுடையபுஷ்ப சயனத்தின்மீது | இன் இள வாடை தடவ | இனிதாய் இளையதாயுள்ள வாடைக்காற்றானது வந்து தடவ |
| சின்னம் மலர் குழலும் | துகள்களையுடைய புஷ்பங்களையணிந்த கூந்தலையும் | கண் துயிலும் | (ஆநந்தமாகத்) தூங்குகின்ற |
| அல்குலும் | நிதம்பத்தையும் | பொன் அனையார் தாம் | ஸ்த்ரீகளானவர்கள் |
| மெல் முலையும் | மெல்லிய முலையையும் | பின்னும் திரு உறுக | மேன்மேலும் மேனியழகு மேலிட்டு விளங்கட்டும். |

* * *—பல மாதர்கள் நாயகனைப்பிரிந்த காலத்தும் சிறிதும் வாடாமல் வருந்தாமல் புஷ்பங்களினால் படுக்கை அமைத்துக்

கொண்டு அதன்மேலே ஸுகமாகப் படுத்துக்கொண்டு நமது கூந்தலையும் அல்குலையும் முலையையும் வாடைக் காற்று வந்துவீசி இனிமைப்படுத்த இனியராய்க் கிடப்பர்கள்; அவர்கள் நெருப்பிலே கிடந்து நிறம் பெறுவர்கள் ; காட்டுத்தீக் கதவினுலும் லக்ஷியம் பண்ணுமல் உறங்க வல்லவர்கள் ; அவர்கள் [பின்னும் திரு உறுக.] நாயகனைப் பிரிந்து நிறமழியவேண்டியிருக்க, விரஹமே வினைநீராக மேன்மேலும் அழகுஞ் செல்வமும் அதிகமாகப் பெறுவார்களாகில் அப்படியே பெற்றிடுக ; அப்படிப்பட்ட கல் நெஞ்சு எனக்கில்லை ; தலைவனை ஒரு நொடிப்பொழுது பிரிந்தாலும் "மென் மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ" என்று கதறிக்கொண்டு நாண் மடமச்சங்களை விட்டு நெடுந்தெருவே புறப்பட்டு நான் மடலூர்வனையன்றி 'ஒழிந்த பாவி அப்படியே ஒழியாளு' என்று சிந்தித்துக்கொண்டு ஸுகமாக வாழ்பவர்களைப்போலே வாழமாட்டேன் என்றதாயிற்று.

சின்னமலர்க்குழலும் = சின்ன மலர்—விரிந்த புஷ்பங்களையுடைய என்றுமாம் "சின்னம்—விரிகை" என்று வியாக்கியானம். பொன்னனையார்—பொன் போன்ற மேனியையுடையவர்கள்—மாதர்கள். பொன்னானது நெருப்பிலே இடப்பட்டு உருவழியாமல் அழுக்கற்று நிறமும் ஒளி பெறுமாபோலே விரஹாக்நியில் வீழ்ந்தகாலத்தும் உருவழியாமல் மேன்மேலும் ஒளிபெற்று விளங்கும் பாக்கியவதிகள் என்பார் பொன்னனையார் என்றுர். திருஉறுக—உறுதலாவது அதிகப்படுதல் ; அதிகமான சோபையை அடைந்திடட்டும் என்றபடி. இது ஆக்ஷேபித்துச் சொல்லும் வார்த்தை. ... ... ... ... ... ... *

... ... ... போர்வேந்தன்
தன்னுடைய தாதை பணியா லரசொழிந்து
பொன்னகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு
மன்னும் வளநாடு கைவிட்டு மாதிரங்கள்
மின்னுருவில் $ விண்டேர் திரிந்து வெளிப்பட்டுக்
கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று
பின்னுந் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக்
கொன்னவிலும் வெங்கானத் தூடு கொடுங்கதிரோன்
துன்னு வெயில்வறுத்த வெம்பரல்மேல் பஞ்சடியால்
மன்ன னிராமன்பின் வைதேவி யென்றுரைக்கும்
அன்ன நடைய வணங்கு நடந்திலளே.

---

$ வெண்டேர் என்னவேணும்.

| | |
|---|---|
| போர் வேந்தன் | ரணசூரனாகிய இராமன் |
| தன்னுடைய தாதை பணியால் | தன் தகப்பனான தசரதனுடைய சொற்படி |
| அரசு ஒழிந்து | ராஜ்யமாள்வதைத் தவிர்ந்து (காட்டுக்குப் புறப்பட்டபோது) |
| பொன் நகரம் | அழகிய அயோத்யா புரியிலுள்ளாரடங்கலும் |
| பின்னே புலம்ப | (நீ காட்டுக்குப் போகேல் என்று) பின்னாலழுது கொண்டே வந்தபோதிலும் |
| வலம் கொண்டு | தான்கொண்ட உறுதியை விடாமற்கொண்டு |
| வளம் மன்னும் நாடு கை விட்டு | செல்வம் மிகுந்த நாட்டை உபேக்ஷித்துவிட்டு |
| மாதிரங்கள் மின் உருவின் வெண் தேர் திரிந்து | திக்குக்கள்தோறும் மின் போன்ற கானலே பரவியிருக்கப் பெற்றதும் |
| வெளிப்பட்டு | எல்லாம் சூந்ய ஸ்தலமாகவு மிருக்கப்பெற்றதும் |
| கல் நிரைந்து தீய்ந்து கழை உடைந்து கால் சுழன்று | கல்லுகள் நிறைந்து (புல்லுகள்) தீஞ்சு மூங்கில்கள் வெடித்து சுழல்காற்று அடித்துக் கொண்டிருக்கப் பெற்றதும் |
| பின்னும் | அதற்குமேலும், |
| திரை வயிறு பேயே திரிந்து உலவா | (ஆஹாரமில்லாமையால்) மடிந்த வயிற்றை யுடைய பேய்களே திரிந்துகொண்டிருக்கப் பெற்றதும் |
| கொல் நவிலும் | கொலையைப் பற்றின சப்தமே கிளம்பிக்கொண்டிருக்கப் பெற்றதுமான |
| வெம் கானத்தூடு | வெவ்விய காட்டினுள்ளே |
| கொடு கதிரோன் துன்னு வெயில் வறுத்த வெம்பரல் மேல் | உஷ்ண கிரணனான ஸூர்யனுடைய வெய்யிலாலே வறுக்கப்பட்ட வெவ்விய பருக்கைக் கற்களின்மேலே (எழுந்தருளின வளவிலே) |
| வைதேவி என்று உரைக்கும் | வைதேஹீ என்று சொல்லப்பட்டவளாய் |
| அன்னம் நடைய அணங்கு | அன்னத்தின் நடை போன்ற நடையையுடையளான ஸீதாபிராட்டியானவள் |
| மன்னன் இராமன் பின் | அந்த ஸ்ரீராம மஹாராஜன் பின்னே |
| பஞ்சு அடியால் | பஞ்சுபோல்மெல்லிய திருவடிகளாலே |
| நடந்திலளோ | தானும் நடந்து செல்லவில்லையா? |

* * *—ஆசையின் மிகுதியாலே நாணந்தவிர்ந்து நாயகன் பின்னே போவதும், நாயகனை பலாத்காரத்தாலே தனக்காக்கிக் கொள்வதும், நாயகனைப் பெறுதற்கு அரிய பெரிய ஸாதநங்களை அநுஷ்டிப்பதும் இவையெல்லாம் மடலூர்வதற்குப் பர்யாயமேயாம் என்பது ஆழ்வார் திருவுள்ளம் தமிழர்கள் ஏதோ எழுதி வைத் திருக்கிறபடி மடன்மாவேறினால் தான் மடலூர்ந்ததாக இவருடைய அபிப்ராயமில்லை; ஸ்த்ரீகளுக்கு இன்றியமையாத ஸ்வரூபமாகிய நாணத்தை நக்காத்துமரியாதை தவழுவாமல் நிற்கிறநிலைகுலைந்து நாணம் நீங்கினபடியை வெளியிடுகின்றசெயதி எதுவாயிருந்தாலும் அது மடலூர்வதொக்குமென்றுயிற்று ஆழ்வார் திருவுள்ளம்பற்றியிருப் பது. அப்படி நாணந்துறந்து அதிப்ரவ்ருத்திபண்ணின பெண்ணரசிகளின் சரித்திரம் வடமொழியில் இதிஹாஸ புராணங்களில ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதில் நாலைந்து பெண்களுடைய செய்தியை எடுத்துச்சொல்ல உத்தேசித்த ஆழ்வார், முதலில் ஸீதாபிராட்டியின் நடத்தையை எடுத்துக் காட்டுகின்றார்

கைகேயியின் சொற்படி நடக்கவேண்டியவனான தசரத சக்ரவர்த்தி இராமபிரானை யழைத்து வநவாஸஞ்செல்லுமாறு நியமிக்க அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட இராமபிரான் வனத்திற்குப் புறப்படுங் காலத்தில் ஸீதாதேவியிடஞ் சென்று * இச்செய்தியைத் தெரிவித்து 'நான் போய் வருகிறேன்; வருமளவும் நீ மாமனார்க்கும் மாமியார்க்கும் ஒரு குறைவுமின்றிப் பணிவிடை செய்து கொண்டிரு' என்று சொல்லுங்கால், தன்னை நிறுத்திப்போவதாகச் சொன்ன வார்த்தையைக் கேட்ட பிராட்டி மிகவுங் கோபித்து 'என் தகப்பனார் உம்மை ஒரு ஆண்பிள்ளையாக எண்ணி என்னை உமக்குக் கொடுத்தார்; ஒரு பெண்பெண்டாட்டியைக் கூடக்கூட்டிக்கொண்டுபோய்க் காப்பாற்றி ஆளத்தக்க வல்லமையற்றவர் நீர் என்பதை அப்போது அவர் அறிந்திலர்; இப்போது அவர் இச்செய்தியைக் கேட்டால் உம்மை நன்றாக வெகுமானிப்பர்; ஒரு பெண்பிள்ளை ஆணுடையுடுத்துவந்து நம்பெண்ணைக் கைக்கொண்டு போய்த்துக்காண்' என்று நினைப்பர்; என்று ரோஷந் தோற்ற வார்த்தை சொல்லித் தன்னையுங் கூட்டிக்கொண்டு போகவேணுமென்று நிர்ப்பந்தித்து, காட்டு வழிகளின் கொடுமையையுங் கணிசி

யாமல் காமவஸித்தியையே தலையாகக்கொண்டு போகவில்லையா? இது மடலூர்தலல்லவா? என்கிறார்.

**தாதம்** என்ற வடசொல் தாதையெனத் திரிந்தது. **வலங்கொண்டு**=ப³லம் [பலம்] என்ற வடசொல் வலமெனத்திரிந்தது. மனவலிமைச் சொல்லுகிறது. கொண்ட காரியத்தைக் குறையறத் தலைக்கட்டியே விடும்படியான அத்யவஸாயம். **மன்னும் வளநாடு**= மன்னும்—குலக்ரமமாகத் தனக்கு ப்ராப்தமான என்றுமாம். **மாதிரங்கள்**=மாதிரம் என்று ஆகாயத்துக்கும் திசைக்கும் பூமிக்கும் மற்றும் பலவற்றுக்கும் வாசகம். "விண்டோர் திரிந்து" என்று பாடம் வழங்கிவந்தாலும் வெண்டேர் என்றே உள்ளது. பிரயோகங்களும் அப்படியே. வடமொழியில் ம்ருகத்ருஷ்ணு என்று சொல்லப்படுகிற கானல், தமிழில் வெண்டேர் என்றும் பேய்த்தேர் என்றும் சொல்லப்படும்.

**வெளிப்பட்டு**=செடி மரம் முதலியவை இருந்தால் வெய்யிலுக்கு அவற்றின் நிழலில் ஒதுங்கலாமே; அப்படியொன்றுமில்லாமல் பார்த்த பார்த்த விடமெல்லாம் வெளி நிலமாயிருக்கை. **கல் நிரைந்து**—வழிமுழுதும் கற்கள் நிரம்பியிருக்கும் **தீய்ந்து** எனினும் **தீந்து** எனினும் ஒக்கும். மருகாந்தாரங்களிற் கண்ட விடமெங்கும் தீப்பற்றி எரிந்துகிடக்குமாய்த்து. **கழை**—மூங்கில். வெய்யிலின் மிகுதியினால் மூங்கில்கள் வெடித்துக்கிடக்கும். **கால்சுழன்று**— எங்கும் சூறாவளியாய்க்கிடக்கும். சூறாவளி—சுழல் காற்று; மனிசரைத் தூக்கி யெறியுங்காற்று.

**திரைவயிற்றுப்பேய்**—ஜநஸஞ்சாரமுள்ள காடாயிருந்தால் அங்குள்ள பேய்களுக்கு ஏதாவது உணவு கிடைக்கும்; வயிறும் நிரம்பியிருக்கும்; நிர்ஜநமான காடாகையாலே பேய்கள் உணவின்றிச் சுருங்கி மடிந்த வயிற்றையுடையனவாயிருக்கும். **திரிந்துலவா**= உலவுவதலாவது—உலாவுதலும் ஒழிதலும். 'திரிந்துலவா' என்றது திரிந்து மாளாத என்றபடியாய், எப்போதும் பேய்களே திரிந்து கொண்டிருக்கிற காடு என்னவுமாம்.

**வைதேவி**—ஸீதைக்கு வடமொழியில் 'வைதேஹீ' என்று பெயர்; விதேஹராஜனுன ஜநகனது மகள் என்றபடி. **அணங்கு**—தெய்வப்பெண்; "சூருமணங்கும் தெய்வப் பெண்ணே" என்பது நிகண்டு. ... ... ... ... *

பின்னும் கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணைநோக்கின்
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி யென்றுரைக்கும்
கன்னிதன் இன்னுயிராங் காதலனைக் காணாது
தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத்தான் சென்றங்கு
அன்னவனை நோக்கா தழித்துரப்பி வாளமருள்
கன்னவில்தோள் காளையைக் கைப்பிடித்து மீண்டுபோய்ப்
பொன்னவிலு மாகம் புணர்ந்திலளே......—

| | | | |
|---|---|---|---|
| பின்னும் | அது தவிரவும், | தான் சென்று | தான் பலாத்காரமாகப் புறப்பட்டுப் போய் |
| கரு நெடு கண் செம் வாய் பிணை நோக்கின் மின் அனைய நுண் மருங்குல் | கறுத்து நீண்ட கண்களையும் சிவந்த வாயையும் மான் போன்ற நோக்கையும் மின்போல் ஸூக்ஷ்மமான இடையையும் உடையவளாய் | வாள் அமருள் | பெரிய போர்க்களத்திலே |
| வேகவதி என்று உரைக்கும் கன்னி | வேகவதியென்று சொல்லப்படுபவளான ஒரு பெண் பிள்ளை | கல் நவில் தோள் காளையை | மலைபோல் திண்ணிய தோளையுடையனும் காளைபோல் செருக்குற்றிருப்பவனுமான தனது காதலனை |
| தன் இன் உயிர் ஆம் காதலனை காணாது | தனது இனிய உயிர் போன்ற கணவனைத்தான் காணவொட்டாமல் | அழித்து உரப்பி | இழிவான சொற்களைச் சொல்லி அதட்டி |
| தன்னுடைய முன் தோன்றல் கொண்டு ஏக | தனது தமையன் (தடுத்துத்) தன்னைக் கொண்டுபோக | கை பிடித்து | பாணிக்ரஹணம் செய்துகொண்டு |
| அங்கு | அவ்வவஸ்தையிலே | மீண்டும் போய் | அங்கிருந்து ஸ்வஸ்தானத்திலே போய்ச் சேர்ந்து |
| அன்னவனை | அந்தத் தமையனை | பொன் நவிலும் ஆகம் | (அக்காதலனுடைய பொன் போன்ற) மார்பிலே |
| நோக்காது | லக்ஷியம் பண்ணாமல் | புணர்ந்திலளே | அணையப் பெற்றாளில்லையோ? |

* * *—வேகவதி என்பாளொரு தெய்வமாதின் சரிதையை எடுத்துக் காட்டுகிறார் இதில். சிறிய திருமடலிற் சொல்லப்பட்ட வாஸவதத்தையின் சரித்திரத்துக்கு மூலமாகிய புராணம் இன்ன

தென்று தெரியாததுபோலவே இவ்வேகவதியின் சரிதைக்கு மூலமான புராணமும் இன்னதென்று தெரியவில்லை. தமிழ்நாடுகளில் ப்ரஸித்தமான பெருங்கதை என்ற தொகுதியில் உதயணன் சரித்திரப் பகுதியில் இத்தெய்வமாதுகளின் வரலாறு ஒருவிதமாக எழுதப்பட்டுள்ளது. வடமொழியிலும் கதாஸரித்ஸாகரம் என்ற கதைப்புத்தகத்தில் இவர்களின் சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது. பிற்காலத்தவர்கள் எழுதிய அப்புத்தகங்களை ஆழ்வார் ஸ்ரீஸூக்திகட்கு மூலமாகச்சொல்லவொண்ணாது. கதைப்போக்கிலும் வேறுபாடு உள்ளது போலும். ஆகையாலே இக்கதையை இங்கு விரித்துரைக்க விரும்புகின்றிலோம்

அழகிற் சிறந்த வேகவதி என்னுமோர் தேவகன்னிகை தனது கணவன் முகத்திலே தான் விழிக்கவொண்ணாதபடி தன்னைத் தனது தமையன் தடைசெய்து இழுத்துக்கொண்டுபோக, அவள் அவனை லக்ஷியம் பண்ணாமல் திரஸ்கரித்து உதறித் தள்ளிவிட்டுத் தனது காதலன் ஒரு போர்க்களத்திலே யுத்தம் செய்துகொண்டிருப்பதாகத் தெரிந்து அங்கே போய் 'இப்படிதானா என்னை நீ கைவிட்டுத் திரிவது!' என்று தார்க்காணித்து அந்தப் போர்க்களத்திலே பலருமறிய அவன் கையைப் பிடித்திழுத்துத் தன்னூர்க்குக் கொண்டு சென்று இஷ்டமான போகங்களை அநுபவித்து வாழ்ந்தாள்—என்பதாக இவ்விடத்தில் கதை ஏற்படுகிறது. இதன் விரிவை வல்லார் வாய்க் கேட்டுணர்க முன் தோன்றல்—முன்னே பிறந்தவன் ... ... ... ... ... ... *

... ... .. பூங்கங்கை
முன்னம் புனல்பரக்கும் நன்னாடன் மின்னாடும்
கொன்னவிலும் நீள்வேல் குருக்கள் குலமதலை
தன்னிகரொன் றில்லாத வென்றித் தனஞ்சயனைப்
பன்னாக ராயன் மடப்பாவை பாவைதன்
மன்னிய நாணச்சம் மடமென் றிவையகலத்
தன்னுடைய கொங்கை முகநெரியத் தானவன்றன்
பொன்வரை யாகந் தழீஇக்கொண்டு போய்த்தனது
நன்னகரம் புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும்
முன்னுரையிற் கேட்டறிவ தில்லையே......—

| | |
|---|---|
| பூ கங்கை புனல் முன்னம் பாக்கும் நல் நாடன | அழகிய கங்காநதியின் தீர்த்தம் முன்னே ப்ரவஹிக்கப் பெற்ற சிறந்த நாட்டுக்குத் தலைவனும் |
| மின் ஆடும் கொல் நவிலும் நீள் வேல் | ஒளியை யுடையதும் கொலைத் தொழிலைக் கற்றதும் நீண்டதுமான வேலாயுதத்தைக் கையிலே உடையவனும் |
| குருக்கள் குலம் மதலை | குருராஜ வம்சத்தில் தோன்றினவனும் |
| தனக்கு நிகர் ஒன்று இல்லாத வென்றி | ஒப்பற்ற வெற்றி பொருந்தினவனுமான |
| தனஞ்சயனை | அர்ஜுநனை |
| பனங்கரா யன மடம் பாவை | கௌரவயனென்னும் ஸர்ப்பராஜனுடைய—மடமை பொருந்திய பெண்ணான உலூபியென்பவள் |
| பாவைதன மன்னிய நாண் அச்சம் மடம் என்று இவை அகல | ஸ்த்ரீத்வத்திற்குப் பொருந்தின நாண் மடமச்சம் முதலிய குணங்கள் நீங்கப்பெற்று |
| தனனுடைய கொங்கை முகம் நெரிய | தனது கொங்கையின் முகம் நெறிக்கப்பெற்று |
| தானே | (வெட்கத்தை விட்டுத்) தானாகவே |
| நயந்து | ஆசைப்பட்டு |
| அவனை தனை | அவ்வர்ஜுநனுடைய |
| பொன்வரை ஆகம் | அழகிய மலை போன்ற மார்பை |
| தழீஇக் கொண்டு | ஆலிங்கனஞ் செய்து கொண்டு |
| தனது நல் நகரம் போய்புக்கு | தனனுடைய அழகான ஸ்தானத்திலே [நாகலோகத்திலே] போய்ச் சேர்ந்து |
| இனிது வாழ்ந்ததுவும் | ஆநந்தமாக வாழ்ந்தாளென்பதையும் |
| முன உரையில் கேட்டு அறிவது இல்லையே | மறைபாரதத்தில் நீங்கள் கேட்டறிந்ததில்லையோ?. |

* * *—அர்ஜுநன் தீர்த்தயாத்திரையாகச் செல்லும்போது ஸ்நாநஞ் செய்யக் கங்கையில் இறங்கி நீராடிக் கரையேறப் புகும்போது உலூபி யென்னும் நாக கன்னிகை இவனைக்கண்டு காம மோஹமடைந்து ரமிக்க விரும்பி இவனைத் தண்ணீரினுள்ளே இழுத்துக்கொண்டு செல்ல இவனும் உள்ளே சென்று 'நீ யார்? என்னை எதுக்காக இங்கே கொணர்ந்தாய்?' என்று கேட்க, அவ்

வுலூபி 'ஐராவத குலத்திற் பிறந்த கௌரவ்யனென்னும் ஸர்ப்ப ராஜனுடைய பெண் நான்; உன்னைக் கண்டவாறே மன்மத பாணங்களுக்கு இலக்கானேன்; எப்படியாவது நீ என்னைப் புணர்ந்து மகிழ்விக்கவேணும்' என்று வேண்ட; அதற்கு அர்ஜுநன் 'அம்மா! நான் இப்போது ஸம்வத்ஸர ப்ரஹ்மசர்ய வ்ரதத்தில் நிஷ்டனாயிருக்கின்றேன்; ஆகையால் எங்ஙனே புணர்ச்சி செய்வேன்? உனது விருப்பை நிறைவேற்ற வேணுமென்கிற ஆசையும் எனக்கு உளது; என்செய்வேன்? என் விரதமும் கெடாமல் உன் விருப்பமும் பழுதுபடாமல் காரியமாகும்படியான உபாயத்தை நீயே சொல்' என்ன; அதற்கு அவ்வுலூபிகை 'உன் விரதத்தின் வரலாறு எனக்குத் தெரியும்; நான் காம நோயைத் தாங்க முடியாது உன்னைச் சரணமடைகின்றேன்; அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடுதல் அதர்மமன்றோ; என்னை ரக்ஷிப்பதற்காக நீ புணர்ச்சி செய்வாயாகில் இது உன் விரதத்தைக் கெடுக்கமாட்டாது; என்னைக் கைவிடுவாயாகில் இப்போதே என் உயிர் அற்றொழியும்படி பாராய்' என்று மிக்க ஆர்த்தியுடன் சொல்ல, அர்ஜுநன் அதற்கிணங்கி அன்றிரவு அவளோடே கலந்திருந்து இராவாந் என்கிற அழகிய ஒரு புத்திரனையும் அவளிடத்திற் பிறப்பித்து மீண்டு சென்றான்—என்கிற கதை மஹா பாரதத்தில் ஆதிபர்வத்தில் இருநூற்று முப்பத்திரண்டா மத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

குருக்கள் குலமதலை—பரத வம்சத்திற் பிறந்த குரு என்னும் அரசனது மரபில் தோன்றினவர்கள் பாண்டவர்களும் துரியோதநாதியரும். தனஞ்சயன்—அர்ஜுநனுடைய நாமங்கள் பலவற்றுள் ஒன்று.

பந்நகம் என்ற வடசொல் பாம்பு என்று பொருள்படும்; பத்—காலாலே, ந கः—நடவாதது; உரகமாதலால் மார்பாலே ஊர்ந்து செல்வது என்று பொருள்; அச்சொல் இங்கு பன்னகமென நீண்டு கிடக்கிறது. 'பன்னகராயன்' என்றே பாடமிருந்தாலும் தளை பிறழாது; ஆயினும் பன்னகராயனென்றேபாடமாம் பாவை-சித்திரப் பதுமை; உவமையாகு பெயரால் ஸ்த்ரீயைக் குறிக்கும். இங்கு பிரகரணம் நோக்கிப் புத்திரியைக் குறித்தது. பாவை தன் மன்னிய என்ற விடத்துள்ள பாவை என்னுஞ்சொல் ஸ்த்ரீத்வத்தைக் குறிக்

கும். நாண் மடம், அச்சம், பயிர்ப்பு என்று ஸ்த்ரீகளுக்கு உரிய குணங்கள் நான்கு; இவற்றுள் நாணமாவது—தகாத காரியத்தில் மனமொடுங்கி நிற்பது; கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமையுமாம். மடமாவது—எல்லாமறிந்தும் அறியாதுபோலிருத்தல். அச்சமாவது—மிகச் சிறிய காரணத்தினாலும் மனம் நடுங்குதல். பயிர்ப்பாவது—பரபுருஷர்களின் ஆடை முதலியன தம்மேற்பட்டால் அருவருப்புக்கொள்வது. ... ... ... *

... ... ... சூழ்கடலுள்
பொன்னகரஞ் செற்ற புரந்தரனோ டேரொக்கும்
மன்னவன் வாண னவுணர்க்கு வாள்வேந்தன்
தன்னுடைய பாவை யுலகத்துத் தன்னொக்குங்
கன்னியரை யில்லாத காட்சியாள் தன்னுடைய
இன்னுயிர்த் தோழியா லெம்பெருமா னீன்றுழாய்
மன்னு மணிவரைத்தோள் மாயவன் பாவியேன்
என்னை யிதுவிளைத்த ஈரிரண்டு மால்வரைத்தோள்
மன்னவன்றன் காதலனை மாயத்தாற் கொண்டுபோய்க்
கன்னிதன் பால்வைக்க மற்றவனோ டெத்தனையோர்
மன்னிய பேரின்ப மெய்தினாள்......—

| | |
|---|---|
| சூழ் கடலுள் | பரந்த கடலினுள்ளே |
| பொன் நகரம் செற்ற | ஹிரண்யாஸுரனுடைய நகரங்களை அழித்தவனை |
| புரந்தரனோடு ஏர் ஒக்கும் | தேவேந்திரனோடு ஒத்த செல்வமுடையனை |
| மன்னவன் | ராஜாதிராஜனையும் |
| அவுணர்க்கு வாள் வேந்தன் | அசுரர்களுக்குள் பிரஸித்தனை தலைவனையுமிருந்த |
| வாணன் தன்னுடைய பாவை | பாணாஸுரனுடைய மகளாய் |
| உலகத்து தன் ஒக்கும் கன்னியரை இல்லாத காட்சியாள் | எவ்வுலகத்திலும் தன்னோடொத்த மாதர்கள் இல்லையென்னும்படி அழகிற் சிறந்தவளான உஷை யென்பவள் |
| தன்னுடைய இன் உயிர் தோழியால் | தனது ப்ராண ஸகியான சித்ரலேகை யென்பவளைக் கொண்டு |
| ஈன் துழாய் மன்னு மணி வரை தோள் மாயவன் | போக்யமான திருத்துழாய் மாலை யணிந்த ரத்ன பர்வதம்போன்ற திருத்தோள்களை யுடைய ஆச்சரிய பூதனும் |

| | |
|---|---|
| பாவியேன் என்னை இது விளைத்த ஈர் இரண்டு மால் வரை தோள் மன்னவன் | பாவியான என்னை இப்பாடு படுத்துகின்ற பெரிய மலைபோன்ற நான்கு புஜங்களையுடைய ராஜாதிராஜனுமான |
| எம்பெருமான் தன் | கண்ணபிரானுடைய |
| காதலனை | அன்புக்கு உரியவனை (பௌத்திரனை) அநிருத்தாழ்வானை |
| மாயத்தால் கொண்டு போய் கன்னி தன்பால் வைக்க | (யோக வித்தைக்கு உரிய) மாயத்தினால் எடுத்துக்கொண்டு வந்து தன்னிடத்தில் சேர்க்கப்பெற்று |
| மற்றவனோடு | அந்த அநிருத்தனோடே |
| எத்தனை ஓர் மன்னிய பேர் இன்பம் எய்தினாள் | பலவிதமாய் ஒப்பற்ற அமர்ந்த பெரிய ஸுகத்தை அநுபவித்தாள். |

—***—பலிசக்கரவர்த்தியின் ஸந்ததியிற்பிறந்தவனான பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியதாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிக்க ஆசை பற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, 'அவனைப்பெறுதற்கு உபாயஞ்செய்ய வேண்டும்' என்று அத்தோழியை வேண்ட. அவள் தன் யோக வித்தை மஹிமையினால் த்வாரகைக்குச்சென்று அநிருத்தனைத் தூக்கிக் கொண்டுவந்து அந்தஃபுரத்திலேவிட உஷை அவனோடு போகங்களை அநுபவித்து வந்தாள் என்கிற கதை அறியத்தக்கது.(இதற்கு மேல் நடந்த வரலாறு வாணனைத் தோள்துணித்த வரலாற்றில் காணத்தக்கது.)

பொன்னகரம் செற்ற = ஹிரண்யாஸுரனுக்குத் தமிழில் பொன் என்று பெயர் வழங்குதலால் 'பொன்னகரம்' என்று அவ்வஸுரனுடைய பட்டணங்களைச் சொல்லுகிறது. புரந்தர: என்ற வட சொல்(பகைவருடைய)பட்டணங்களை அழிப்பவன் என்றுபொருள் பட்டு இந்திரனுக்குப் பெயராயிற்று.

உஷையின்வரலாறுசொல்லப்புகுந்து அவ்வரலாற்றில் அநிருத்தனைப்பற்றிக் கண்ணபிரானுடைய ப்ரஸ்தாவம் வருதலால் தனது வயிற்றெரிச்சல் தோன்ற விசேஷணமிடுகிறாள் பரகாலநாயகி. அழ

கிய திருத்துழாய் மாலையை அணிந்துகொண்டிருந்தும் என்னை அநுபவிக்க வொட்டாமல் இப்படி மடலெடுக்கும்படி பண்ணின மஹாநுபாவன் என்கிறாளாயிற்று.

கன்னிதன்பால்—தெய்வப் பெண்ணாகிய தன்னிடத்திலே என்கை

மன்னிய பேரின்ப மெய்தினாள்—உவைஅநுபவித்தது சிற்றின்பமேயாயினும், அதனில் மேற்பட்ட ஆநந்தமில்லை யென்று அவள் நினைத்திருந்தது கொண்டு மன்னிய பேரின்ப மென்றார். *

.... ... ... மற்றிவைதான்
என்னாலே கேட்டீரே ஏழைகா ளென்னுரைக்கேன்
மன்னு மலையரையன் பொற்பாவை வாணிலா
மின்னு மணிமுறுவல் செவ்வா யுமையென்னும்
அன்ன நடைய வணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத்
தன்னுடைய கூழைச் சடாபாரந் தான்தரித்தாங்கு
அன்ன வருந்தவத்தி னூடுபோய் ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து மாதிரங்கள்
மின்னி யெரிவீச மேலெடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலக மேழுங் கடந்தும்பர் மேற்சிலும்ப
மன்னு குலவரையும் மாருதமுந் தாரகையும்
தன்னி னுடனே சுழலச் சுழன்றாடும்
கொன்னவிலும் மூவிலைவேற் கூத்தன் பொடியாடி
அன்னவன்றன் பொன்னகலஞ் சென்றாங் கணைந்திலளே
பன்னி யுரைக்குங்காற் பாரதமாம்......—

| | | | |
|---|---|---|---|
| ஏழைகாள் | அவிவேகிகளே! | மன்னு மலை அரையன் பொன் பாவை | (சலிப்பிக்க வொண்ணாமல்) நிலைநின்ற பர்வதராஜனான ஹிமவானுடைய சிறந்த பெண்ணாய் |
| மற்று இவை தான் என்னாலே கேட்டீரே | இன்னும் இப்படிப் பட்ட உதாஹரணங்களை என்னைக் கொண்டே கேட்கவிருக்கிறீர்களோ? | வாள் நிலா மின்னு மணி முறுவல் செம் வாய் | ஒளிபொருந்திய நிலாப்போல் விளங்குகின்ற அழகிய புன்னகையையுடைய சிவந்த அதரத்தையுடையளாய் |
| என் உரைக்கேன் | (உங்களுக்கு) எவ்வளவு சொல்லுவேன்? (இன்னும் ஒரு உதாஹரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்:) | | |

உமை என்னும் — 'உமா' என்னும் பெயரை யுடையளாய்

அன்னம் நடைய அணங்கு — அன்ன நடையை யுடையளான (பார்வதி யென கிற) தெய்வப் பெண்ணனவள்

தன்னுடைய கூழை — தனது மயிர் முடியை

சடாபாரம் தான் தரித்து — தானே ஜடா மண்டலமாக்கித் தரித்துக் கொண்டு

நுடங்கு இடைசேர் பொன் உடம்பு வாட — துவண்ட இடையோடு சேர்ந்த அழகிய உடம்பு வாடவும்

புலன் ஐந்தும் நொந்து அகல — இந்திரியங்கள் ஐந்தும் வருந்தி நீங்கவும்

அன்ன அரு தவத்தின் ஊடு போய் — அப்படிப்பட்ட அருமையான தபஸ்ஸைச் செய்து முடித்து

(என்னபேறு பெற்றாளென்றால்)

ஆயிரம் தோள் மன்னு கரதலங்கள் மட்டித்து — (சிவன் தனது) ஆயிரம் புஜங்கள் பொருந்திய கைகளை(த் திசைகளிலே) வியாபிக்கச் செய்து,

மாதிரங்கள் மின்னி எரி வீச — திக்குகள் மின்னி நெருப்புப்பொறி கிளம்பும்படியாக

மேல் எடுத்த — மேற்புறமாகத் தூக்கின

கழல் சூழ் கால் — வீரக்கழலணிந்த ஒரு பாதமானது

பொன் உலகம் ஏழும் கடந்து — மேலுலகங்களை யெல்லாம் அதிக்கிரமித்து

உம்பர் மேல் சிலும்ப — மேலே மேலே ப்ரஸரிக்கும்படியாக (ஒற்றைக்காலை உயரத்தூக்கி,)

மன்னு குலம் வரையும் மாருதமும் தாரகையும் தன்னினுடனே சுழல — ஸ்திரமாக நிற்கிற குலபர்வதங்களும் காற்றும் நக்ஷத்திரங்களும் தன்னோடு கூடவே சுழன்றுவர

சுழன்று ஆடும் — தான் சுழன்று நர்த்தனஞ்செய்பவனும்

கொல் நவிலும் மூ இலை வேல் — கொலைத்தொழில் புரிகின்ற மூன்று இலைகளை யுடைத்தான சூலத்தை யுடையவனும்

கூத்தன் — கூத்தாடியென்று ப்ரஸித்தனும்

பொடியாடி — பஸ்மதாரியென்று ப்ரஸித்தனுமான

அன்னவன் தன — அப்படிப்பட்ட சிவபிரானுடைய

பொன் அகலம் சென்று அணைந்திலளோ — அழகிய மார்பைக்கிட்டி ஆலிங்கனஞ் செய்துகொள்ள வில்லையா?

பன்னி உரைக்குங் கால் — (இப்படிப்பட்ட உதாஹரணங்களை இன்னும்) விஸ்தரித்துச் சொல்லுகிற பக்ஷத்தில்

பாரதம் ஆம் — ஒரு மஹாபாரதமாய்த் தலைக் கட்டும்.

* * *—நாண்மட மச்சங்களைத் தவிர்ந்து அதிப்ரவ்ருத்தி பண்ணி நாயகனைப் புணர்ந்தவர்கள் ஒருவரிருவரல்லர்; பல்லாயிரம் பேர்களுண்டு; இங்கே சில மாதர்களை எடுத்துக் காட்டினேன்; இன்னும் எத்தனை பேர்களை நான் காட்டுவது. இவ்வளவு உதாஹரணங்கள் போராதா? ஆயினும் இன்னும் ஒரு பெரியாள் மடலூர்ந்தபடியைச் சொல்லி முடிக்கிறேன், கேளுங்கள்—என்று பரமசிவனைப் பெறுதற்குப் பார்வதி தவம் புரிந்தபடியைப் பேசுகிறாள்.

தக்ஷப்ரஜாபதி யென்பவர்க்குப் பெண்ணாகப் பிறந்து, ஸதீ என்ற பெயரோடிருந்தாள் பார்வதி. அந்த தக்ஷப்ரஜாபதியானவர் ஒருகால் ஓரிடத்தில் வேள்விக்குச்செல்ல அப்போது அங்கேயிருந்த தேவர்களும் மஹர்ஷிகளுமெல்லாரும் சடக்கென எழுந்து கௌரவிக்க, பிரமனும் சிவனும் எழுந்திராமல் இருந்தபடியேயிருக்க, தக்ஷன் பிரமனை லோககுருவென்று நமஸ்கரித்துவிட்டுத் தனது கௌரவம் தோற்றச் சிவன் எழுந்திருந்து வணங்கவில்லையென்று சீற்றங்கொண்டு "இந்த ருத்ரன் எனக்கு மாப்பிள்ளையானபோதே எனக்கு சிஷ்யனாயிருந்து வைத்து என்னைக் கண்டவாறே ஆசாரியனைக் கண்டாற்போல் கௌரவித்து வழிபடவேண்டியிருக்க இப்படி எழுந்திராதே யிருக்கிறானன்றோ; இவனில் மிக்க கொடும்பாவி உலகிலுண்டோ? இப்படிப்பட்ட மூடனுக்கு அநியாயமாய் அருமந்த பெண்ணைக் கொடுத்துக் கெட்டேனே!" என்று பலவாறாக நிந்தித்து 'தேவயஜ்ஞத்தில் இப்பாவிக்கு ஹவிர்ப்பாகம் கிடைக்காமற் போகக்கடவது' என்று சாபமும் கூறிவிட்டு மஹா கோபத்துடனே எழுந்து தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்து, பிறகு நெடுநாளைக்கப்பால் அந்த தக்ஷன் ப்ருஹஸ்பதி ஸவமென்றொரு யாகம் பண்ணத் தொடங்கின செய்தியை மகளாகிய ஸதி (பார்வதி) கேள்விப்பட்டுத் 'தந்தையின் வேள்வி வைபவங்களை நாமுங்கண்டுவருவோம்' என்று ஆவல்கொண்டு புறப்பட, சிவபிரான் பழைய பகையை நினைத்து 'அங்கே நீ போகக்கூடாது' என்று தடுத்தும் குதூஹலாதிசயத்தாலே அவள் விரைந்து புறப்பட்டுத் தந்தையினது இல்லம் செல்ல, அங்கே இவளைக்கண்டு தந்தை நல்வரவு கூறுதல் யோகக்ஷேமம் வினவுதல் ஒன்றுஞ்செய்

யாமல் பராங்முகமா யிருக்கு மிருப்பையும் ருத்ரபாகமில்லாமல் வேள்வி நடைபெறுவதையுங்கண்டு வருத்தமும் சீற்றமுங்கொண்டு 'இந்த மஹாபாபியான தக்ஷனிடத்தில் நின்று முண்டான இந்த என் சரீரம் இனி முடிந்து போவதே நன்று' என்று அறுதியிட்டுத் தனது யோகபலத்தாலே அக்நியை உண்டாக்கி அதுதன்னிலே சரீரத்தைவிட்டொழிந்தாள். பிறகு மலையரசனாகிய ஹிமவானுக்குப் பெண்ணாய்ப் பிறந்து [பர்வத புத்ரீ என்னுங் காரணத்தால்] பார்வதி யென்று பெயர் பெற்று அப்பிறப்பிலும் அந்தப் பரமசிவனையே கணவனாகப் பெறவேணுமென்று ஆசைகொண்டு கடுந்தவம் புரிந்து அத்தவத்தின் பயனாக அங்ஙனமே மனோரதம் நிறைவேறி மகிழ்ந்தாளென்பது இங்கே அறியத்தக்கது.

மற்றொரு ஸமயத்திலும் பார்வதி தவம் புரிந்ததுண்டு; முன்னொரு காலத்திற் கைலாஸ மலையிலே சிவபிரானும் தானும் ஏகாஸநத்தில் நெருக்கமாக வீற்றிருந்தபொழுது ப்ருங்கி யென்னும் மாமுனி சிவனை மாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்யவிரும்பி ஒரு வண்டு வடிவமெடுத்து அந்தஆஸனத்தை இடையிலே துளைத்துக்கொண்டு அதன் வழியாய் நுழைந்து சென்று அம்பிகையை விட்டுச் சிவனை மாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்ய, அது கண்ட பார்வதீ தேவி தன் பதியை நோக்கி 'முனிவன் என்னைப் பிரதக்ஷிணஞ் செய்யாமைக்குக் காரணம் என்ன?' என்று கேட்க, அதற்குச் சிவன் 'இம்மை மறுமைகளில் இஷ்டஸித்தி பெற விரும்புமவர்கள் உன்னை வழிபடுவார்கள்; முத்திபெற விரும்புமவர்கள் என்னை வழிபடுவார்கள்; இது நூல் துணிபு' என்று சொல்ல, அது கேட்ட பார்வதி 'இறைவன் வடிவத்தைப் பிரிந்து தனியே யிருந்ததனாலன்றோ எனக்கு இவ்விழிவு நேர்ந்தது' என்று வருந்தி, தான் சிவபிரானைவிட்டுப் பிரியாதிருக்குமாறு கருதி, புண்ணியக்ஷேத்திரமான கேதாரத்திற்சென்று தவம் புரிந்து வரம் பெற்று அப்பிரானது வடிவத்திலே வாமபாகத்தைத் தனக்கு இடமாக அடைந்து அவ்வடிவிலேயே தான் ஒற்றுமைப்பட்டுநின்றனள் என்று சைவபுராணங்களிற் சொல்லிப்போருங் கதையுமுண்டு. முன்னே கூறிய தவமே இங்கு விவக்ஷிதம்.

மலையரையன் — அரையன் என்றது அரசனென்றபடி. பர்வத ராஜன் என்கை. [உமை யென்னும்.] பார்வதிக்கு உமா என்றும்

ஒரு வடமொழிப் பெயருண்டு. அவள் தவம் புரிந்த காலத்து ஆஹாரமே யில்லாமையாலே பொன்னுடம்பு வாடப்பெற்றாள்; அந்தந்த இந்திரியங்களுக்கு வேண்டிய விஷயங்களில் அவை பட்டினி மேய வொண்ணாதபடி * காவலிற் புலனை வைத்துத் தவம் புரிந்தபடியாலே அந்த இந்திரியங்கள் 'எத்தனை நாளைக்கு நாம் இவள் பால் பட்டினி கிடப்பது!' என வருந்தி அகன்றனவாம்.

கூழை—கூந்தலுக்குப் பெயர்; "முள்ளெயிறேய்ந்தில கூழை முடிகொடா" என்ற பெரிய திருமொழியுங் காண்க. சடாபாரம்—ஜடாபார மென்ற வடசொல் விகாரம். தலைமிலைக்குத் தகுதியாகக் கூந்தலைச் சடையாக்கின ளென்க. [அன்ன அருந்தவத்தினூடு போய்] அவள் அநுஷ்டித்த தபஸ்ஸு ஸாமாந்யமல்ல; * கோரமான தவஞ் செய்தனள் என்கிறது. ஊடுபோய் என்றது—அந்தத் தவத்தை முற்றமுடிய நடத்தி என்றபடி. "அருந்தவத்தினூடு போய்... அன்னவன்றன் பொன்னகலஞ் சென்றாங் கணைந்திலளே" என்று அந்வயிப்பது.

"ஆயிரந்தோள் மன்னுகரதலங்கள் மட்டித்து" என்று தொடங்கித் "தன்னினுடனே சுழலச் சுழன்றாடும்" என்னுமளவும் சிவபிரானது நடனத்தின் சிறப்பு வருணிக்கப்படுகிறது. அப்படி அற்புதமான நாட்டியஞ் செய்ய வல்ல சிவபிரானது ஸம்ச்லேஷத்தைப் பெற்றாளன்றோ என்கிறது. சிவன் கூத்தாடும் வகைகள் பல பலவுள்ளன; திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களில் அவற்றைக் கண்டுகொள்க. இங்கே சொல்லப்படுகிற நாட்டியவகை—ஆயிரங் கைகளையும் திசைகளில் வியாபிக்கச் செய்து ஒற்றைக் காலால்நின்றுகொண்டு மற்றொருகாலை மேலேதூக்கி, பம்பரம்போல் சுழற்றி ஆடினவகையாம். "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய் பேர்களாயிரத்தாய்" என்று எம்பெருமானைச் சொல்வதுபோல, சைவ புராணங்களில் சிவனைப்பற்றியும் சொல்லியிருத்தலால் "ஆயிரந் தோள் மன்னுகரதலங்கள் மட்டித்து" எனப்பட்டது. தெய்வத் தன்மைக்குரிய சக்தி விசேஷத்தினால், வேண்டியபோது வேண்டியபடி வடிவுகொள்ள வல்லமையுள்ளமைபற்றி ஒரு நர்த்தனவிசேஷத்தில் இங்ஙனே ஆயிரந்தோள் மன்னுகரதலங்கள் கொண்டு ஆடின

னாகவுங்கொள்க. ஒருகால் தன்னுடைய நடனத்தைக்கண்டு அதற்குத் தகுதியாகத் தனது இரண்டு கைகளால் மத்தளங் கொட்டின பாணாஸுரனுக்கு உவந்து ஆயிரங்கைகள் உண்டாம்படி வரமளித்தனாகச் சொல்லப்பட்ட சிவபிரானுக்கு இஃது அருமையன்றென்ப. மட்டித்து=மட்டித்தலாவது மண்டலாகாரமாக வியாபிக்கச் செய்தல்.

மாதிரங்கள் மின்னி எரிவீச =“ ஒருருவம் பொன்னுருவமொன்று செந்தீ ஒன்றுமாகடலுருவம்” என்றபடி சிவனது உருவம் செந்தீ யுருவமாதலால் அன்னவன் தனது காலை மேலே தூக்கிச் சுழன்று ஆடும்போது திசைகளெல்லாம் நெருப்புப்பற்றி யெரிவன போல் காணப்படுமென்க. சூழ்கழற்கால்—கழல் சூழ்ந்த கால்; வீரத்தண்டை அணிந்த கால் என்றபடி. பொன்னுலக மேழுங் கடந்து என்றது—கூத்தாடும்போது சிவனுடைய கால் நெடுந்தூரம் வளர்ந்து சென்றமையைச் சொன்னவாறு. உம்பர் மேல்—மேன் மேலும்.

[மன்னு குலவரையும் இத்யாதி] நாமெல்லாம் தட்டாமாலையாடும்போது அருகிலுள்ள செடி கொடி முதலியனவும் கூடவே சுழல்வதாகக் காணப்படுமன்றோ. சிவபிரான் பெரியவுருக்கொண்டு சுழன்றாடும்போது பெருப்பெருத்த பதார்த்தங்களெல்லாம் உடன் சுழல்வனபோற் காணப்படுமாறறிக. இப்படியாகக் கூத்தாடின சூலபாணியும் பஸ்மதாரியுமான சிவனது மார்போடே அணையப் பெறுதற்காகப் பார்வதி தவம்புரிந்தபடியை மஹாபாரதத்தில் பரக்கக் காண்மின் என்று தலைக்கட்டிற்றாயிற்று. ... .... *

... ... ... பாவியேற்கு
என்னுறுநோய் யானுரைப்பக் கேண்மின் இரும்பொழில்
மன்னு மறையோர் திருநறையூர் மாமலைபோல் [சூழ்
பொன்னியலு மாடக் கவாடம் கடந்துபுக்கு
என்னுடைய கண்களிப்ப நோக்கினேன் நோக்குதலும்
மன்னன் திருமார்பும் வாயு மடியிணையும்
பன்னு கரதலமும் கண்களும் பங்கயத்தின்
பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல்

மின்னி யொளிபடைப்ப வீணும் தோள்வளையும்
மன்னிய குண்டலமு மாரமும் நீண்முடியும்
துன்னு வெயில்விரித்த சூளா மணியிமைப்ப
மன்னு மரகதக் குன்றின் மருங்கேயோர்
இன்னிள வஞ்சிக் கொடியொன்று நின்றதுதான்
அன்னமாய் மானா யணிமயிலா யாங்கிடையே
மின்னா யிளவே யிரண்டா யிணைச்செப்பாய்
முன்னாய தொண்டையாய்க் கெண்டைக் குலமிரண்டாய்
அன்ன திருவுருவம் நின்ற தறியாதே
என்னுடைய நெஞ்சு மறிவு மினவளையும்
பொன்னியலும் மேகலையு மாங்கொழியப் போந்தேற்கு
மன்னு மறிகடலு மார்க்கும் மதியுகுத்த
இன்னிலா வின்கதிரு மென்றனக்கே வெய்தாகும்
தன்னுடைய தன்மை தவிரத்தா னென்கொலோ.

| | |
|---|---|
| பாவியேற்கு என் உறு நோய் | பாவியாகிய எனக்கு நேர்ந்த நோயை |
| யான் உரைப்ப கேண்மின் | நானே சொல்லக் கேளுங்கள் ; |
| (என்னவென்றால்) | |
| இரு பொழில் சூழ் | விசாலமான சோலைகள் சூழப்பெற்றதும் |
| மறையோர் மன்னும் | வைதிகர்கள் வாழப் பெற்றதுமான |
| திரு நறையூர் | திருநறையூரில் |
| மா மலை போல் பொன் இயலும் மாடம் கவாடம் கடந்து புக்கு | பெரிய மலைபோன்றதும் ஸ்வர்ணமயமுமான ஸந்நிதியின் திருக் காப்பை நீக்கிச் சென்று |
| என்னுடைய கண் களிப்ப நோக்கினேன் | எனது கண்கள் களிக்கும்படி உற்றுப் பார்த்தேன் |
| நோக்குதலும் | பார்த்தவளவில், |
| மன்னன் | (அங்குள்ள) எம் பெருமானுடைய |
| திரு மார்பும் | பிராட்டியுறையும் மார்வும் |
| வாயும் | (புன்முறுவல் நிறைந்த) அதரமும் |
| அடி இணையும் | உபய பாதங் களும் |
| பன்னு கரதலமும் | கொண்டாடத்தக்க திருக்கைகளும் |
| கண்களும் | திருக்கண்களும் |

| | |
|---|---|
| ஓர் மணி வரை மேல் பொன் இயல் பங்கயத்தின் காடு பூத்தது போல் மின்னி ஒளி படைப்ப | ஒரு நீலரத்ந பர்வதத்தின்மேல் பொன்மயமான தாமரைக்காடு புஷ்பித்தாற் போல் பளபளத்த ஒளியை வீச, |
| வீழ் நாணும் | விரும்பத்தக்க திருவரைநாணும் |
| தோள் வளையும் | தோள் வளைகளும் |
| மன்னிய குண்டலமும் | பொருத்தமான திருக்குண்டலங்களும் |
| ஆரமும் | (திருமார்பில்) ஹாரமும் |
| நீள் முடியும் | பெரிய திருவபிஷேகமும் |
| துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப | மிக்க தேஜஸ்ஸை வெளிவிடுகின்ற முடியிற் பதித்த ரத்னமும் ப்ரகாசிக்க, |
| மன்னு மரதகக் குன்றின் மருங்கே | எல்லார்க்கும் ஆச்ரயமான மரகதமலையென்னும்படியான எம்பெருமான் பக்கத்திலே |
| ஓர் இன் இள வஞ்சி கொடி ஒன்று நின்றது | விலக்ஷணமாய் போக்யமாய் இளசாயிருப்பதொரு வஞ்சிக் கொடி யென்னும் படியான பிராட்டி நின்றாள்; |
| அன்னம் ஆய் | (நடையில்) ஹம்ஸத்தையொத்தும் |
| மான் ஆய் | (நோக்கில்) மானையொத்தும் |
| அணி மயில் ஆய் | (கூந்தலில்) அழகிய மயிலை யொத்தும் |
| இடை மின் ஆய் | இடையழகில் மின்னலை யொத்தும் |
| இள இரண்டு வேய் ஆய் | (தோளில்) இளைதான இரண்டு மூங்கில்களை யொத்தும் |
| இணை செப்பு ஆய் | (ஸ்தநத்தில்) இரண்டு கலசங்களை யொத்தும் |
| முன் ஆய தொண்டை ஆய் | முன்னே தோற்றுகிற (அதரத்தில்) கொவ்வைக் கனியை யொத்தும் |
| குலம் கெண்டை இரண்டு ஆய் | (கண்ணில்) சிறந்த இரண்டு கெண்டை மீன்களை யொத்தும் |
| அன்ன | அப்படிப்பட்டிருந்த |
| திரு உருவம் | திவ்ய மங்கள விக்ரஹம் [பிராட்டி] |
| நின்றது அறியாது | (பக்கத்தில்) நிற்கும் படியை அறியாதே (எம்பெருமான் மாத்திரமேயுளனென்று ஸேவிக்கப் புகுந்த) |
| என்னுடைய நெஞ்சும் | எனது நெஞ்சும் |

| | |
|---|---|
| அறிவும் | (அந்த நெஞ்சின் தருமமாகிய) அறிவும் |
| இனம் வளையும் | சிறந்த கைவளையும் |
| பொன் இயலும் மேகலையும் | ஸ்வர்ணமயமான மேகலையும் |
| ஒழிய போந்தேற்கு | (எல்லாம்) விட்டு நீங்கப்பெற்ற எனக்கு (இதற்கு மேலும் ஹிம்ஸை யாம்படி) |
| மன்னு மறி கடலும் ஆர்க்கும் | சலியாததும் மடிந்து அலை யெறிவது மான கடலும் கோஷம் செய்யா நின்றது; |
| மதி உகுத்த இன் நிலாவின் கதிரும் | சந்திரன் வெளியிடுகின்ற இனிய நிலாவின் ஒளியும் |
| என் தனக்கே | எனக்கு மாத்திரம் |
| வெய்து ஆகும் | தீக்ஷ்ணமாயிரா நின்றது; |
| தன்னுடைய தன்மை தவிர தான் என்கொல் | நிலாவின் ஸ்வபாவமாகிய குளிர்த்தி தவிர்ந்து இப்படி வெப்பமாம்படி எம்பெருமான்றான் ஏதாவது செய்துவிட்டானே. |

* * *—இங்ஙனே ஊரிலுள்ள பெண்களின் சரித்திரங்களை எடுத்துரைப்பதனால் எனக்கு என்ன பயனாம்? அந்த வம்புக்கதைகளை யெல்லாம் விரித்துரைப்பதற்கோ நான் பெண் பிறந்தது. அதுகிடக்கட்டும், நான் பட்டபாடு நாடறியச் சொல்லுகிறேன் கேளுங்கள்—என்று திருநறையூ ரெம்பெருமான் ஸந்நிதியிலே ஸேவிக்கப்புகுந்த தான் பட்ட பாட்டைப் பேசத் தொடங்குகின்றாள் பரகால நாயகி.

பாவியேற் கென்னுறு நோய் என்று இங்ஙனே அந்வயித்துப் பொருள் கொள்வதிற் காட்டிலும் 'பன்னியுரைக்குங்காற் பாரதமாம் பாவியேற்கு" என்று கீழோடே அந்வயிப்பது பூருவர்களின் வியாக்கியானங்களுக்கு நன்கு பொருந்தும்.

"శోకక్షోభేచ హృదయం ప్రలాపైరేవ ధార్యతే" [நெஞ்சினுள்ளே துக்கம் அதிகரித்தால் வாய்விட்டுக் கதறினால் தான் தீரும்] என்று சொல்லியுள்ளபடி—தனது வருத்தத்தை ஒருவாறு தணித்துக்கொள்ள வேண்டி வாய்விட்டுக் கதறுகின்றாளென்க. யானுற்ற நோயை யான் சொல்லுகிறேன் கேளுங்கள்;—நான் திருநறையூ ரெம்பெருமானை ஸேவிக்கச்சென்று ஸந்நிதியுள்ளே புகுந்து பார்த்

தேன்; பார்த்தவுடனே அவ்வெம்பெருமானுடைய திருமார்பு திருவதரம் திருவடி திருக்கை திருக்கண் ஆகிய இவ்வவயவங்கள் நீலகிரி மேல் தாமரைக்காடு பூத்தாற்போல் பொலிந்தன. திருவரைநாண் திருத்தோள்வளை திருமகர குண்டலம் ஹாரம் திருவபிஷேகம் அதனுச்சியிற்பதித்த மணி ஆகிய இவை பளபளவென்று ப்ரகாசித்தன; அவ்வெம்பெருமான் பக்கத்திலே அன்னம்போன்ற நடையழகும் மான்போன்ற நோக்கழகும் மயில் போன்ற கூந்தலழகும் மின் போல் நுண்ணிய இடையழகும் வேய்போன்ற தோளழகும் செப்புப்போன்ற முலையழகும் கோவை போன்ற வாயழகும் கெண்டை போன்ற கண்ணழகுமுடையளான பெரிய பிராட்டியார் இளவஞ்சிக்கொடிபோலே நின்றதையுங்கண்டேன். கண்டதும் அறிவு போயிற்று. பல விகாரங்களுண்டாயின. இப்படி வருத்தப்படாநின்ற எனக்குக் கடலோசை தானும் வந்து மேன்மேலும் ஹிம்ஸையைப்பண்ணு நின்றது. எல்லார்க்கும் இனிதான நிலா எனக்குத் தீ வீசுகின்றது. குளிர்ச்சியையே இயல்வாகவுடைய நிலாவும் இப்படி சுடும்படியான காரணம் என்னோ, அறியேன்—என்றுளாயிற்று.

திருநறையூர்ப் பொன்னியலுமாடம் = நாச்சியார் கோவிலுக்குத் திருநறையூர் மணிமாடம் என்று ப்ரஸித்தியுள்ளது. "திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே" என்றார் பெரிய திருமொழியில்; "தென்னறையூர் மன்னு மணிமாடக் கோயில் மணாளனை" என்பர் இத்திருமடலிலும். கவாடம்—கதவு; வடசொல்.

பன்னு கரதலம் = 'இப்படியுமொரு கரதலமுண்டோ' என்று வாய்வெருவப்பண்ணும் கை. கரதலம்—வடசொல். ஓர் மணிவரை மேல் பொன்னியல் பங்கயத்தின் காடு பூத்ததுபோல் = எம்பெருமானது திருமேனி நீலரத்ந பர்வதமாகவும் திருக்கண் முதலியன தாமரைக் காடாகவும் ரூபிக்கப்பட்டன. * அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறை மார்பனாதலால் திருமார்பும் தாமரையாகவிளங்கக்குறையில்லை. பங்கயம்—பங்கஜம். ஒளிபடைப்ப—ஒளியை யுண்டாக்க. வீணாணும் = வீழ் + நாண்—வீணாண்; வீரசோழிய மென்னும் இலக்கண நூலில் (சந்திப்படலம்–18.) "நவ்வரின் முன்னழிந்து பின் மிக்க ணவ்வாம்" என்றது காண்க. வீழ்தல்—விரும்பப்படுதல். ஆரம்—ஹாரம்.

["துன்னுவெயில்விரித்த சூடாமணி இமைப்ப"] சூடாமணி யிமைப்ப என்றவிடத்து உம்மைத் தொகையாகவும் உவமைத் தொகையாகவுங் கொள்ளலாம்; உம்மைத் தொகையாகக் கொள்ளும்போது, சூடாமணியாவது திருவபிஷேகத்தின் நுனியிற்பதித்த ரத்னம்; அதுவும் விளங்க—என்றதாகிறது. உவமத்தொகையாகக் கொள்ளும்போது, சூடாமணியாவது தேவலோகத்துச் சிறந்த தொரு மாணிக்கம்; அதுபோலே வீணும்......நீண்முடியும் விளங்க—என்றதாகிறது. சூடாமணி எனினும் சூளாமணி யெனி னும் ஒக்கும். இமைத்தல்—ஒளிசெய்தல்.

மன்னுமரதகக் குன்றின் மருங்கே = எம்பெருமான்றன்னையே ஸாக்ஷாத் மரகத பர்வதமாகக்கூறினது முற்றுவமை. அப்படியே, பிராட்டியை இளவஞ்சிக் கொடியாகக் கூறினதும் முற்றுவமை. இதனை வடநூலார் ரூபகாதிசயோக்தி யென்பர். ஒரு மலையினருகே ஒரு பொற்கொடி நிற்கக்கண்டேனென்று சமத்காரமாக அருளிச் செய்தபடி. மாதர்க்கு இளவஞ்சிக்கொடியை ஒப்புச்சொல்லுதல் கவிமரபு.

அன்னமாய் மானாய்......என்ற விடங்களிலும் உபமேயங்க ளான நடை நோக்கு முதலியன மறைக்கப்பட்டன. மயில் கூந் தற் செறிவுக்கும் சாயலுக்கும் உவமையாம். பசுமைக்கும் சுற்றுடை மைக்கும் மூங்கிலைத் தோள்களுக்கு உபமானமாக்குவது. சேப்பு— பொற்கலசம். தொண்டை—கோவைக்கனி.

அன்ன திருவுருவம்நின்ற தறியாதே = 'ப்ரஹ்மசாரிநாராய ணன் மாத்திரமே யுள்ளான், கண்டு வந்துவிடுவோம்' என்று கரு திச் சென்றேன். பக்கத்தில் ஒரு பிராட்டி யெழுந்தருளியிருப்பது தெரியாமற் போயிற்று; தெரிந்திருந்தால் உட்புகுந்தேயிருக்கமாட் டேன்; அந்தோ! தெரியாமற்சென்று பட்டபாடு இது! என்கிறாள் போலும். நெஞ்சு போயிற்று, அறிவு போயிற்று, வளை கழன் றொழிந்தது, மேகலை நெகிழ்ந்தொழிந்தது. இப்படிப்பட்ட பரி தாப நிலைமையிலே கடல்தானும் தனது கோஷத்தைச் செய்து கொலை செய்யா நின்றது.

"[தன்னுடைய தன்மை தவிரத்தா னென்கொலோ? [சீதோ பவ ஹநூமதஃ" என்ன நெருப்புக் குளிருமாபோலே 'நிலாச்சுடுகை'

என்று நினைப்பிட்டதோ? இதுக்குக் காரணம் என்? என்கிறாள்"— என்ற பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி காண்க. சந்திரனுக்குத் தன்னுடைய தன்மையாகிய குளிர்த்தி மாறி வெப்பமுண்டாவதற்கு என்ன காரணம்? ... ... ... ... *

தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து
மன்னிவ் வுலகை மனங்களிப்ப வந்தியங்கும்
இன்னிளம் பூந்தென்றலும் வீசு மெரியெனக்கே
முன்னிய பெண்ணைமேல் முள்முளரிக் கூட்டகத்துப்
பின்னுமவ் வன்றில் பெடைவாய்ச் சிறுகுரலும்
என்னுடைய நெஞ்சுக்கோ ரீர்வாளா மென்செய்கேன்.

| | |
|---|---|
| தென்னன் பொதியில் | தென்திசைக்குத் தலைவனான பாண்டிய ராஜனது மலய மலையிலுள்ள |
| செழு சந்தின் தாது அளைந்து | அழகிய சந்தந மரத்தின் பூந் தாதுகளை அளைந்துகொண்டு |
| மன் இ உலகை மனம் களிப்ப வந்து இயங்கும் | நித்யமான இந்த லோகத்திலுள்ளவர்கள் மனம் மகிழும்படி வந்து உலவுகின்ற |
| இன் இள பூ தென்றலும் | போக்யமாய் அழகான இளந்தென்றற்காற்றும் |
| எனக்கே எரி வீசும் | எனக்கு மாத்திரம் அழலை வீசுகின்றது; |
| முன்னிய பெண்ணை மேல் | முன்னே காணப்படுகிற பனைமரத்தில் |
| முள் முளரி கூடு அகத்து | முள்ளையுடைய தாமரைத் தண்டினால் செய்யப்பட்ட கூட்டிலே |
| பின்னும் அவ் அன்றில் பெடை வாய் சிறு குரலும் | வாயலகு கோத்துக் கொண்டிருக்கிற அன்றிற்பேடையின் வாயிலுண்டான சிறிய குரலும் |
| என்னுடைய நெஞ்சுக்கு ஓர் ஈர் வாள் ஆம் | எனது நெஞ்சை அறுக்கின்றவொரு வாளாக இராநின்றது; |
| என் செய்கேன் | (தப்பிப் பிழைக்க) என்ன உபாயஞ் செய்வேன்?. |

* * *—எனக்கு ஹிம்ஸையை உண்டு பண்ணுவன கடலோசையும் நிலாவுமேயல்ல; தென்றல் முதலிய மற்றும் பல பொருள்களும் ஹிம்ஸிக்கின்றன என்கிறாள். தெற்குத்திசைக்குத் தலைவனாய் மலயத்வஜனென்று பெயருடையனான பாண்டிய ராஜனது பொதிய மலையிலுள்ள திவ்யமான சந்தனமரத்திற் பூந்தாதுகளிற் படிந்து

அவற்றின் பரிமளத்தைக் கொய்து கொண்டு நாடெங்கும் வந்து வீசி அனைவரையும் மகிழ்விக்கின்ற தென்றற் காற்று எனக்கு மாத்திரம் அழலை வீசுகின்றது; இந்நிலைமையிலே அன்றிற் பேடையின் இன்குரலும் செவிப்பட்டுப் பரமஹிம்ஸையாகின்றது என்கிறாள்.

(அன்றிற்பறவையைப் பற்றின விவரங்களைக் கீழே 42-ஆம் பக்கத்திற் காண்க.)

[என்செய்கேன்?]= கீழே 'தென்னன் பொதியில் செழுஞ் சந்தனக்குழம்பின் அன்னதோர் தன்மை யறியாதார்'' என்று தொடங்கி ''இன்னிளவாடை தடவத் தாம் கண்துயிலும் பொன்னனையார் பின்னும் திருவுறுக.'' என்று சொல்லியுள்ளபடி—விரஹ காலத்தில் ஹிம்ஸகங்களான இந்த வஸ்துக்களை லக்ஷியம் பண்ணாமல் இவற்றைப் பரமபோக்யமாகக் கொள்ளுகிற சில பெண்களாகப் பிறவா தொழிந்தேனே! இவற்றுக்கு நலிவுபடும் பெண்ணாகப் பிறந்தேனே! என்செய்வேன் என்கிறாள். ... ... *

கன்னவில்தோள் காமன் கருப்புச் சிலைவளையக்
கோன்னவிலும் பூங்கணைகள் கோத்துப் போதவணைந்து
தன்னுடைய தோள்கழிய வாங்கித் தமியேன்மேல்
என்னுடைய நெஞ்சே யிலக்காக வெய்கின்றான்
பின்னிதனைக் காப்பீர்தா னில்லையே ......—

| | | | |
|---|---|---|---|
| கல் நவில் தோள் காமன் | மலைபோல் (திண்ணிய) தோள்களையுடையனான மன்மதன் | தன்னுடைய தோள் கழிய வாங்கி | தனது தோள் வரையில் நீள இழுத்து |
| கரும்பு சிலை வளைய | (தனது) கருப்பு வில்லை வளைத்து | என்னுடைய நெஞ்சே இலக்கு ஆக தமியேன் மேல் எய்கின்றான் | எனது நெஞ்சையே குறியாகக் கொண்டு துணையற்ற என்மீது (அந்த அம்புகளைப்) பிரயோகிக்கின்றான்; |
| கொல் நவிலும் பூ கணைகள் கோத்து | (அந்த வில்லில்) கொலை செய்ய வல்ல புஷ்ப பாணங்களைத் தொடுத்து | பின் இதனை காப்பீர்தான் இல்லையே | இப்போது இந்த ஆபத்தில் நின்றும் என்னைத் தப்புவிக்க வல்லீரில்லையே!. |
| பொத அணைந்து | (அந்த வில்லை மார்பிலே) அழுந்த அணைத்துக் கொண்டு | | |

* * *—கீழ்ச் சொன்ன கடலோசை முதலியவற்றுக்கு ஒரு வாறு தப்பிப் பிழைத்தாலும் பிழைக்கலாம்; இனி ஜீவிக்க வழியில்லை யென்னும்படியாக மன்மதன் தனது பாணங்களைச் செலுத்தி வருத்துந் திறம் வாசாமகோசரம் என்கிறாள். மஹாபலசாலியான மன்மதனும் தனது கருப்புவில்லை வளைத்து என்னையே இலக்காகக் கொண்டு புஷ்ப பாணங்களைப் பிரயோகிக்கின்றானே; நான் இதற்குத் தப்பிப் பிழைக்கும்படி செய்வாராருமில்லையே; என்கிறாள்.

கன்னவில் தோள் காமன் = ஒருகால் பரமசிவனுடைய கோபாக்நிக்கு இலக்காகி நெற்றிக்கண்ணால் தஹிக்கப்பட்டு உடலிழந்து அநங்கன் என்று பேர் பெற்றவனான மன்மதனுக்கு உடம்பு இல்லையாயிருக்க, "கன்னவில் தோள் காமன்" என்றும் "தன்னுடைய தோள் கழியவாங்கி" என்றும் அருளிச் செய்வது சேருமோ எனின்; அநங்கன் செய்கிற காரியத்தைப் பார்த்தால், திண்ணிய உடம்புடையானும் இவ்வளவு காரியம் செய்ய வல்லவனல்லன்' என்னும்படியாகப் பெரிய கொலைத் தொழிலாயிருப்பதனால் அவனுக்கு வலிதான வுடம்பு இருந்தே தீரவேணுமென்று காமிகள் கருதுவதுண்டாதலால் இப்பரகால நாயகியும் அந்த ஸமாதியாலே சொல்லுகின்றாளென்க. மன்மதனுக்குக் கரும்பை வில்லாகவும் ஐவகைப் புஷ்பங்களை அம்பாகவும் அந்த அம்புகளை வில்லிலே தொடுத்துப் பிரயோகிக்கின்றானாகவும் நூல்கள் கூறுகின்றமை காண்க.

கரும்பு × சிலை, கருப்புச்சிலை. பூங்கணைகள் = முல்லை, அசோகம், நீலம், மா, முளரி என்ற ஐந்து மலர்கள் மன்மத பஞ்ச பாணங்களெனப்படும். மத்தம், தீரம், சந்தாபம், வசீகரணம், மோகனம் என்கிற ஐவகைச் செயல்களைப் பஞ்ச பாணமாகச் சொல்லுவர் ஒரு சாரார். "ఉన్మాదనస్తాపనశ్చ శోషణః స్తంభనస్తథా।సంమోహనశ్చ కామస్య పంచ బాణాః ప్రకీర్తితాః." [உந்மாதநஸ் தாபநச்ச சோஷணः ஸ்தம்பநஸ்ததா—ஸம்மோஹநச்ச காமஸ்ய பஞ்ச பாணாः ப்ரகீர்த்திதாः] என்பாருமுளர். ... *

... ... ... பேதையேன்
கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின்
நன்னறு வாசமற் றாரானு மெய்தாமே

**மன்னும் வறுநிலத்து வாளாங் குகுத்ததுபோல்**
**என்னுடைய பெண்மையு மென்நலனு மென்முலையும்**
**மன்னு மலர்மங்கை மைந்தன் கணபுரத்துப்**
**பொன்மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம் தோயாவேல்**
**என்னிவைதான் வாளா வெனக்கே பொறையாகி**
**முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர்**
**மன்னு மருந்தறிவீ ரில்லையே......—**

| | |
|---|---|
| கல் நவிலும் காடு அகத்து | கல் மயமான காட்டினுள்ளே |
| ஓர் வல்லி | ஒரு கொடியில் (புஷ்பித்த) |
| கடி மலரின் | புதுமலரினுடைய |
| நல் நறு வாசம் | நல்ல பரிமளம் |
| மற்று ஆரானும் எய்தாமே | யார்க்கும் உபயோகப்படாமல் |
| மன்னும் வறு நிலத்து ஆங்கு வாளா உகுத்ததுபோல் | அந்த சூன்ய ஸ்தலத்திலேயே வீணைக் கழிவது போல், |
| பேதையேன் என்னுடைய பெண்மையும் | அறிவற்றவளான என்னுடைய ஸ்த்ரீத்வமும் |
| என் நலனும் | எனது குணங்களும் |
| என் முலையும் | எனது முலைகளும் |
| மலர் மங்கை மன்னும் மைந்தன் | பூவிற் பிறந்த பெரிய பிராட்டியோடு சேர்ந்த பரம புருஷனையும் |
| கணபுரத்து பொன் மலை போல் நின்றவன் தன் | திருக்கண்ணபுரத்தில் பொன் மலை போல் நிற்பவனையுமுள்ள எம்பெருமானுடைய |
| பொன் அகலம் தோயா எல் | அழகிய திருமார்பிலே சேர்வதற்கு உறுப்பாகாவிடில் |
| வாளா இவை என் | வ்யர்த்தமான இந்த வஸ்துக்கள் எதுக்கு ? |
| (இவை) | இம்முலைகளானவை |
| எனக்கே பொறை ஆகி | எனக்கு ஒருத்திக்கே வீண்பாரமாகி |
| முன் இருந்து | கண்ணெதிரே இருந்துகொண்டு |
| மூக்கின்று | மேன்மேலும் வீங்கும்போது |
| மூவாமை காப்பது | அப்படி வீங்காமல் தடுக்கவல்ல |
| ஓர் மன்னு மருந்து அறிவீர் இல்லையே | ஒரு சிறந்த மருந்து கண்டறிவாராருமில்லையே. |

* * *—காமன் செய்கிற ஹிம்ஸை ஒருபுறமிருக்கட்டும் ; என்னோடு கூடவே பிறந்து என்னை ஹிம்ஸிக்கின்ற இம்முலைகளைத் தண்டிப்பாராருமில்லையேயென்கிறாள். ஒருவரும் புகக்கூடாததகாட்டிலே

சிறந்ததொரு கொடி தன்னிலே பரிமளோத்தரமான புஷ்பம் புஷ்பித்துக் கமழுகின்றால் ஆர்க்கு என்னபயன்? "கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலையிற் கொன்றைகள் மேல் தூங்கு பொன் மாலைகளோடுடனாய் நின்று தூங்குகின்றேன்" (நாச்சியார் திருமொழி) என்றாற்போல, அங்கே புஷ்பித்து அங்கே உதிர்ந்து அங்கே உருமாய்ந்து போக வேண்டியதே அம்மலர்களின் கதி. அது போல, எனது தேஹ குணங்களும் ஆத்ம குணங்களும் திருக்கண்ணபுரத்தெம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்துக்கு உறுப்பாகாவிடில் இவற்றால் என்ன பயன்; மேற்சொன்ன மலர்கள் போல இவையும் நிஷ்பலங்களேயன்றோ. எம்பெருமானோடு அணையப்பெறாதே வீணாக வளர்ந்து கிடக்கின்ற இம்முலைகள் எப்போதும் கண்ணெதிரே தோன்றி நின்று மார்புக்கும் பாரமாகி வருத்துகின்றனவே! ஏதுக்கு இவை விம்மி வீங்குகின்றன? இம்முலைகள் தொலைந்தொழிய மருந்து தருவாருமில்லையே! என வருந்துகின்றாள்.

பேதையேன் = இப்படி ஹிம்சை பொறுக்க முடியாமல் வருத்தமுறுகிற இந்நிலைமையில் முடிந்துபிழைக்கலாமாயினும் 'என்றேனுமொருநாள் நமது மநோரதம் ஸித்திக்குமோ' என்னும் நசையாலே பிராணனைப் பிடித்து நிறுத்திக்கொண்டிருக்கிற சாபல்யம் தோற்றுகிறது. வல்லி—வடசொல். வாசம்—வாஸனை. வறுநிலம்—புல்பூண்டு தண்ணீர் ஒன்றுமில்லாத மருகாந்தாரம்.

"எனக்கே பொறையாகி" என்றவிடத்து. "இருவர் சுமக்கக் கடவ முலையை ஒருவர் சுமக்கப்போமோ" என்ற பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி நோக்கத்தக்கது. முன்னிருந்து—பெண்மைக்கு உறுப்பாக முலையிருக்க வேண்டியது அவசியமாகில் முதுகிலே முளைத்தாலாகாதோ? கண்ணெதிரே முளைத்து வீங்கவும் வேணுமோ?.

"கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டு அவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றாள் ஆண்டாள்; அவள் மெய்யே பெண்ணாய்ப் பிறந்தவளாகையாலே முலைபடைத்துப் படுகிற வருத்தமெல்லாம் தோற்ற அப்படி சொன்னாள்; அங்ஙனன்றிக்கே திருமங்கையாழ்வார் பாவநாப்ரகர்ஷத்தால் மாத்திரம் பெண்மையை ஏறிட்டுக்

| | |
|---|---|
| வண்ணம் போல் அன்ன கடலை | தன்னுடைய வர்ணம் போன்ற வர்ணத்தை யுடைய கடலிலே |
| மலை இட்டு | மலைகளைக்கொண் டெறிந்து |
| அணை கட்டி | ஸேதுவைக்கட்டி (இலங்கைக் கெழுந்தருளி) |
| மா மண்டு வெம் சமத்து | சதுரங்கபலம் நிறைந்த கொடிய போர்க்களத்தில் |
| மன்னன் இராவணனை | ராக்ஷஸ ராஜனான ராவணனுடைய |
| பொன் முடிகள் பத்தும் புரள | அழகிய பத்துத்தலைகளும் (பூமியில் விழுந்து) புரளும் படியாக |
| சரம் துரந்து | அம்புகளைப் பிரயோகித்து |
| தென உலகம் ஏற்றுவித்த சேவகனை | (அவ்விராவணனை) யமலோகமடைவித்த மஹாசூரனாய். |

* * *—ஆகக்கீழ்வரையில், தானநுபவிக்கும் கஷ்டங்களைச் சொல்லி முடித்தாள்; இக்கஷ்டங்களைவிளைவித்த மஹாநுபாவன் இன்னானென்பதை நான் அறியாமையில்லை; நன்கு அறிவேன்; அடிபணிந்தாரை ரக்ஷிப்பதற்கென்றே மார்பில் தனிமாலையிட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லி உலகங்களை வஞ்சிப்பவனும் அவன்; ‘சந்திரனுக்கு நேர்ந்த துன்பத்தைத் தொலைத்தேன், அப்படியே உங்களுடைய துன்பத்தையும் தொலைதொழிப்பேன் வாருங்கள்’ என்று மயக்கி அழைப்பவன் அவன்; ‘காளமேகம்போலும் காயா மலர்போலும் என் வடிவு விளங்குகின்ற அழகைக்கண்டு களியுங்கள்’ என்று மேனி நிறத்தைக்காட்டி வலைப்படுத்திக்கொள்பவன் அவன்; ஒரு ஸீதாபிராட்டிக்காகவும் ஒரு ப்ரஹ்லாதனுக்காகவும் ஒரு பூமிப் பிராட்டிக்காகவும் தேவர்களுக்காகவும் தேவேந்திரனுக்காகவும் எப்படி யெப்படியோ உருமாறிப் படாப்பாடுகள் பட்டு அதிமாநுஷமான காரியங்கள் செய்தவனுக்கம் நான்; என்னை யடுப்பார்க்கு ஒரு குறையுமுறாது’ என்று சொல்லி அகப்படுத்திக்கொள்பவன் அவன்; பல திருப்பதிகளிலே தனது பெருமையைக் காட்டிக் கொண்டு மேனாணித்திருப்பவன் அவன்; அவன்படிகளெல்லாம் நன்கறிவேன் நான்; அவனுள்ள திருப்பதிகள்தோறும் நுழைந்து புறப்பட்டு என் மனவருத்தங்களை இனி நான் சொல்லிக்கொள்ளப்போகிறேன்; ஆதரித்து உஜ்ஜீவிப்பித்தானாகில் பிழைத்துப் போகிறான்; இல்லையாகில், என் வாய்க்கு இரையாகி அவன் படப்போகிற பாடுகளைப் பாருங்கள்—என்கிறாள் மேல்.

முன்னம் மாமதிகோள் விடுத்த—சந்திரனுக்கு நேர்ந்த க்ஷய ரோகத்தைப் போக்கியருளினவன் இன்று எனக்கு க்ஷயத்தை விளைக்கலானது என்னோ என்று இரங்குகின்றாளாகவுமாம். “இப் போது கிடீர் அவன் ஆபந்நரானுரை நோக்கத் தவிர்ந்தது” என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும். (“மதியுகுத்த இன் னிலாவின் கதிரும் என்றனக்கே வெய்தாகும்” என்று கீழே அரு ளிச்செய்தபடி) என்னை எரிக்கின்ற சந்திரனுக்கு நேர்ந்த ஆபத் தைப்போக்கி என்னை நன்றாகத் தபிக்குமாறு அந்த சந்திரனுக்கு நியமித்த மஹாநுபாவன் என்றதாகவுமாம்.

மா மண்டு வெஞ்சமத்து = மா என்று யானையையும் குதிரை யையும் சொல்லும்; ரதம், கஜம், துரகம், பதாதி எனச்சேனையுறுப் புகள் நான்காதலால் மற்ற இரண்டு உறுப்புகட்கு உபலக்ஷண மென்க மண்டுதல்—நெருங்கியிருத்தல் சேவகனை = சேவகமா வது வீரம்; அதனையுடையவன் சேவகன். “செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்” என்றார் தொண்டரடிப்பொடி யாழ்வாரும்.

“இது விளைத்த மன்னன்” என்று தொடங்கி, “தென்னறை யூர் மன்னு மணிமாடக்கோயில் மணாளனைக் கன்னவில் தோள் காளையை” என்கிற வரையில் எம்பெருமானுடைய விபவாவதார வைபவங்கள் அர்ச்சாவதார வைபவங்கள் முதலியன விரிவாகக் கூறப்படுகின்றன. மார்பன், முகில்வண்ணன், சேவகனை, வீரனை, கூத்தனை என்கிற இவ்விசேஷணங்கள் எல்லாம் மேலே கன்னவில் தோள் காளையை என்ற விடத்தில் அந்வயித்து முடியும்.... *

... ... ... ஆயிரக்கண்
மன்னவன் வானமும் வானவர்தம் பொன்னுலகும்
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனைப்
பின்னோ ரரியுருவ மாகி யெரிவிழித்துக்
கொன்னவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே வல்லாளன்
மன்னு மணிக்குஞ்சி பற்றி வரவீர்த்துத்
தன்னுடைய தாள்மேல் கிடாத்தி அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ்படைத்த
மின்னிலங்கு மாழிப் படைத்தடக்கை வீரனை.

| | |
|---|---|
| ஆயிரம் கண் மன்னவன் வானமும் | ஆயிரங்கண்ணனான இந்திரனுடைய ஸ்வர்க்கலோகத்தையும் |
| வானவர் தம் பொன் உலகும் | (மற்றுமுள்ள) தேவதைகளின் திவ்ய லோகங்களையும் |
| தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனை | தனது புஜபலத்தாலே தன் வசமாக்கிக் கொண்ட ஹிரண்யாஸுரனை |
| பின் | சிறிது காலம் பொறுத்து |
| ஓர் அரி உருவம் ஆகி | ஒரு நரசிங்கமூர்த்தியா யவதரித்து |
| எரி விழித்து | நெருப்புப் பொறி பறக்கப் பார்த்து, |
| கொல் நவிலும் வெம் சமத்து கொல்லாதே | கொடிய போர்க்களத்திலே (பகைவரைக் கொல்லுங்கணக்கிலே சடக்கெனக்) கொன்று விடாதே |
| வல்லாளன் | மஹாபலசாலியான அவ்வஸுரனுடைய |
| மணி மன்னு குஞ்சிபற்றி வர ஈர்த்து | மணிமயமான கிரீடம் பொருந்திய தலைமயிரைப் பிடித்துக்கிட்ட இழுத்து |
| தன்னுடைய தாள் மேல் கிடாத்தி | (அவனைத்) தனது திருவடிகளின் மீது படுக்கவைத்துக்கொண்டு |
| அவனுடைய பொன் அகலம் | அவனது அழகிய மார்பை |
| வள் உகிரால் போழ்ந்து | கூர்மையான நகங்களாலே பிளந்து |
| புகழ் படைத்து | (ஆச்ரிதனான ப்ரஹ்லாதனை ரக்ஷித்தானென்கிற) கீர்த்தியைப் பெற்றவனாய், |
| மின் இலங்கும் ஆழிப்படை தடக்கை வீரனை | மின்போல் விளங்குகின்ற சக்ராயுதத்தைத் தடக்கையிலே உடைய மஹா வீரனாய்— , |

* * *—வரபலத்தாலும் புஜபலத்தாலும் செருக்குக்கொண்டு தேவேந்திரன் முதலான வானவர்களெல்லாரையும் பங்கப்படுத்திக் கொண்டு, தானே கடவுளென்றிருந்த ஹிரண்யகசிபு வென்னுமசுரனை ஸ்ரீமந்நாராயணன் நரஸிம்ஹமூர்த்தியாய்த் தூணில்தோன்றி அவ்விரணியனது கிரீடத்தைக் கீழேதள்ளி மயிரைப் பிடித்திழுத்துத் தனது திருவடிகளின் மேலே போட்டுக்கொண்டு திருக்கை நகங்களாலே அவன் மார்பைப் பிளந்து கொன்றானென்ற கதை ப்ரஸித்தம்.

**தானவன்**—அசுரன்; வடசொல். **கோன்னவிலும் வெஞ்சமத்துக் கோல்லாதே**—தூணில் நின்றும் தோன்றினவுடனே திருக்கண்ணாலேயே அவனைக் கொளுத்திவிடலாம்; ‘ஆச்ரிதனை ப்ரஹ்லாதன் விஷயத்திலே பல்லாயிரங்கொடுமைகள் புரிந்த இப்பாவியை இப்படி ஒரு நொடிப்பொழுதிலே கொன்றுவிடக்கூடாது, சித்திரவதைபண்ணிவிடவேணும்’ என்று தாள்மேல்கிடாத்திப்போழ்ந்தானாயிற்று.

**தன்னுடைய தாள்மேல் கிடாத்தி...வள்ளுகிரால் போழ்ந்து**—தனித்தனி தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும்புறத்திலும் தனக்குமரணமில்லாதபடி இரணியன் வரம் பெற்றிருந்தானாதலால் அந்த வரம் பழுதுபடாதபடி, ‘அவனைப் பிடித்து வாசற்படியில் தன் மடிமீது வைத்துக்கொண்டு அந்திப் பொழுதில் திருக்கை யுகிர்களாலே பிளந்தருளினன். ... *

மன்னிவ் வகலிடத்தை மாமுதுநீர் தான்விழுங்கப்
பின்னுமோ ரேனமாய்ப் புக்கு வளைமருப்பின்
கோன்னவிலும் கூர்நுதிமேல் வைத்தெடுத்த கூத்தனை.

| | | | |
|---|---|---|---|
| மன்னு இ அகல் இடத்தை | எல்லாரும் பொருந்தியிருக்கின்ற விசாலமான இப்பூமியை | வளை மருப்பின் | வளைந்த கோட்டினுடைய |
| மா முது நீர் விழுங்க | மஹா ஸமுத்ரம் விழுங்கிவிட | கொல் நவிலும் கூர் நுதி மேல் | (பகைவரைக்) கொல்லவல்ல கூர்மையான நுனியின் மீது |
| பின்னும் | அதற்குப் பிறகு | வைத்து எடுத்த கூத்தனை | (அந்தப்பூமியை) வைத்துக் கொணர்ந்த அழகிய சேஷ்டிதத்தையுடையனாய். |
| ஓர் ஏனம் ஆய் புக்கு | ஒரு திவ்யவராஹமாய் (கடலினுள்ளே) பிரவேசித்து | | |

* * *—**ஹிரண்யகசிபுவின் உடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னும் கொடிய அசுரராஜன் தன்வலிமையால் பூமியைப்பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலினுள் மூழ்கிச்சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹா**

வராஹரூபியாய்த் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற் குத்திக்கொன்று, பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற் குத்தி அங்கு நின்றும் எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்ற வரலாறு அறிக.

"புண்ணியந் தெய்வதமுஞ் சேர்பூலோகத்தைப்
  புற்பாய்போற் சுருட்டிக்கொண்டே பாதாளம்,
நண்ணிரணி யாட்சனைப்பின் தொடர்ந்தேயேகி
  நலமுடனே யாதிவராகத் தேவாகி,
மண்ணுலக மனைத்துமிடந் தெடுத்தோர்கோட்டில்
  வைத்துவர வவன்மறிக்க வதைத்துத்தேவர்,
எண்ணவுல கீரேழும்படியப் பண்ணு
  மிறைவா நாராயணனே யெம்பிரானே!".

என்பர் பின்னோரும்.

இப்பொழுது நடக்கிற சுவேத வராஹகல்பத்துக்கு முந்தின பாத்ம கல்பத்தைப்பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து ஸ்ரீவராஹாவதாரத்தைச் செய்தருளிக் கோட்டு நுனியாற் பூமியை யெடுத்துவந்தனன் என்ற வரலாறும் உண்டு. இதுவே இவ்விடத்திற்குப் பொருந்தும்; "அகலிடத்தை மாமுதுநீர்தான் விழுங்க" என்றிறே இங்குள்ளது. முதுநீர்—ஸகல பதார்த்தங்களுக்கும் முற்பட்டுப் புராதநமாயுள்ள நீர். "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்றும் "நன்மைப் புனல்பண்ணி நான்முகனைப் பண்ணி" என்றும் சொல்லக் கடவது.

வைத்தெடுத்த கூத்தனை = பூமியைக் கோட்டின் நுனியில் வைத்துக்கொண்டு எழுந்தருளும்போது அகமகிழ்ச்சி தோற்றக் கூத்தாடிக்கொண்டே யெழுந்தருளினன் போலும். ... *

மன்னும் வடமலையை மத்தாக மாசுணத்தால்
மின்னு மிருசுடரும் விண்ணும் பிறங்கொளியும்
தன்னி னுடனே சுழல மலைதிரித்தாங்கு
இன்னமுதம் வானவரை யூட்டி அவருடைய
மன்னும் துயர்கடிந்த வள்ளலை......—

மன்னும் வட மலையை — அழுத்தமாக நாட்டப்பட்ட மந்தரகிரியை

மத்து ஆக — மத்தாகக்கொண்டு

மாசுணத்தால் — (வாஸுகி யென்னும்) பாம்பினால் (சுற்றி)

மின்னும் இரு சுடரும் விண்ணும் பிறங்கு ஒளியும் தன்னினுடனே சுழல மலை திரித்து — விளங்குகின்ற சந்திர ஸூர்யர்களும், ஆகாசமும், ப்ரகாசிக்கின்ற (மற்றும் பல) தேஜஃ பதார்த்தங்களும் தன்னோடு சுழலும்படி அந்த மந்தர மலையைச் சுழற்றி [கடலைக் கடைந்து]

வானவரை இன் அமுதம் ஊட்டி — தேவர்களுக்கு இனிய அமிருதத்தை உண்ணக் கொடுத்து

அவருடைய — அத் தேவர்களுடைய

மன்னும் துயர் கடிந்த — நெடு நாளாய துக்கத்தைப் போக்கடித்த

வள்ளலை — பரம உதாரனை-

* * *—முன் ஒரு காலத்தில், இவ்வண்ட கோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணு லோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப் பெற்ற ஒரு வித்தியாதர மகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கை வீணையில் தரித்துக்கொண்டு ப்ரஹ்மலோக வழியாய் மீண்டு வருகையில், துர்வாஸ மஹாமுநி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க அவ்விஞ்சை மங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆநந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனி வந்து கொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக் கை நீட்டிக் கொடுக்க, அவன் அதனை மாவட்டியினால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்த வளவில் அம் மதவிலங்கு அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அதுகண்டு முநிவரன் கடுங் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற நினது ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக் கடவன' என்று சபிக்க,

உடனே தேவர்களின் செல்வம் யாவும் ஒழிந்தன; ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபய மளித்துக் கட்டளையிட்டபடி, அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தர மலையை மத்தாக நாட்டி வாஸுகி யென்னும் மஹா நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின் மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்தி விடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன் என்ற வரலாறு அறிக

கடல் கடைகின்றபோது ஸ்ரீமந்நாராயணன் அக்கடலினிடையே மஹாகூர்மமாய் மந்தரபர்வதத்திற்கு ஆதாரமாக எழுந்தருளியிருக்க, வாஸுகியின் வாலைப்பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப் பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க அதுநோக்கி அத்திருமால் தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாஸுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனனென்பதும், அப்பால் அந்த ஸ்ரீமஹாவிஷ்ணு தந்வந்தரி யென்னும் தேவரூபத்தைத் தரித்து அம்ருத பூர்ணமான கமண்டலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த க்ஷீரஸமுத்ரத்திலிருந்து தோன்றினனென்பதும், அப்பொழுது அசுரர்கள் தந்வந்தரியின் கையிலிருந்த அம்ருத கலசத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அந்த எம்பெருமான் ஜகந்மோஹநகரமான ஒரு பெண் வடிவத்தைத் தரித்து அசுரர்களை வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்கட்கு ப்ரஸாதித்தனன் என்பதும் அறியத் தக்கன.

மாசுணம் என்று பாம்புக்கும் பெரிய பாம்புக்கும் பெயர். கடலைக்கடைய மந்தரமலையைச் சுழற்றினபோது அது சுழன்ற

விசையின் மிகுதியினால் இருசுடர் விண் முதலிய ஸகல பதார்த்தங்களும் கூடவே சுழல்வன போலத் தோற்றினமைபற்றி "மின்னுமிருசுடரும்......தன்னினுடனே சுழல மலைதிரித்து" என்றார்.

அவருடைய* மன்னுந்துயர் கடிந்த=துர்வாச முனிவரது சாபத்தால் தேவர்களுக்கு நேர்ந்திருந்த வறுமையைப் போக்கின என்றவாறு. ... ... ... ... ... ... ... *

... ... ... மற்றன்றியும்
தன்னுருவ மாரு மறியாமல் தானங்கோர்
மன்னும் குறளுருவின் மாணியாய் மாவலிதன்
பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து போர்வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி
என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண்
மன்னா தருகென்று வாய்திறப்ப மற்றவனும்
என்னால் தரப்பட்ட தென்றலுமே அத்துணைக்கண்
மின்னார் மணிமுடிபோய் விண்தடவ மேலெடுத்த
பொன்னார் கனைகழற்கா லேழுலகும் போய்கடந்தங்கு
ஒன்னா வசுரர் துளங்கச் செலநீட்டி
மன்னிவ் வகலிடத்தை மாவலியை வஞ்சித்துத்
தன்னுலக மாக்குவித்த தாளானை......—

மற்று அன்றியும் { தவிரவும்,—

தன் உருவம் ஆரும் அறியாமல் { தனது ஸ்வரூபத்தை யாரும் தெரிந்து கொள்ள வொண்ணாதபடி

தான் ஓர் மன்னும் குறள் உருவின மாணி ஆய் { பரமபுருஷனான தான் ஒரு திவ்யமான வாமந வேஷங் கொண்ட பிரமசாரியாகி

மா வலி தன் { மஹாபலியினுடையதான

பொன் இயலும் வேள்விக்கண் புக்கிருந்து { ஸ்வர்ணதானஞ் செய்யும் யாக பூமியிலே எழுந்தருளி

போர் வேந்தர் மன்னை { போர் செய்யவல்ல மிடுக்கையுடைய அரசர்களில் தலைவனான அந்த மாவலியை

மனம் கொள்ள வஞ்சித்து { (இப்பிரமசாரி யாசிப்பதற்காகவே வந்தானென்று) நம்பும்படியாக மயக்கி

| | |
|---|---|
| நெஞ்சு உருக்கி | (நடையழகு சொல்லழகு முதலியவற்றால்) அவனது நெஞ்சை உருக்கி |
| மன்னு | 'மஹாப்ரபுவே! |
| என்னுடைய பாதத்தால் யான் அளப்ப | என் காலடியால் நானே அளந்து கொள்ளும்படி |
| மூ அடி மண் தருக என்று | மூவடி நிலம் கொடு' என்று |
| வாய் திறப்ப | வாய்திறந்து கேட்க, |
| அவனும் | (அதுகேட்ட) அந்த மாவலியும் |
| என்னால் தரப்பட்டது என்றலும் | 'அப்படியே என்னால் மூவடி நிலம் கொடுக்கப் பட்டது' என்று சொல்ல |
| அத்துணைக் கண் | அந்த க்ஷணத்திலேயே |
| மின் ஆர் மணி முடி போய் விண் தடவ | விளங்குகின்றமணி மகுடம் ஆகாசத்தே போய் அளாவ, |
| மேல் எடுத்த | உயரத்தூக்கியருளின |
| பொன் ஆர் கனை கழல் கால் | பொன்கள் நிறைந்து சப்திக்கின்ற வீரத்தண்டையணிந்த திருவடி |
| ஏழ் உலகும் போய் கடந்து | மேலுலகங்களெல்லாவற்றையும் தாண்டி |
| அங்கு ஒன்று அசுரர் துளங்க | அந்த யாக பூமியிலுள்ள (நமுசி முதலிய) பகையசுரர்கள் துன்பப்படும்படி |
| செல நீட்டி | (மேலே) நெடுகவியாபிக்கச்செய்து |
| மா வலியை வஞ்சித்து | (இவ்வகையாலே) மஹாபலியை வஞ்சித்து |
| மன்னு இ அகல் இடத்தை | நித்யமாய் விசாலமான இப்பூமண்டலத்தை |
| தன் உலகம் ஆக்குவித்த தாளானை | தன்னுடைய லோகமாகவே ஆக்கிக் கொடுத்த திருவடிகளையுடையனை—, |

* * *—திருமால் மாவலிபக்கல் நீரேற்று உலகமளந்த கதை உலகமறிந்ததேயாம்.

**அத்துணைக்கண்** = துணை—அளவு ; அவ்வளவில் என்றபடி.

... ... ... தாமரைமேல்
**மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையைப்**
**பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடையைத்**
**தென்னன் குறுங்குடியுள் செம்பவளக் குன்றினை**
**மன்னிய தண்சேறை வள்ளலை மாமலர்மேல்**
**அன்னம் துயிலு மணிநீர் வயலாலி**

**என்னுடைய வின்னமுதை யெவ்வுள் பெருமலையைக்**
**கன்னி மதில்சூழ் கணமங்கைக் கற்பகத்தை**
**மின்னை யிருசுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்**
**பொன்னை மரதகத்தைப் புட்குழியெம் போரேற்றை**
**மன்னு மரங்கத்தெம் மாமணியை......—**

*தாமரை மேல் மின் இடையாள் நாயகனை* — தாமரைப்பூவில் பிறந்தவளும் மின் போன்ற இடையை யுடையளுமான பிராட்டிக்கு நாயகனாய்

*விண்ணகருள் பொன் மலையை* — திருவிண்ணகரிலே பொன்மலைபோல் விளங்குமவனாய்

*பொன்னி மணி கொழிக்கும் பூ குடந்தை போர் விடையை* — காவேரி நதியானது ரத்னங்களைக் கொண்டு தள்ளுமிடமான அழகிய திருக்குடந்தையிலே யெழுந்தருளி யிருக்கிற—யுத்த ஸந்நத்தமான காளை போலச் செருக்குடையனாய்,

*தென் நன குறுங்குடியுள் செம் பவளம் குன்றினை* — தென் திசையிலுள்ள விலக்ஷணமான திருக்குறுங்குடியிலே சிவந்த பவழ மலை போல் விளங்குமவனாய்,

*தண் சேறை மன்னிய வள்ளலை* — குளிர்ந்த திருச்சேறையிலே பொருந்தி யெழுந்தருளி யிருக்கிற பரம உதாரனாய்,

*மா மலர் மேல் அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி என்னுடைய இன் அமுதை* — சிறந்த தாமரைப் பூக்களின்மேலே அன்னப்பறவைகள் உறங்கப் பெற்ற அழகிய நீர் நிறைந்த வயல்களை யுடைத்தான திருவாலியிலே எனக்குப் பரம போக்யனாக ஸேவை ஸாதிப்பவனாய்,

*எவ்வுள் பெரு மலையை* — திருவெவ்வுளூரில் பெரியதொரு மலை சாய்ந்தாற்போலே சாய்ந்தருள்பவனாய்

*கன்னி மதில் சூழ் கணமங்கை கற்பகத்தை* — சாச்வதமான மதில்களாலே சூழப்பட்ட திருக்கண்ணமங்கையில் கல்பவ்ருக்ஷம்போல் எழுந்தருளியிருப்பவனாய்

*மின்னை* — மின்போல் விளங்குகின்ற பெரிய பிராட்டியாரை யுடையனாய்

| | |
|---|---|
| இரு சுடரை | ஸூர்ய சந்திரர்களோ என்னும் படியான திருவாழி திருச்சங்குகளை யுடையனாய் |
| வெள்ளறையுள் | திருவெள்ளறையிலே |
| கல் அறை மேல் | கருங்கல் மயமான ஸந்நிதியினுள்ளே |
| பொன்னை | பொன்போல் விளங்குமவனாய் |
| மரதகத்தை | மரதகப்பச்சை போன்ற வடிவை யுடையனாய் |
| புட்குழி எம் போர் ஏற்றை | திருப்புட்குழியிலே எழுந்தருளியிருக்கிற அஸ்மத்ஸ்வாமியான ஸமரபுங்கவனாய், |
| அரங்கத்து மன்னும் | திருவரங்கத்தில் நித்யவாஸம் பண்ணுகிறவனாய் |
| எம் மா மணியை | நாம் கையாளக் கூடிய நீலமணி போன்றவனாய். |

* * *—ஆகக் கீழே சில விசேஷணங்களால் விபவாவதார சரித்திரங்களிற் சிலவற்றைப்பேசி, இனி அர்ச்சாவதாரங்களிலுஞ் சிலவற்றை அநுஸந்திக்க விரும்பித் திருவிண்ணகரிலே வாய்வைக்கிறார். பல திருப்பதிகளையும்பற்றி அருளிச் செய்துகொண்டு போகிற இக்கண்ணிகளில் "கோயில் திருமலை பெருமாள்கோயில்" என்னும் அநாதி வ்யவஹாரத்திற்கு ஏற்ப, "மன்னுமரங்கத்தெம் மாமணியை" என்றவளவில் ஒரு பகுதியாகவும் "மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை" என்றவளவில் ஒரு பகுதியாகவும், "வெஃகாவிலுன்னிய யோகத்துறக்கத்தை" என்றவளவில் ஒரு பகுதியாகவும், அதற்குமேல் வினைமுற்று வருமளவில் ஒரு பகுதியாகவும் பிரித்துக்கொண்டு உரையிடுகின்றோம்.

**விண்ணகர்** = ஒப்பிலியப்பன் ஸந்நிதி "தன்னொப்பாரில்லப்பன்" என்று நம்மாழ்வாருளிச்செயல் "ஒருவரையும் நின்னொப்பாரொப்பிலா வென்னப்பா!" (திருக்கண்ணபுரத்துப் பாசுரத்தில்) என்றார் இத்திருமங்கையாழ்வாரும். உப்பிலியப்பன் என்கிற வ்யவஹாரம் ஸ்தலபுராணத்தை யடியொற்றிய தென்பர். **குடந்தை** = குடமூக்கு என்றும் கும்பகோணமென்றும் வழங்கப்படும் தலம். **குறுங்குடி** = குறுகியவனை வாமநனது க்ஷேத்ரமாதலால் குறுங்குடியெனத் திருநாமமாயிற்றென்பர். இத்தலத்தெம் பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர் பக்கலிலே சிஷ்யனாய் 'நாமும் நம்

பிராமாநுசனை யுடையோம்' என்கையாலே வைஷ்ணவ நம்பி யென்று திருநாமம் பெற்றனன். நம்மாழ்வார் திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தவரும் இத்தலத்து நம்பியே. சேறை=பஞ்ச ஸார க்ஷேத்ரமென வழங்கப்படும்.

ஆலி=எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கனஞ் செய்து கொண்ட திவ்யதேசமானதுபற்றித் திருவாலி யென வழங்கப்படுமென்பர்; ஆலிங்கனம் என்பதன் ஏகதேசம் நாமமாயிற்று. எவ்வுள்=எம்பெருமான் சாலிஹோத்ர மஹாமுனிக்கு ப்ரத்யக்ஷமாகி 'வாஸம் பண்ணுவதற்குத் தகுதியான உள் எவ்வுள்?' என வினவியதனால் இத்தலத்திற்குத் திருவெவ்வுளூரென்று திருநாமமாயிற்றென்பர். கிம்க்ருஹம் என்பர் வடமொழியில்.

கணமங்கை—கண்ணமங்கை யென்பதன் தொகுத்தல். மின்னை இருசுடரை=மின்னல் போலவும் சந்திர ஸூர்யர்கள் போலவும் பளபளவென்று விளங்குபவன் என்று பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்; மின் என்று மின்னற் கொடிபோன்ற பெரிய பிராட்டியாரைச் சொல்லிற்றாய்; இருசுடர் என்று ஸூர்ய சந்திரர்களுக் கொப்பான திருவாழி திருச்சங்குகளைச் சொல்லிற்றாய் இம்மூவரின் சேர்த்தியைச் சொல்லுகிறதாக அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவுள்ளம் "அங்கு நிற்கிறபடி யெங்ஙனே யென்னில்; பெரிய பிராட்டியாரோடும் இரண்டருகுஞ் சேர்ந்த ஆழ்வார்களோடுமாயிற்று நிற்பது" என்ற ஸ்ரீஸூக்தி காண்க.

வெள்ளறை=வெண்மையான பாறைகளாலியன்ற மலை; [அறை—பாறை.] இது வடமொழியில் ச்வேதாத்ரி எனப்படும்.

புட்குழி=புள்-ஜடாயுவென்னும் பெரியவுடையார்; அவரைக் குழியிலிட்டு ஸம்ஸ்கரித்தவிடமென்று சொல்லுதல் பற்றிப் புட்குழி யென்று திருநாமமாயிற்றென்பர்: போரேறு—ஸமரபுங்கவன் என்று வடமொழித் திருநாமம். ஸமர—யுத்தத்தில், புங்கவ:—காளை போலச் செருக்கி யுத்தம் நடத்துபவர்.

அரங்கம்=எம்பெருமான் ரதியை அடைந்த இடம்; ரதியாவது ஆசைப்பெருக்கம். அதனை யடைந்து [ஆசையுடன்] வாழு

மிடம். ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் ஸூர்யமண்டலம் யோகிகளுடைய உள்ளக்கமலம் என்னும் இவையனைத்தினும் இனியதென்று திருமால் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமான தென்பதுபற்றி 'ரங்கம்' என்று அவ்விமானத்திற்குப் பெயர். அதுவே லக்ஷணையால் திவ்ய தேசத்திற்குத் திருநாமமாயிற்று. தானியாகுபெயர். இனி, ரங்கமென்று கூத்தாடு மிடத்துக்கும் பெயராதலால், திரு அரங்கம்—பெரியபிராட்டியார் ஆநந்தமுள்ளடங்காமல் நிருத்தஞ் செய்யுமிடம்; என்றும் மற்றும் பலவகையாகவுங் கொள்ளலாம் ... ... ... ... ... *

... ... ... வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியைத்
தொன்னீர்க் கடல்கிடந்த தோளா மணிச்சுடரை
என்மனத்து மாலை யிடவெந்தை யீசனை
மன்னும் கடன்மல்லை மாயவனை வானவர்தம்
சென்னி மணிச்சுடரைத் தண்கால் திறல்வலியைத்
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை
அன்னத்தை மீனை யரியை யருமறையை
முன்னிவ் வுலகுண்ட மூர்த்தியைக் கோவலூர்
மன்னு மிடைகழியெம் மாயவனைப் பேயலறப்
பின்னும் முலையுண்ட பிள்ளையை அள்ளல்வாய்
அன்ன மிரைதே ரழுந்தூ ரெழுஞ்சுடரைத்
தென்தில்லைச் சித்திர கூடத்தென் செல்வனை
மின்னி மழைதவழும் வேங்கடத்தெம் வித்தகனை.

வல்லவாழ் — திருவல்லவாழிலே எழுந்தருளியிருக்கிற

பின்னை மணாளனை — நப்பின்னை நாயகனாய்

பேரில் பிறப்பு இலியை — திருப்பேர் நகரிலெழுந்தருளியிருக்கிற நித்யஸித்தனாய்

தொல் நீர் கடல் கிடந்த — என்றுமழியாத நீரையுடையகடலிலே பள்ளி கொள்பவனாய்

தோளா மணி சுடரை — துளைவிடாதரத்னம் போலே ஜ்வலிப்பவனாய்

| | |
|---|---|
| என் மனத்து மாலே | என்மேல் வ்யாமோஹமுடையனாகி எனது நெஞ்சை விட்டுப்பிரியாதவனாய் |
| இடவெந்தை ஈசனை | திருவிடவெந்தையிலெழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனாய் |
| கடல்மல்லை மன்னும் மாயவனை | திருக்கடல்மல்லையிலே நித்யவாஸம் செய்யும் ஆச்சரியனாய் |
| வானவர் தம் சென்னி மணிச்சுடரை | நித்ய ஸூரிகளுடைய சிரோபூஷணமாக விளங்குமவனாய் |
| தண்கால் திறல் வலியை | திருத்தண்காலில் எழுந்தருளியிருக்கிற மஹா பலசாலியாய் |
| தனை பிறர் அறியா தத்துவத்தை | (தனது திருவருளுக்கு விஷயமாகாத) பிறர் அறிந்துகொள்ள முடியாத ஸ்வரூபத்தை யுடையனாய் |
| முத்தினை | முத்துப்போன்றவனாய் |
| அன்னத்தை | ஹம்ஸாவதாரஞ் செய்தவனாய் |
| மீனை | மத்ஸ்யாவதாரஞ் செய்தவனாய் |
| அரியை | நரஸிம்ஹாவதாரஞ் செய்தவனாய் (அல்லது) ஹயக்ரீவாவதாரஞ்செய்தவனாய் |
| அருமறையை | ஸகலவித்யாஸ்வரூபியாய் |

| | |
|---|---|
| முன் இ உலகு உண்ட மூர்த்தியை | முன்னொருகால் இவ்வுலகங்களை யெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கின ஸ்வாமியாய் |
| கோவலூர் இடைகழி மன்னும் எம் மாயவனை | திருக்கோவலூரிடைகழியில் நித்யவாஸம்பண்ணுகிற எங்கள் திருமாலாய் |
| பேய் அலற முலை உண்ட பிள்ளையை | பூதனையானவள் கதறும்படியாக அவளது முலையை உண்ட பிள்ளையாய் |
| அன்னம் | ஹம்ஸங்களானவை |
| அள்ளல் வாய் | சேற்று நிலங்களில் |
| இரை தேர் அழுந்தூர் | இரைதேடும்படியான திருவழுந்தூரில் |
| எழும் சுடரை | விளங்கும் சோதியாய் |
| தென் தில்லை சித்திர கூடத்து என் செல்வனை | தென் திசையிலுள்ள தில்லைத் திருச்சித்திரகூடத்தில் (எழுந்தருளியிருக்கிற) எனது செல்வனாய், |
| மழை | மேகங்களானவை |
| மின்னி | பளபளவென்று மின்னிக்கொண்டு |
| தவழும் | சிகரங்களில் ஸஞ்சரிக்கப்பெற்ற |
| வேங்கடத்து | திருவேங்கட மலையில் (எழுந்தருளியிருக்கிற) |
| எம் வித்தகனை | நமக்கு ஆச்சர்யகரமான குணசேஷ்டிதங்களை யுடையனாய். |

* * *—வல்லவாழ் = மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றனுள் ஒன்று; நம்மாழ்வாராலும் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்ற தலம். இதனைத் திருவல்லாய் என்று மலையாளர் வழங்குகின்றனர். வல்லவாழ்ப் பின்னைமணாளனை—நப்பின்னைப் பிராட்டியை மணம் புரிவதற்குக் கொண்ட கோலத்துடன் திருவல்லவாழில் இவ்வாழ்வார்க்கு ஸேவைஸாதித்தனன் போலும்.

பேர்—திருப்பேர்நகர்; அப்பக்குடத்தான் ஸந்நிதி. பேரில் பிறப்பிலியை = அடியவர்களுக்காகப் பலபல பிறவிகள் பிறந்திருந்தும் இதுவரை ஒருபிறப்பும் பிறவாதவன்போலும் இனிமேல்தான் பிறந்து காரியஞ் செய்யப் பாரிப்பவன்போலும் ஸேவைஸாதிக்கிறபடி.

தோளாமணிச்சுடரை = தோளுதலாவது துளைத்தல்; துளைத்தல் செய்யாத மணி யென்றது—அநுபவித்துப் பழகிப்போகாமல் புதிதான ரத்னம் என்றபடி. (துளைவிட்டிருந்தால் நூல்கோத்து அணிந்து கொள்ளுவர்கள்.) "அநாவித்தம் ரத்நம்" என்று வடநூலாரும் சொல்லுவர்கள்.

இடவெந்தை = இத்தலத்திலெழுந்தருளியுள்ள வராஹப்பெருமாள் தமது தேவியை இடப்பக்கத்திற் கொண்டிருத்தலால் இத்தலத்திற்குத் திருவிடவெந்தை யென்று திருநாமமாயிற்று.

தண்கால்—இது ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு ஸமீபத்திலுள்ளது. திருத்தாங்கல் என்று ஸாமாந்யர் வ்யவஹரிப்பர்கள். தண்கால் என்பதற்குக் குளிர்ந்த காற்று என்று பொருள்; சீதவாதபுரமென்பர்.

றல்வலி—எதிரிகளை அடக்கவல்ல பெருமிடுக்கன்.

தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை—தானுன தன்மையைத் தானே நிர்ஹேதுகக்ருபையால் காட்டி ஆழ்வார் போல்வார்க்கு அறிவிக்கலாமத்தனை யொழிய மற்றையோர்க்கு ஸ்வப்ரயத்நத்தால் அறிய வொண்ணுதபடி. முத்தினை—முத்துப்போலே தாபஹரனவனை. அன்னத்தை மீனை அரியை—ஹரி என்னும் வடசொல்லுக்குப் பதினைந்து அர்த்தங்களுண்டு; "యమానిలేంద్ర చంద్రా

ర్క విష్ణుసింహాంశువాజిషు। శుకాహికపిభేకేషు హరిః" என்று அமரஸிம்ஹன் சொல்லி வைத்தான். பிரகிருதத்தில், குதிரை சிங்கம் என்கிற இரண்டு பொருள்கள் கொள்ளலாம். குதிரையென்று கொண்டால் ஹயக்ரீவாவதாரஞ் செய்தபடியைச் சொல்லிற்றுகிறது. சிங்கமென்று கொண்டால் நரசிங்காவதாரஞ் சொல்லிற்றுகிறது. ஹம்ஸாவதாரம் மத்ஸ்யாவதாரம் ஹயக்ரீவாவதாரம் என்ற மூன்றவதாரங்களும் வித்யோபதேசத்திற்காகச் செய்தருளினவையாம்,

அருமறையை = ஸகல வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவன் என்று கருத்து.

கோவலூர் + மாயவனை = கோபாலன் எனப்படுகிற ஆயனார் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசமானதுபற்றி இதற்குத் திருக்கோவலூரென்று திருநாமமாயிற்று. வடமொழியில் இது கோபாலபுரம் எனப்படும். "பாவருந்தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாளிரவின், மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுதநன்னாடு" என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார் மூவரும் ஒருவரை யொருவர் சந்தித்து அந்தாதி பாடின தலம் இது.

இடைகழி = தேஹளீ என்று வடமொழியிற் கூறப்படும். "வாசற்கடை கழியாவுள்புகா காமருபூங்கோவல் இடைகழியே பற்றியினி...நீயுந்திருமகளும் நின்றாயால்" என்ற பொய்கையாழ்வார் பாசுரம் நோக்குக.

பேய்முலையுண்ட வரலாறு:—கம்ஸனு லேவப்பட்ட பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக் கொண்டிருந்த ஸ்ரீக்ருஷ்ண சிசுவை யெடுத்து நஞ்சு தீற்றிய தனது முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானுன குழந்தை அவ்வரக்கியின் முலைகளைக் கைகளால் இறுகப்பிடித்து அவளுயிரோடு நன்றாக உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி விழுந்திறக்கும்படி செய்தனனென்பதாம்.

அள்ளல்வாய் அன்னமிரைதேர் அழுந்தூர் = "சேறு கண்டு இருய்க்கக்கடவ அன்னங்களும் சேற்றைக்கண்டு இருயாதே மேல் விழுந்து ஸஞ்சரிக்கும்படியான போக்யதையுடைய திருவழுந்தூரிலே நித்ய வாஸம்பண்ணுகிற நிரவதிக தேஜோரூபனை" என்ற அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஸ்ரீஸூக்தி காண்க.

அழுந்தூர் = தனது தபோபலத்தால் விமானத்துடன் ஆகாசத்தில் ஸஞ்சரிக்குந் தன்மையனான உபரிசரவஸுவென்னும் அரசன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் நேர்ந்த விவாதத்தில் பக்ஷபாதமாகத் தீர்ப்புச் சொன்னமையால் ரிஷிகளால் சபிக்கப்பட்டுப் பூமியில்விழுகையில் அவனது தேர் அழுந்தப்பெற்ற இடமானதுபற்றி இதற்கு அழுந்தூரென்று பெயர் வந்ததென்பர்; தேரழுந்தூர் எனவும் வழங்குவர். பிரகிருதத்தில் மூலத்திலுள்ள தேர் என்னுஞ் சொல் ரதத்தைச் சொல்வதல்ல; தேர்தலாவது தேடுதல்; புள்ளுப் பிள்ளைக்கிரைதேடு மழுந்தூரென்கை

தென் தில்லைச் சித்திரகூடம் = சித்திரகூடம்—விசித்திரமான சிகரங்களையுடையது; இது ஸ்ரீராமபிரான் வநவாஸஞ் செய்தபொழுது அவ்வெம்பெருமானது திருவுளத்திற்கு மிகவும் பாங்காயிருந்ததொருமலை; அதனைப்போலவே இத்தலமும் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருப்பதென்பதுபற்றி அப்பெயரே இதற்கும் இடப்பட்டதென்பர். இங்கு உத்ஸவ மூர்த்தி இராமபிரான் வனவாஸஞ் செய்கையில் சித்திரகூட பர்வதத்தில் வீற்றிருந்த வண்ணமாக எழுந்தருளியிருக்கின்றனர். மூலமூர்த்தி க்ஷீராப்தி நாதன் போலச் சயனத்திருக்கோலமாகிச் சிவபிரானது நடனத்தைப்பார்த்து ஆமோதித்துக் கொண்டிருக்கின்றனர். இது தில்லை மரங்களடர்ந்த காடாயிருந்ததனால் தில்லைத்திருச்சித்திரகூடமென வழங்கப்படும் இது, எம்பெருமான் தேவர்களும் முனிவர்களுஞ் சூழக் கொலு வீற்றிருந்த ஸபை.

வேங்கடம் = தன்னையடைந்தவர்களது பாவமனைத்தையும் ஒழிப்பதனால் வேங்கடமெனப்பெயர்பெற்றது; வடசொல். வேம்-பாவம்; கடம்—எரித்தல் எனப்பொருள் காண்க. "அத்திருமலைக்குச் சீரார் வேங்கடாசலமெனும் பேர், வைத்தனரதுவேதென்னில்

வேமெனவழங்கெழுத்தே, கொத்துறுபவத்தைக்கூறும் கடவெனக் கூறிரண்டாகும், சுத்தவக்கரம் கொளுத்தப் படுமெனச் சொல்வர் மேலோர்” என்றும், “வெங்கொடும்பவங்களெல்லாம் வெந்திடச் செய்வதால் நல், மங்கலம் பொருந்துஞ்சீர் வேங்கடமலையான தென்று” என்றுமுள்ள புராணச் செய்யுள்கள் காண்க. அன்றி வேம் என்பது அழிவின்மை ; கடம் என்பது ஐச்வர்யம் ; அழிவில்லாத ஐச்வரியங்களைத் தன்னையடைந்தார்க்குத் தருதலால் வேங்கடமெனப்பெயர் கொண்டதென்றலுமுண்டு. ... ... *

மன்னனை மாலிருஞ் சோலை மணாளனைக்
கொன்னவிலு மாழிப் படையானைக் கோட்டியூர்
அன்ன வுருவி னரியைத் திருமெய்யத்து
இன்னமுத வெள்ளத்தை யிந்தளூ ரந்தணனை
மன்னு மதிட்கச்சி வேளுக்கையாளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை வெஃகாவில்
உன்னிய யோகத் துறக்கத்தை......—

| | |
|---|---|
| மன்னனை | ஸர்வேச்வரனாய் |
| மாலிருஞ் சோலை மணாளனை | திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியிருக்கிற மணவாளப் பிள்ளையாய் |
| கொல் நவிலும் ஆழி படையானை | பகைவரைக் கொல்ல வல்ல திருவாழியை ஆயுதமாகவுடையனாய் |
| கோட்டியூர் | திருக்கோட்டியூரில் |
| அன்ன உருவின் அரியை | அப்படிப்பட்ட [விலக்ஷணமான] திருமேனியையுடைய நரஸிம்ஹமூர்த்தியாய் |
| திரு மெய்யத்து | திருமெய்ய மலையில் |

| | |
|---|---|
| இன் அமுதம் வெள்ளத்தை | இனிதான அம்ருத ப்ரவாஹம் போல் பரம போக்யனாய் |
| இந்தளூர் | திருவிந்தளூரில் |
| அந்தணனை | பரமகாருணிகனாய் |
| மன்னு மதிள் | பொருந்திய மதிள்களையுடைய |
| கச்சி | காஞ்சீநகரத்தில் |
| வேளுக்கை ஆளரியை | வேளுக்கை யென்கிற தலத்திலுள்ள ஆளழகியசிங்கராய் |
| பாடகத்து மன்னிய எம் மைந்தனை | திருப்பாடகத்தில் நித்யவாஸம் பண்ணுகிற எமது யுவாவாய், |
| வெஃகாவில் | திரு வெஃகாவில் |
| உன்னிய யோகத்து உறக்கத்தை | ஜாகரூகனாகவே யோகநித்ரை செய்பவனாய். |

* * *—மாலிருஞ்சோலை = "ஆயிரம்பூம் பொழிலுமுடை மாலிருஞ் சோலையதே" என்றபடி மிகப்பெரிய பல சோலைகளையுடைய மலையாதலால் மாலிருஞ்சோலை யென்று திருநாமம். உயர்ந்து பரந்த சோலைகளையுடைய மலை. வநகிரி எனப்படும் கோட்டியூர் = ஹிரண்யாஸுரன் மூவுலகத்தையும் ஆட்சி செய்த காலத்தில் தேவர்கள் அவ்வஸுரனை யொழிப்பதற்கு உபாயத்தை ஆலோசிப்பதற்கு ஏற்றதாய் அஸுரர்களின் உபத்ரவமில்லாததான இடத்தைத் தேடுகையில் கதம்ப முனிவரது சாபத்தால் 'துஷ்டர் ஒருவரும் வரக்கூடாது' என்று ஏற்பட்டிருந்த இந்த க்ஷேத்ரம் அவர்கள் கூட்டமாக இருந்து ஆலோசிப்பதற்கு ஏற்ற இடமாயிருந்த காரணம் பற்றி இத்தலத்திற்கு கோஷ்டீபுரம் என்று வடமொழியில் திருநாமம்; அதுவே கோட்டியூரெனத் தமிழில் வழங்குகிறது. அன்னவுருவினரியை = "வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர் நாதனை நரசிங்கனை" என்ற பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்காண்க. தெக்காழ்வாரைக் குறித்தபடி.

திருமெய்யம் = ஸத்ய தேவதைகள் திருமாலை நோக்கித் தவஞ்செய்த தலமானது பற்றி இத்திருமலை ஸத்யகிரி யென்றும் எம்பெருமான் ஸத்யகிரிநாத ரென்றும் பெயர் பெறுவர். ஸத்யகிரி யென்ற அச் சொல்லே திருமெய்யமலை யென்றும், அத்திருப்பதி திருமெய்ய மென்றும் வழங்கப் பெறும்.

இந்தளூர் = சந்திரன் தனது சாபம் நீங்கப்பெற்ற தலமாதலால் திருவிந்தளூரென்று திருநாமமாயிற்றென்பர். இந்துபுரீ எனப்படும். ஸுகந்தவநம் என்றொரு திருநாமமும் வழங்குகின்றது. அந்தணனை = "அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" (திருக்குறள்) என்றபடி அழகிய தண்மையையுடையவனென்று பொருளாய், பரமகாருணிகனென்றதாம். "அறவனை ஆழிப்படை அந்தணனை" என்றார் நம்மாழ்வாரும்.

வேளுக்கை = காஞ்சீபுரத்திலுள்ள திருப்பதிகளில் ஒன்று. 'வேள் இருக்கை' என்பது மருவிற்றுப் போலும். வேள்—ஆசை; எம்பெருமான் தனது ஆசையினாலே வந்திருக்கும் தலம் என்றவா

ரும். இத்திவ்ய தேசத்தைப்பற்றி ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளிச் செய்த காமஸிகாஷ்டகம் என்ற ஸ்தோத்ரத்தில் "காமாத் அதி வஸந் ஜீயாத் கச்சித் அத்புத கேஸரீ" என்றமையால் வேளுக்கை யென்பதற்கு இங்ஙனே பொருளாமென்று தோன்றுகிறது. 'காமா ஸிகா' என்பதன் அர்த்தமும் இதுவேயாம்; காமேந ஆஸிகா = தன் ஆசையினாலே இருக்குமிடம். ஆளரியை = ஆள முகியசிங்கர்ஸந்நிதி என்று வ்யவஹரிக்கப்படும்.

பாடகம் = பெரியகாஞ்சீபுரத்திலுள்ள பாண்டவ தூதர் ஸந்நிதி. 'பாடு அகம்' என்று பிரிக்க. பெருமைதோற்ற எழுந்தருளி யிருக்கும் தலம் என்கை. கண்ணன் பாண்டவதூதனாய்த் துரியோதனனிடஞ் சென்றபொழுது துர்யோதனன் ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறை யொன்றைத் தோண்டுவித்து அதில் அனேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே யிருக்கவைத்து அப்படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற்பிளப்புக்களால் மேலேமூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸந மொன்றை அமைத்து அவ்வாஸனத்தில் கண்ணனை வீற்றிருக்கச் சொல்ல, அங்ஙனமே ஸ்ரீக்ருஷ்ணன் அதன்மேல் ஏறின மாத்திரத்திலே மூங்கிற் பிளப்புக்கள் முறிபட்டு ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில், அப்பெருமான் மிகப்பெரிதாக விச்வரூப மெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங் கொண்டு எதிர்க்கவே அப்பிலவறையிலிருந்த மல்லர்கள் அழிந்தனர். அப்போது கொண்ட விச்வரூபத் திருக்கோலத்திற்கு ஸ்மாரகமாகப் பெரிய திருமேனி யோடே ஸேவை ஸாதிக்குமிடம் பாடகம். பாடு—பெருமை. ("அரவுநீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை அஞ்சிடாதேயிட வதற்குப், பெரியமாமேனி அண்டமூடுருவப் பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன்" என்ற பெரியதிருமொழிப் பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்ட திருமேனிவளர்த்தியோடே ஸேவை ஸாதிக்குமாறு காண்க.)

வெஃகா = கச்சியில் ஸ்ரீ யதோக்தகாரி ஸந்நிதி இவ்வெம் பெருமான், பிரமன் செய்த வேள்வியை அழிக்க வந்த வேகவதிநதியைத் தடுக்கும்பொருட்டு அதற்கு அணையாகக் குறுக்கில் பள்ளி

கொண்டருளினவனாதலால், அப்பிரானுக்கு வடமொழியில் 'வேகாஸேது' என்று பெயர்; அது தமிழில் 'வேகவணை' என்று மொழிபெயர்ந்து, அது பின் (நாகவணை யென்பது நாகணையென விகாரப்படுதல்போல) வேகணை என விகாரப்பட்டு, அது பின்னர் 'வெஃகணை' எனத்திரிந்து, தானியாகு பெயராய்த் தலத்தைக் குறித்து, அது பின்பு 'வெஃகா' என மருவி வழங்கிற்றென நுண்ணிதின் உணர்க. ... ... ... ... ... ... *

... ... ... ஊரகத்துள்
அன்னவனை யட்ட புயகரத்தேம் மானேற்றை
என்னை மனங்கவர்ந்த வீசனை வானவர்தம்
முன்னவனை மூழிக் களத்து விளக்கினை
அன்னவனை யாதனூ ராண்டளக்கு மையனை
நேன்னலை யின்றினை நாளையை நீர்மலைமேல்
மன்னு மறைநான்கு மானானைப் புல்லாணித்
தேன்னன் தமிழை வடமோழியை நாங்கூரில்
மன்னு மணிமாடக் கோயில் மணாளனை
நன்னீர் தலைச்சங்க நாண்மதியை நான்வணங்கும்
கண்ணனைக் கண்ண புரத்தானைத் தேன்னறையூர்
மன்னு மணிமாடக் கோயில் மணாளனைக்
கன்னவில்தோள் காளையைக் கண்டாங்குக் கைதோழுது
என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான்
தன்னருளு மாகமும் தாரானேல் தன்னைநான்
மின்னிடையார் சேரியிலும் வேதியர்கள் வாழ்விடத்தும்
தன்னடியார் முன்பும் தரணி முழுதாளும்
கோன்னவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும் நாட்டகத்தும்
தன்னிலைமை யெல்லா மறிவிப்பன்......—

ஊரகத்துள் அன்னவனை } திருவூரகத்தில் விலக்ஷணனாய்

அட்ட புயகரத்து எம்மான் ஏற்றை } அட்டபுயகரதலத்திலுள்ள அஸ்மத் ஸ்வாமி சிகாமணியாய்

என்னை மனம் கவர்ந்த ஈசனை } எனது நெஞ்சைக் கொள்ளை கொண்ட தலைவனாய்

வானவர் தம் முன்னவனை } தேவாதிராஜனாய்

| | |
|---|---|
| மூழிக்களத்து விளக்கினை | திருமூழிக்களத்தில் விளங்குபவனாய் |
| அன்னவனை | இப்படிப்பட்டவனென்று சொல்ல முடியாதவனாய் |
| ஆதனூர் | திருவாதனூரில் |
| ஆண்டு அளக்கும் ஐயனை | ஸகல காலங்களுக்கும் நிர்வாஹகனான ஸ்வாமியாய் |
| நென்னலை இன்றினை நாளையை | நேற்று இன்று நாளை என்னும் முக்காலத்துக்கும் ப்ரவர்த்தகனாய், |
| நீர்மலை மேல் மன்னும் | திருநீர்மலையிலெழுந்தருளியிருக்கிற |
| மறை நான்கும் ஆனானை | சதுர்வேத ஸ்வரூபியாய் |
| பல்லாணி | திருப்புல்லாணியிலெழுந்தருளியிருக்கிற |
| தென்னன தமிழை வடமொழியை | உபயவேத ப்ரதிபாத்யனாய் |
| நாங்கூரில் | திருநாங்கூரில் |
| மணிமாடக் கோயில் மன்னு மணாளனை | மணிமாடக் கோயிலில் நித்யவாஸம் பண்ணுகிற மணவாளப் பிள்ளையாய் |
| நல் நீர் தலைச் சங்கம் நாண் மதியை | நல்ல நீர்சூழ்ந்த தலைச்சங்கநாட்டிலுள்ள நாண்மதியப் பெருமாளாய் |
| நான் வணங்கும் கண்ணனை | நான் வணங்கத்தக்க கண்ணனாய் |
| கண்ணபுரத்தானை | திருக்கண்ணபுரத்துறைவானாய் |
| தென் நறையூர் மணி மாடக் கோயில் மன்னு மணாளனை | திருநறையூர் மணிமாடமென்று ப்ரஸித்தமான ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கிற மணவாளனாய் |
| கல் நவில் தோள் காளையை | மலையென்று சொல்லத்தக்க தோள்களையுடைய யுவாவாயுள்ள ஸர்வேச்வரனை |
| ஆங்கு கண்டு கை தொழுது | அவ்வவ்விடங்களில் கண்டு ஸேவித்து |
| என் நிலைமை எல்லாம் அறிவித்தால் | எனது அவஸ்தைகளையெல்லாம் விண்ணப்பஞ்செய்து கொண்டால் |

(அது கேட்டு)

| | |
|---|---|
| எம் பெருமான் | அப்பெருமான் |
| தன் அருளும் ஆகமும் தாரான் எல் | தனது திருவருளையும் திருமார்பையும் எனக்குத் தந்தருளானாகில் |
| தன்னை | அவ்வெம்பெருமானை |
| நான் | (அவனது செயல்களையெல்லாமறிந்த) நான் |
| மின் இடையார் சேரியிலும் | ஸ்த்ரீகள் இருக்கும் திரள்களிலும் |

| | |
|---|---|
| வேதியர்கள் வாழ்வு இடத்தும் | வைதிகர்கள் வாழு மிடங்களிலும் |
| தன் அடியார் முன்பும் | அவனது பக்தர்கள் முன்னிலையிலும் |
| தரணி முழுது ஆளும் கொல் நவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும் | பூ மண்டலம் முழுவதையும் ஆள்கின்றவராயும் கொடிய படைகளை யுடையவராயுமிருக்கிற அரசர்களுடைய ஸபைகளிலும் |
| நாடு அகத்தும் | மற்றும் தேசமெங்கும் |
| தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன் | அவன் படிகளை யெல்லாம் பிரகாசப்படுத்தி விடுவேன். |

* * *—**ஊரகம்** = பெரியகாஞ்சீபுரத்திலுள்ள உலகளந்த பெருமாள் ஸந்நிதி. இத்தலத்தில் திருமால் உரக ரூபியாய் ஸேவை ஸாதிப்பதுபற்றி இத்திருப்பதிக்கு ஊரகம் என்று திருநாமமென்பர்; **உரகம்**—பாம்பு வடசொல்.

**அட்டபுயகரம்**—இத்தலத் தெம்பெருமானுக்கு எட்டுத் திருக்கைகள் உள்ளதுபற்றி அஷ்டபுஜன் என்று திருநாமமாய் அவன் எழுந்தருளியிருக்கின்ற **கரம்**—க்ருஹம் ஆதல்பற்றி அட்டபுயகரமென வழங்கப்படும். அட்டபுயவகரம் என்பதன் மரூஉ வென்பாருமுளர்.

**என்னை மனங்கவர்ந்த வீசனை வானர்தம் முன்னவனை** = வானவர்தம் முன்னவனென்று தேவாதிராஜனை பேரருளாளப் பெருமானைச் சொல்லுகிறதென்றும், "என்னை மனங்கவர்ந்த வீசனை" என்கிற விசேஷணம் இவ்வர்த்தத்தை ஸ்திரப்படுத்துகின்றதென்றும் பெரியோர் கூறுவர். திருமங்கையாழ்வாருடைய மனத்தைப் பேரருளாளன் கவர்ந்தானென்னுமிடம் இவரது வைபவத்திலே காணத்தக்கது. கனவிலே காட்சிதந்து வேகவதியில் நிதியைக் காட்டித் துயர் தீர்த்த வரலாறு.

**மூழிக்களம்** = மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று; நம்மாழ்வாராலும் போற்றப் பெற்ற தலம் "மூழிக்களத்து வளத்தினை" என்றும் பாடமுண்டாம்; வளமாவது ஸம்பத்து; ஸம்பத் ஸ்வரூபனை யென்றபடி. **ஆதனூர்** = ஆ தன் ஊர்—காமதேநுவுக்குப் ப்ரத்யக்ஷமான தலமாதல்பற்றி வந்த திருநாமமென்பர்; ஆ—பசு.

**ஆண்டு அளக்கும்ஐயனை** = ஆண்டு—வருஷம்; இது காலத்துக்கெல்லாம் உபலக்ஷணம்; ஸகல காலங்களையும் பரிச்சேதித்த ஸ்வாமி என்றபடி. காலசக்ரநிர்வாஹகனென்கை. **நென்னல்**—நேற்றுக் கழிந்தநாள்; இறந்த காலத்துக்கெல்லாம் உபலக்ஷணம். "ஆண்டளக்குமையன்" என்றதை விவரிக்கின்றார் மூன்று விசேஷணங்களாலே. பூத வர்த்தமாந பவிஷ்யத் காலங்களுக்கு நிர்வாஹகனென்றவாறு.

**நீர்மலை** = நீரானது அரண் போலச் சூழப்பெற்ற மலையானது பற்றித் திருநீர்மலை யெனப்படும். **புல்லாணி** = புல்லணை யென்பதன் மரூஉ; ஸீதையைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கொல்லும் பொருட்டு ஸ்ரீராமபிரான் வாநரஸேனையுடனே புறப்பட்டுச் சென்று தென்கடற்கரையை யடைந்து கடல்கடக்க உபாயஞ் சொல்லவேண்டுமென்று அக்கடலரசனான வருணனைப் பிரார்த்தித்துத் தர்ப்பத்தில் பிராயோபவேசமாகக் கிடந்த ஸ்தலமாதலால் புல்லணை யெனப்பட்டது. தர்ப்பசயந க்ஷேத்ரமெனவும் படும்.

**தலைச்சங்க நாண்மதியை**—சிறந்த சங்கத்தை யேந்திய நாண்மதியப் பெருமானையுடைய தலமாதல்பற்றித் தலைச்சங்க நாண்மதியமென்று திவ்யதேசத்தின் திருநாமம்.

**கன்னவில் தோள்காளையை** = கீழே "இது விளைத்த மன்னன்" என்று தொடங்கி இவ்வளவும் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைப்பற்றிப் பேசினாராயிற்று. கீழே இரண்டாம் வேற்றுமையாக வந்த அடைமொழிகளெல்லாம் இங்கு அந்வயித்து முடிந்தன. இப்படிப்பட்ட எம்பெருமானை ஆங்காங்குச் சென்று ஸேவித்து "ஸ்வாமிந்! இப்படி தானா என்னைக் கைவிடுவது? விரஹம் தின்றவுடம்பைப்பாரீர்" என்று என் அவஸ்தையை விண்ணப்பஞ் செய்வேன்; அதுகேட்டுத் திருவுள்ள மிரங்கித் திருமார்போடே என்னை அணைத்துக் கொள்ளாவிடில் மாதர்களும் வைதிகர்களும் பக்தர்களும் அரசர்களும் திரண்டுகிடக்குமிடங்கள்தோறும் புகுந்து அவனது ஸமாசாரங்களை யெல்லாம் பலரறிய விளம்பரப்படுத்துவேனென்றாராயிற்று.—ஆண்டாள் ஆய்ச்சிமார்போன்ற பெண்ணரசிகளும், பெரியாழ்வார் வ்யாஸர் பராசரர்போன்ற வைதிகர்களும்,

இளையபெருமாள் ப்ரஹ்லாதன்போன்ற பக்தர்களும், குலசேகரப் பெருமாள் தொண்டைமான் சக்ரவர்த்திபோன்ற அரசர்களும் இவனுடைய பெருமேன்மைகளைச் சொல்லிக்கொண்டு ப்ரமித்துக்கிடப்பர்களே ; அங்கங்கெல்லாம் நான் சென்று அவனைப்போன்ற நிர்க்குணன் இவ்வுலகில் எங்குமில்லை" என்று பறையடித்து எல்லாரும் அவனைக் கைவிடும்படி பண்ணிவிடுகிறேன் பாருங்களென்கிறார்.

"லோகமடங்கத் திரண்டவிடங்களிலே சென்று 'ஸேச்வரம் ஜகத்து' என்று ப்ரமித்திருக்கிறவர்களை 'நிரீச்வரம் ஜகத்து' என்றிருக்கும்படி பண்ணுகிறேன்" என்ற வியாக்கியான ஸூக்தியுங் காண்க. ... ... ... ... ... *

... ... ... தான்முனநாள்
மின்னிடை யாய்ச்சியர்தம் சேரிக் களவின்கண்
துன்னு படல்திறந்து புக்குத் தயிர்வெண்ணெய்
தன்வயி றார விழுங்கக் கொழுங்கயல்கண்
மன்னு மடவோர்கள் பற்றியோர் வான்கயிற்றால்
பின்னு முரலோடு கட்டுண்ட பெற்றிமையும்

| | |
|---|---|
| முனம் நாள் | முற்காலத்தில் [கிருஷ்ணவதாரத்தில்] |
| மின் இடை ஆச்சியர்தம் சேரி | மின்போல் நுண்ணிய இடையையுடைய இடைச்சிகளின் சேரியிலே |
| துன்னு படல் திறந்து | நெருக்கமாகக் கட்டிவைத்த படலைத்திறந்து |
| களவின்கண் புக்கு | திருட்டுத்தனமாகப் புகுந்து |
| தயிர் வெண்ணெய் | தயிரையும் வெண்ணெயையும் |
| தன் வயிறு ஆர தான் விழுங்க | தனது வயிறு நிறையும்படி வாரி யமுதுசெய்த வளவில் |
| கொழு கயல் கண் மன்னு மடவோர்கள் | நல்ல கயல்மீன் போன்ற கண்களையுடைய அவ்வாயர்மாதர் |
| பற்றி | பிடித்துக்கொண்டு |
| ஓர் வான் கயிற்றால் | ஒரு குறுங்கயிற்றால் |
| உரலோடு | உரலோடே பிணைத்து(க் கட்டிவிட) |
| கட்டுண்ட பெற்றிமையும் | (கட்டை யவிழ்த்துக் கொள்ளமாட்டாமல்) கட்டுண்டு கிடந்ததன்மையென்ன. |

* * *—என்னினைவைத் தலைக்கட்டாவிடில் அவனுடைய ஸமாசாரங்களையெல்லாம் தெருவிலே எடுத்து விடுகிறேனென்று கீழ்ப் பிரதிஜ்ஞை பண்ணினபடியே சிலஸமாசாரங்களை யெடுத்து விடத் தொடங்குகிறாள் பரகாலநாயகி.—"கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியுமாகப்பெற்றான், பற்றியுரலிடை யாப்புமுண்டான் பாவிகாளுங்களுக்கு ஏச்சுக்கொலோ? கற்றன பேசி வசவுணாதே" என்று—எம்பெருமானுடைய சரிதைகளை இழிவாகக் கூறி ஏசுமவர்களை வாய்புடைக்கவேண்டிய இவ்வாழ்வார் தாமே ஏசத்தொடங்குவது ப்ரணயரோஷத்தின் பரம காஷ்டையாகும். "ஏசியே யாயினும் ஈன்துழாய் மாயனையே பேசியே போக்காய் பிழை" என்பாருமுண்டே. குணகீர்த்தனங்களில் இதுவும் ஒரு ப்ரகாரமேயாகும். இவ்வாழ்வார்தாமே பெரியதிருமொழியில் பதினொராம்பத்தில் மானமருமென்னோக்கி என்னும் திருமொழியில், இரண்டு பிராட்டிகளின் தன்மையை ஏககாலத்தில் அடைந்து முன்னடிகளால் இகழ்ந்துரைப்பதும் பின்னடிகளால் புகழ்ந்துரைப்பதுமாக அநுபவித்ததும் அறியத்தக்கது.

[தான்முனநாள் இத்யாதி.] இடைச்சிகளின் சேரியில் பிரவேசித்து, படல்மூடியிருந்த மனைகளிலே திருட்டுத்தனமாகப் படலைத் திறந்துகொண்டு புகுந்து தயிரையும் வெண்ணெயையும் வயிறு நிறைய விழுங்கினவளவிலே அவ்வாயர்மாதர் கண்டு பிடித்துக் கொண்டு உரலோடே இணைத்துக் கயிற்றாலே கட்டிப்போட்டு வைக்க ஒன்றுஞ் செய்யமாட்டாமல் அழுது ஏங்கிக்கிடந்தானே, இது என்றைக்கோ நடந்த காரியமென்று நான் விட்டுவிடுவேனோ? இவ்விழிதொழிலை இன்று எல்லாருமறிந்து 'கள்ளப்பையலோ இவன்' என்று அவமதிக்கும்படி செய்துவிடுகிறேன் பாருங்கள்—என்கிறாள். பெற்றிமையும், தேற்றேனவும், சென்றதுவும் என்கிற இவையெல்லாம் மேலே "மற்றிவைதான் உன்னி யுலவா" என்றவிடத்தில் அந்வயித்து முடிவுபெறும். இப்படிப்பட்ட இவனுடைய இழிதொழில்கள் சொல்லி முடிக்கப் போகாதவை என்றவாறு.

"தன் வயிறார" என்றவிடத்து "திருமங்கையாழ்வாரைப் போலே பாரார்த்தமாகக் களவு காண்கிறதன்று" என்ற பெரிய வாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி காண்க.

**வான்கயிறு** என்றது எதிர்மறையிலக்கணையினால் குறுங்கயிறு என்று பொருள்படும்; * கண்ணிநுண் சிறுத்தாம்பினாலிறே கட்டுண்டது. ... ... ... ... ... ...

**அன்னதோர் பூதமா யாயர் விழவின்கண்**
**துன்னு சகடத்தால் புக்கபெருஞ்சோற்றை**
**முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும்.**

| | | | |
|---|---|---|---|
| ஆயர் விழவின் கண் | இடையர்கள் (இந்திரனுக்குச்செய்த) ஆராதனையில் | முன் இருந்து | கண் முன்னேயிருந்துகொண்டு |
| துன்னு சகடத்தால் புக்க பெரு சோற்றை | பலபல வண்டிகளால் கொண்டு சேர்த்த பெருஞ் சோற்றை | முற்ற | துளிகூட மிச்சமாகாதபடி |
| | | தான் | தானொருவனாகவே |
| அன்னது ஓர் பூதம் ஆய் | வருணிக்க முடியாததொரு பெரும் பூதவடிவு கொண்டு | துற்றிய | உட்கொண்ட |
| | | தெற்றெனவும் | வெட்கக்கேடென்ன. |

* * *—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி வழக்கப்படி இந்திரனை ஆராதிப்பதற்கென்று சமைத்துப் பல வண்டிகளிற் கொணர்ந்து பெருந்திரளாகக் குவித்த சோற்றை ஒருகால் கண்ணபிரான் அவனுக்கு இடவொட்டாமல் விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச் சொல்லித் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அமுதுசெய்தருளினான் என்பது கதை. "ஆயிரங் கண்ணுடையிந்திரனுக்கென்று ஆயர்விழவெடுப்பப், பாசன நல்லன பண்டிகளாற் புகப்பெய்தவதனை யெல்லாம், போயிருந்தங்கொரு பூதவடிவுகொண்டு உன் மகனின்று நங்காய், மாயனதனை யெல்லாம் முற்றும் வாரிவளைத்துண்டிருந்தான்போலும்" (பெரிய திருமொழி 10—7—7.) என்ற பாசுரங்காண்க. "அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமுந் தயிர் வாவியும் நெய்யளறு மடங்கப் பொட்டத் துற்று" என்றார் பெரியாழ்வாரும்.

**துன்னு சகடத்தால்புக்க** = சிலர் தலைமேலே சுமந்துகொண்டு போய்க் கொட்டின சோறன்று; பல்லாயிரம் வண்டிகளில் ஏற்றிக் கொண்டுபோய்ப் பெரிய மலைபோலே கொட்டிவைத்த பெருஞ்

சோறு; இவற்றையெல்லாம் ஒரு திரை வளைத்துக்கொண்டாவது உண்டானோ? இல்லை; முன்னிருந்து உண்டான்; அதிலே சிறிது சோறு மிச்சமாம்படி உண்டானோ? இல்லை; முற்றத்துற்றினான்; உற்றாருறவினர்க்கும் சிறிது கொடுத்து உண்டானோ? அதுவுமில்லை; முற்றவும் தானே துற்றினான்; இப்படி வயிறுதாரித்தனம் விளங்கச் செய்த செயலுக்குச் சிறிது வெட்கமாவது பட்டானோ? அதுவுமில்லை; இப்படிப்பட்ட வெட்கக்கேடான செய்தியைத் தெருவேறச் சொல்லிக்கொண்டுபோய் "வயிறுதாரிப் பையலோ இவன்!" என்று எல்லாரும் அவமதிக்கும்படி செய்துவிடுகிறேன் பாருங்கள்—என்கிறாள்.

பூதம், சகடம்—வடசொற்கள் தேற்றேனவு=தெளிவு; அதாவது வெட்கமில்லாமையென்று இங்கே விவக்ஷிதம். ... *

மன்னர் பெருஞ்சவையுள் வாழ்வேந்தர் தூதனாய்
தன்னை யிகழ்ந்துரைப்பத் தான்முனநாள் சென்றதுவும்.

| | | | |
|---|---|---|---|
| முனம் நாள் | முன்னொரு காலத்தில் | மன்னர் பெரு சவையுள் சென்றதுவும் | (துரியோதநாதி) அரசர்களுடைய பெரிய ஸபையிலே சென்றதென்ன. |
| வாழ் வேந்தர் தூதன் ஆய் | பாண்டவர்களுக்குத் தூதனாய் | | |
| தன்னை இகழ்ந்து உரைப்ப | (கண்டாரடங்கலும்) இழிவாகச் சொல்லும்படியாக | | |

* * *—கண்ணபிரான், பாண்டவர்களையும் துர்யோதநாதிகளையும் ஸந்தி செய்விக்கைக்காகத் துரியோதநாதியரிடம் தூது சென்ற வரலாறு ப்ரஸித்தமேயாம். "கோதைவேல் ஐவர்க்காய் மண்ணகலங் கூறிடுவான், தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான்" என்கிற இவ்விழிதொழிலை நாடறியச்சொல்லி 'ஒரு வேலைக்காரப் பையலோ இவன்' என்று எல்லாரும் அவமதிக்கும்படி செய்துவிடுகிறேன் பாருங்கள்—என்கிறாள். ... ... *

மன்னு பறைகறங்க மங்கையர்தம் கண்களிப்ப க்
கொன்னவிலும் கூத்தனாய்ப் பேர்த்தும் குடமாடி
என்னிவ னென்னப் படுகின்ற வீடறவும்

| | | | |
|---|---|---|---|
| மங்கையர் தம் கண் களிப்ப | (இடைப்) பெண்களின கண்களிக்கும்படி | போத்தும் | மேன்மேலும் |
| மன்னு பறை கறங்க | (அரையிலே) கட்டிக்கொண்ட பறை ஒலிக்க | குடம் ஆடி | குடங்களை யெடுத்து ஆடி |
| கொல்நவிலும் கூத்தன் ஆய் | (பெண்களைக்) கொலை செய்கின்ற கூத்தை யாடுபவனாய் | என இவனை எனனப் படுகின்ற ஈட றவும் | "இப்படியும் கூத்தாடுவா னொருவ னுண்டோ!" என்னும்படி பெற்ற சீர்கே டென்ன |

—கண்ணபிரான் அரையிலே பறையைக் கட்டிக்கொண்டு குடக்கூத்தாடுவது சாதிவழக்கத்தை அநுஸரித்த ஒரு காரியம். அந்தணர்க்குச் செல்வம் விஞ்சினால் யாகம் செய்வதுபோல இடையர்க்குச் செல்வம் மிகுந்தால் அதனாலுண்டாகுஞ் செருக்குக்குப் போக்குவீடாகக் குடக்கூத்தாடுவர்கள். கண்ணபிரானும் சாதி மெய்ப்பாட்டுக்காக "குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே" என்றபடி அடிக்கடி குடக்கூத்தாடுவது வழக்கம். தலையிலே அடுக்குக்குடமிருக்க, இரு தோள்களிலும் இரு குடங்களிருக்க, இருகையிலுங் குடங்களை ஏந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து இது என்பர் இதனைப் பதினோராடலி லொன்றென்றும் அறுவகைக் கூத்திலொன்றென்றும் கூறி, "குடத்தாடல் குன்றெடுத்தோனாடலதனுக் கடைக்குப வைந்துறுப் பாய்ந்து" என்று மேற்கோளுங் காட்டினர் சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார்.

இவன் சில பெண்களைப் பிச்சேற்றுவதற்காகக் கூத்தாடின படியைப் பலருமறியப்பேசி, "கூத்தாடிப் பையலோ இவன்!" என்று எல்லாரும் அவமதிக்கும்படி செய்துவிடுகிறேன் பாருங்கள் என்றாளாயிற்று.

ஈடறவு—சீர்கேடு. ஈடு—பெருமை; அஃது இல்லாமை—அற்பத்தனம். வீடறவும் என்று பிரித்து, கூத்தினின்றும் மீளாமை என்று சிலர் சொல்வது ஏலாது. ... ... .. ¥

தென்னிலங்கை யாட்டி யரக்கர் குலப்பாவை
மன்ன னிராவணன்றன் நல்தங்கை வாளெயிற்றுத்
துன்னு சுடுசினத்துச் சூர்ப்பணகாச் சோர்வெய்திப்
பொன்னிறங் கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால்
தன்னை நயந்தானைத் தான்முனிந்து மூக்கரிந்து
மன்னிய திண்ணெனவும்......—

| | |
|---|---|
| தென் இலங்கை யாட்டி | தென்னிலங்கைக்கு அரசியும் |
| அரக்கர் குலம் பாவை | ராக்ஷஸ குலத்தில் தோன்றிய பதுமை போன்றவளும் |
| மன்னன் இராவணன் தன் நல் தங்கை | பிரபுவாகிய இராவணனது அன்புக்குரிய தங்கை யானவளும் |
| வாள் எயிறு | வாள்போன்ற பற்களையுடையளும் |
| துன்னு சுடு சினத்து | எப்போதும் (எதிரிகளைச்) சுடக்கடவதான கோபத்தை யுடையளுமான |
| சூர்ப்பணகா | சூர்ப்பணகை யென்பவள் |
| புலர்ந்து எழுந்த காமத்தால் | அதிகமாக வுண்டான காமநோயினால் |
| பொன் நிறம் கொண்டு | வைவர்ண்ணிய மடைந்து |
| சோர்வு எய்தி | பரவசப்பட்டு [தளர்ந்து] |
| தன்னை நயந்தாளை | தன்னை ஆசைப்பட, அந்த அரக்கியை |
| தான் முனிந்து | தான் சீறி |
| மூக்கு அரிந்து | மூக்கையறுத்து |
| மன்னிய திண்ணெனவும் | இதையே ஒரு ப்ரதிஷ்டையாக நினைத்துக் கொண்டிருப்ப தென்ன. |

* * *—சூர்ப்பணகையை அங்கபங்கஞ்செய்தது இளையபெருமாளாயினும் இதனைப் பெருமாள் செயலாகவே கூறுதலும் உண்டு. "சூர்ப்பணகாவைச் செவியோடு மூக்கு அவளார்க்க அரிந்தானைப் பாடிப்பற அயோத்திக்கரசனைப் பாடிப்பற" என்றார் பெரியாழ்வார்; "மலைபோலுருவத் தொரிராக்கதி மூக்கு அரிந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே" என்றார் இத்திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில். இளையபெருமாளைச் சொல்லுமிடத்து வால்மீகி முனிவர் [ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:] என்றார்; அதாவது—லக்ஷ்மணனை ஸ்ரீராமபிரானது வலக்கையாகக் கூறினார். ஆகையால் சூர்ப்பணகா பங்கத்தைப் பெருமாளது செயலாகக் கூறுவது பொருந்துமென்க. தன் கையாலேயிறே தண்டித்தது.

"ஆவீறையும்" என்ற நன்னூல் விதிப்படி 'சூர்ப்பணகை' எனத் திரியவேண்டியிருக்க அங்ஙனந் திரியாது 'சூர்ப்பணகா' என்று ஆவீறாகவே நின்றது—புதியனபுகுதல் என்னலாம்; "பழையன கழிதலும் புதியனபுகுதலும், வழுவல காலவகையினானே" என்றார் நன்னூலார்.

தன்னை ஆசைப்பட்டு வந்தவளை ஏதோ நல்வார்த்தை சொல்லிப் போகவிடாமல் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனாய் அங்க

பங்கஞ் செய்துவைத்து அனுப்பினவன் காண்மின் என்று தெரு வேறச்சொல்லி "ஸ்த்ரீகளை அநியாயம் பண்ணுகிறவனே இவன்" என்று எல்லாரும் அவமதிக்கும்படி செய்துவிடுகிறேன் பாருங்கள்— என்றுளாயிற்று.

போன்னிறங்கோண்டு = காமநோயுடையார்க்கு உடல் விவர்ணப்படுங்காலத்து அந்த நிறம் பொன்னிறமெனப்படும். "அபிமதம் பெறாமையாலே விவர்ணமான உடம்பையுடையளாய்" என்பது வியாக்கியானம். புலர்ந்தெழுந்த காமத்தால் = புலர்தல் என்பதற்கு, காய்தல் வாடல் விடிதல் என்று பல பொருள்களுண்டு; இங்கு விடிதல் என்று பொருளாய் உதயமாகி வளர்ந்த காமத்தினால் என்றதாம். மன்னிய திண்ணெனவும் = 'ஸ்த்ரீவதம் பண்ணினால் அநுதாபமுமின்றிக்கே பெரிய ஆண்பிள்ளைத்தனம் செய்ததாக நினைத்திருக்கிற நிலைநின்ற த்ருடத்வமும்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. ... ... ... ... ... *

... ... வாய்த்த மலைபோலும்
தன்னிகரொன் றில்லாத தாடகையை மாமுனிக்காத்
தென்னுலக மேற்றுவித்த திண்டிறலும் மற்றிவைதான்
உன்னி யுலவா வுலகறிய வூர்வன்நான்
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த
மன்னியபூம் பெண்ணை மடல்.

பெரிய திருமடல் முற்றிற்று.

| | |
|---|---|
| வாய்த்த மலை போலும் | பெரியமலை போன்ற உருவமுடையளும் |
| தன் நிகர் ஒன்று இல்லாத | (கொடுமையில்) ஒப்பற்றவளுமான |
| தாடகையை | தாடகை யென்பவளை |
| மா முனிக்கா | விச்வாமித்ர முனிவர்க்காக |
| தென உலகம் ஏற்றுவித்த | யமலோக மடைவித்த |
| திண் திறலும் | மிக்க பராக்ரமமென்ன |
| மற்று இவை தான் | இப்படியாகவுள்ள மற்றும் பல செய்கைகளும் |
| உன்னி உலவா | நினைத்து முடிய மாட்டா [வாசாமகோசரம்]; |
| உலகு அறிய | அப்படிப்பட்ட சேஷ்டிதங்களையெல்லாம் உலகத்தாரறியும்படி பிரசுரப்படுத்திக்கொண்டு |
| நான் | பரகாலநாயகியாகிய நான் |
| முன்னி முளைத்து எழுந்து ஓங்கி ஒளி பரந்த மன்னிய பூ பெண்ணை மடல் ஊர்வன் | முன்னே முளைத்து எழுந்து வளர்ந்து விளங்குகின்ற சிறந்த அழகிய பனைமடலைக் கொண்டு மடலூரக்கடவேன். |

* * *—தாடகை—ஸுகேது வென்னும் யக்ஷனுடைய மகள்; ஸுந்தனென்பவனுடைய மனைவி; ஆயிரம் யானை வலிமைகொண்டவள்; கணவன் அகஸ்த்ய மஹாமுனியின் கோபாக்நிக்கு இலக்காகி நீறுயொழிந்ததையறிந்த இவள் தன் புத்திரர்களாகிய ஸுபாஹு மாரீசர்களுடனே அம்முனிவனை எதிர்த்துச் சென்றபொழுது அவனிட்ட சாபத்தால் தன் மக்களோடு ராக்ஷஸத் தன்மையடைந்தனள். பின்பு முனிவர்களுடைய யாகாதிகளைக் கெடுக்கின்ற இவர்களையழித்துத் தன் வேள்வியைக் காக்கும் பொருட்டு விச்வாமித்ர முனிவன் தசரத சக்ரவர்த்தியினிடம் அநுமதி பெற்று இளம்பிராயமுடைய ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு போனபொழுது அம்முனிவனது ஆச்ரமத்துக்குச் செல்லும் வழியிடையே வந்து எதிர்த்த தாடகையை ஸ்ரீராமன் முனிவனது கட்டளைப்படி பெண்ணென்று பாராமற் போர்செய்து கொன்றனன் என்ற வரலாறு அறிக

சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்து உயிரோடாவது விட்டிட்டான்; தாடகையை உயிர்க்கொலையே செய்துவிட்டான்; இப்படி ஸ்த்ரீஹத்தி பண்ணுவதே இவனுடைய பராக்ரமத்துக்குப் போக்குவீடு; பெண்களைக் கொலைசெய்து தன்னை மஹாபலசாலியாக நினைத்துச் செருக்குற்றிருக்கு மிவனுடைய இந்த அழகான பராக்ரமத்தை நாடறியச்சொல்லி "இதுவோ இவனுடைய ஸமாசாரம்!" என்று எல்லாரும் இழிவாக நினைக்கும்படி பண்ணிவிடுகிறேன் பாருங்கள்—என்றுளாயிற்று

திண்திறலும்—ஒரு பெண்பெண்டாட்டியைக் கொலைசெய்து விடுவது ஒரு பராக்ரமமோ! என்று ஏசுகின்றவாறு.

மற்றிவைதான் உன்னி உலவா—ஸ்ரீராமாயணம், ஸ்ரீபாகவதம், மஹாபாரதம் முதலியவற்றில் இப்படிப்பட்ட இழிதொழில்கள் எவ்வளவோ சொல்லப்பட்டுள்ளன; அவற்றுக்குக் கங்குகரையில்லை; அவை என்னால் சொல்லிமுடிக்கப் போகாதவை. முடிந்தவரையில் சிலவற்றையெடுத்துச் சொல்லிக்கொண்டு தெருவேற மடலூர்ந்து செல்வேன் என்று தலைக்கட்டினளாயிற்று

பெண்ணை என்று பனைமரத்துக்குப் பெயர்; "முன்னிமுளைத்தெழுந்தோங்கி யொளிபரந்தமன்னியபூம் பெண்ணை மடல்" என்று

பனைமடலைச் சிறப்பித்துச் சொன்னது—என் கையிலே சிறந்த ப்ரஹ்மாஸ்த்ர மிருக்கிறபடி பாருங்கள்; இனி எனக்கு என்ன குறை? என் காரியம் கைபுகுந்ததேயாம் என்று தான் பரிக்ரஹித்த ஸாதநத்தின் உறைப்பைக் காட்டினபடி. ... ... *

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

முடிவில் அநுஸந்திக்கும் தனிப்பாடல்.

## கம்பர் பாடியது.

நேரிசை வெண்பா.

என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான்
தன்னருளு மாகமுந் தாரானேல்—பின்னைப்போய்
ஒண்டுறை நீர்வேலை யுலகறிய வூர்வன்நான்
வண்டறைபூம் பெண்ணை மடல்.

(இதன் கருத்து.) எம்பெருமானிடத்தில் போய் என்னுடைய அவஸ்தைகளை யெல்லாம் அறிவித்த பின்பும் அவன் திருவுள்ள மிரங்கித் திருமார்போடே அணைத்துக் கொள்ளாவிடில், கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்திலுள்ளாரனைவரும் அறியும்படியாக அழகிய பனைமட்டையைக் கையிற்கொண்டு மடலூரக் கடவே னென்று பரகாலநாயகி சொல்லுகிற பாவனையாகவே இப்பாடல் பாடப்பட்டதென்க.

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
பெரிய திருமடல் திவ்யார்த்த தீபிகை
முற்றுப் பெற்றது.